பக்கங்கள்: இருபது+IV=24

உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 13 ஞாயிற்றுக்கிழமை (29.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 003

29 NOV 2009

ஜனாதிபதி தேர்தலுக்கு இம்முறை சர்வதேச கண்காணிப்பாளர்கள்

தேர்தல் ஆணையாளர் ஐ.தே.முவிடம் உறுதி

கொழும்பு, நவம்பர் 29

ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் ஐ.நா. சபையைச் சேர்ந்தவர்கள் உட்பட சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தம்மைச் சந்தித்துப் பேசிய ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களிடம் உறுதி அளித்திருக்கின்றார். (20ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் அரச சார்புப் பிரசாரத்துக்கு அமைச்சர் கருணாவும்

கொழும்பு, நவ.29

ஜனாதிபதி தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் அரசு சார்புப் பிரசாரத்தை சுதந்திரக் கட்சியின் உபதலைவரும் அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) முன்னெடுக்கவிருக்கிறார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

பிரபாகரன், பொட்டுஅம்மான் மரணச் சான்றிதழ்களை இலங்கை அரசு இன்னமும் இந்தியாவிடம் சமர்ப்பிக்கவில்லை

தடா நீதிமன்றத்தில் தகவல்

சென்னை, நவ.29

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், புலனாய்வுத்துறைத் தலைவர் பொட்டு அம்மான் (சண்முகலிங்கம் சிவசங்கரன்) ஆகியோரின் மரணம் தொடர்பாக உத்தியோகபூர்வமாக தடா நீதிமன்றத்துக்கு இன்னமும் இலங்கை அறிவிக்கவில்லை. ஆறு மாதம் கடந்தும் அவர்களின் மரணம் தொடர்பான சான்றிதழ்களும் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.

சென்னை கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

வழக்கின் முக்கியத்துவம் கருதி நீதிபதியின் அறையில் இந்த வழக்கின் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பிரபாகரன், பொட்டு அம்மான் மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதித் தேர்தல்: யாரை ஆதரிப்பது என்று முடிவு எதுவும் இதுவரை இல்லை; ஆழமாக ஆராய்கிறோம்

மாவை சேனாதிராஜா சொல்கிறார்

யாழ்ப்பாணம், நவ.29

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக தமிழர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாகவோ தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பாகவோ இதுவரை எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை. அது தொடர்பாக ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து வருகிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக உதயனுக்கு மேலும் (20ஆம் பக்கம் பார்க்க)

கனடா-ரொறன்ரோவில் பௌத்த விகாரைக்குத் தீ!

ரொறன்ரோ, நவ. 29

கனடா ரொறன்ரோ மாநிலத்தில் கிங்ஸ்ரன் வீதியில் அமைந்துள்ள மகா விகாரை என்ற பௌத்த ஆலயம் மீது கடந்த வியாழக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலையிட்டு கனடாவிடம் (20ஆம் பக்கம் பார்க்க)

த.ம.வி. புலிகள் கட்சி மஹிந்தவுக்காக தேர்தல் பிரசாரம் செய்யாது !

கொழும்பு, நவ.29

ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு கோரி பிரசாரம் செய்ய மாட்டாது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அறிவித்துள்ளது.

இந்த முடிவைத் தமது கட்சி எடுத்துள்ளது என்று அக்கட்சியின் தலைவரும் (20ஆம் பக்கம் பார்க்க)

புதிய ஜனாதிபதி யார் என்பதை சிறுபான்மை மக்களின் வாக்குகளே நிர்ணயிக்கப்போகின்றன

எஸ்.பி. திஸாநாயக்கா சுட்டிக்காட்டு

கொழும்பு,நவ.29

சிறுபான்மை மக்களிடம் பிரபல்யம் இல்லாத, அவர்களின் அபிலாசைகளாக இல்லாத இருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிவதால், சிறுபான்மை மக்கள் அளிக்கப்போகும் வாக்குகளே புதிய ஜனாதிபதி யார் என்பதை நிர்ணயிக்கப் போகின்றன.

ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திசநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

சரத் பொன்சேகா தமது அரசியல் திட்டங்களை இன்று ஊடகவியலாளரிடம் வெளியிடுவார்

தமிழர் பிரச்சினைக்கான தீர்வு முறையும் அதில் அடங்கும்

கொழும்பு,நவ.29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளராகப் போட்டியிட உள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இன்று தனது அரசியல் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை அறிவிக்கவுள்ளார்.

ஹில்ரன் ஹோட்டலின் கிளையாக கொம்பனித் தெருவில் இயங்கும் விருந்தினர் விடுதியில் இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ள ஊடகவியலாளர் மாநாட்டில் தமது அரசியல் கொள்கைத் திட்டங்களை அவர் வெளியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைக்க இந்தியா தேவையான உதவிகளை வழங்கும்

யாழ். வந்த தூதுவர் மக்கள் குழுவிடம்தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

காங்கேசன்துறை துறைமுகத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு இந்தியா உதவி வழங்கவுள்ளதாக கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் தெரிவித்தார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளை யாழ்.ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்தியத்தூதுவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்.குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த காங்கேசன்துறை துறைமுகத்தைப் புனரமைப்பதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது. இதற்கான உதவியை இந்தியா விரைவில் வழங்கும்.

யாழ்.குடாநாட்டில் உள்ள ஏனைய தொழிற்சாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் அவற்றுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் இந்தியா உதவிகளை வழங்கவுள்ளது என்றும் அவர் இந்தச் சந்திப்பின் போது கூறினார்.

13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் பல குறைநிறைகள் உள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் காலத்திலாவது தங்களை விடுவிக்குமாறு மகஸின் தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள்

கொழும்பு, நவ.29

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க, ஜனநாயக ரீதியில் எமக்கு பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை தந்து நாம் சமூக வாழ்வியலோடு இணைவதற்கு சந்தர்ப்பம் தாருங்கள்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் மகஸின் சிறைச்சாலையின் மிக நீண்ட காலமாக அரசியல் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள தமிழர்கள்.

இது தொடர்பாக அவர்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்துள்ள நீண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் தேர்தல்கள் நடை பெறும் போது தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் பெரிதாக பேசப்படும்.

பின்னர் கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல் இறுதியில் முடிந்துவிடும்.

கைதிகள் ஆகிய நாமும் விடுதலை கிடைக்குமென்று பார்த்து ஏமாறுவது வழமை. (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விற்பனைக்கு

ORIENDAL AQUIRAUM
(MULTY FARM)

சகல வர்ண ஒட்டு றோசாக்கள் (Baby Rose, Spray Rose), சைப்பிரஸ், ஐந்தூரியம், மொசன்டாஸ், கிருசாந்திமம், யூகோப்பியா, டெயிலியா, கல்வியா, பலவர்ண ஒட்டுச் செவ்வரத்தைகள், விசிறிவாழை, ஈரப்பலா, பாபன்டேசியா, மா, பலா, தேசி, யம்பு, குறோட்டன், கமுகு, அலமன்டா மற்றும் பல வர்ணமரங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு

தொ. பே: 0775397035
021 7912997

தொடர்புகளுக்கு :மல்லியம்
61, இராமநாதன் வீதி,
(நாச்சிமார் கோவில் முன்பாக) யாழ்ப்பாணம்.

(சி/562794)

மரண அறிவித்தல்கள்

திருமதி

புவனேஸ்வரியம்மா கெங்காதரன்

துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரியம்மா கெங்காதரன் 25.11.2009 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஐயாத்துரை (அமரர்)-இரத்தினம் தம்பதிகளின் மூத்த மகளும் கொங்காதரனின் அன்பு மனைவியும் லுஜிந்தன், ரதி, விஜிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), யோகேஸ்வரி, பத்மாவதி (இத்தாலி), கோபாலரட்ணம் (அமரர்) ஆகியோரின் சகோதரியும் இராசதுரை சின்னாம்பாள் (அமரர்) - பத்மாவதியின் மருமகளும் ரகுராதா, ரமணி, சசிகலா, ஜெயகலா, பரமேஸ்வரி, சந்தனகோபால், கமலேஸ்வரி, சிவபாலன், சுகுகுமார் ஆகியோரின் மைத்துனியும் தவராசா (லச்சு), நிர்மலாதேவி, ஜெகதீஸ்வரன் (ஜெயம்), சிறீஸ்குமார், பவா-நேசராணி ஆகியோரின் சகோதரியும் பஜிதரன், சுதர்சன், வினோதா, தர்சன், கனிதா, ஆர்த்தி, ஆஷா ஆகியோரின் பெரியதாயாரும் கிருஷா, தினேஷ், தர்ஷா, ரமேஷ், சுரேஷ், ஜெனித்தா, ஜெனி சாந்தன், ஜெனோதா, ஜெனார்த்தனன், ஜெயகீர்த்தன், ஜெயதீபன், மதுசா, கபில்ராஜ், கானுசா ஆகியோரின் அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/562793)

சுப்பிரமணியம் ஆறுமுகராஜா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சுப்பிரமணியம் ஆறுமுகராஜா 27.11.2009 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாக்கியத்தின் அன்புக் கணவரும் Dr. இராமச்சந்திரன், பாலச்சந்திரன் (ஆசிரியர், புத்தளம் இந்து மத்திய கல்லூரி), ஞானேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் உமையாள், அருளினி (N.S.B, புத்தளம்), குலதீபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ஷனி, அபிநயன், அபர்ணா ஆகியோ ரின் அன்புப் பாட்டனாரும் காலஞ்சென்ற சிற்றம்பலம், காலஞ் சென்ற பொன்னம்பலம், சண்முகராஜா (நல்லூர்), கமலம் கனகரத்தினம் (USA), திருச்செல்வம் (கொழும்பு), காலஞ்சென்ற Dr.திருவருள், நவரத்தினராஜா (அவுஸ்திரேலியா), செல்வராஜா (கொழும்பு), காருண்யதேவி பாலேந்திரா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் புத்தளம் தில்லையடி பொதுமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே: 0322267374

தகவல் :
குடும்பத்தினர்.

(சி/562562)

அழகியல் போட்டி : சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவால் இவ்வாண்டு நடத்தப்பட்ட கோட்ட வலயமட்ட அழகியல் போட்டி, அழகியல் கண்காட்சி என்பவற்றில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வுக்கு அதிபர்கள், அழகியல் பாட ஆசிரியர்கள், வெற்றி பெற்ற மாணவர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-16)

தேவை

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் உடன் தேவை: வயது 18-30 விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :

Annai Nagaa Food City
178, Central Road,
Colombo - 12.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 0112391257
Fax : 0114716156

(சி/562792)

ராஜ் திருமண சேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், கேட்டை, 35 வயது, 4 இல் செவ்வாய் (நட்பு), அரசபணியிலுள்ள மணமகனுக்கு அரசபணியிலுள்ள மணமகள் தேவை: 158/3 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0213735980, 0774745647

விற்பனை

சேர்.பொன் இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள நாதன் புடைவையகமும் அழகு மாடமும் என்ற வியாபார நிறுவனம் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நாதன் புடைவையகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தி.
தொ.பே: 0774151947

இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழி மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(சுத்தம் செய்தல் இலவசம்)
A.S.S. பாம் , தியேட்டர் வீதி, இணுவில்.

மரண அறிவித்தல்

வைரமுத்து பாலசிங்கம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து பாலசிங்கம் நேற்று (28.11.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கெங்காதேவியின் அன்புக் கணவரும் கோமதி, சுமதி, சுகிமதி, சுகிதரன், அரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோய், பாபு, சங்கர், நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் மேற்கு,
கட்டுடை.

மரண அறிவித்தல்கள்

திருமதி தியாகராசா பொன்னம்மா (மூமணி)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா பொன்னம்மா நேற்று (28.11.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும் பரமலிங்கம் (முன்னாள் கி.ச.உறுப்பினர், உடுவில்), அருட்பிரகாச பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்), ஞானப்பிரகாசம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலட்சுமி,ரேணுகாதேவி,பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், மதியழகன் குமாரநந்தினி (ஜேர்மனி), ஸ்ரீமதி, (வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்), திருமதி வீரசக்தி ரூபன் இன்பமதி (ஆசிரியை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), கணேஸ் -கீதா (ஜனசக்தி இன்சூரன்ஸ்), பரங்குன்றன் கார்த்திகா (நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனியா),ஜெயகிருஷ்ணா (Stock Controlar), ஜோழினி (சட்டத்தரணி, அவுஸ்திரேலியா), கஜானன் (அவுஸ்திரேலியா), கஜந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் சகாயன், பிரவீன், ஜதுசன், ஜோசிக்கா,கஜாகரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(29.11.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இணுவில் தெற்கு, இணுவில்.
நி. பாலலிங்கம் (முன்னாள் நி.ச.உ),
நி.அதிபர்பாகசாலிங்கம் (முன்னாள் அதிபர்,பார்/சேதி வேம்படி),
நி.ஞானப்பிரகாசம் (அவுஸ்திரேலியா)

(92638)

வேலாயுதர் கோவிந்தபிள்ளை

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், சில்லாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் கோவிந்தபிள்ளை நேற்று (28.11.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், துரைராசா - ஜெயலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் ஆச்சிப் பிள்ளை,கெங்காமணி, இரத்தினம் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நாகரத்தினம் மாவின் அன்புக்கணவரும், பாலமுரளி (தபால் ஊழியர், சுழிபுரம்), பிரியதர்சினி, நாராயணதாசன் (சிறிராம் நகை மாடம்), ஸ்ரீமுருகானந்தம், பிரியதர்சன் (யாழ்.பல்கலைக் கழகம், இறுதி வருடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தினி (ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), சாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலாஜினி யின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலைமேற்கு,
பண்டத்தரிப்பு.
தொ. பே : 077 9295674
021 3211299 (சி/562799)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

திருமதி ரூபவதி இராசையா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் தற்போது இல. 1238, பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய திருமதி ரூபவதி இராசையா நேற்று (28.11.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் பராசக்தி விக்கினேஸ்வரன் (விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்), கோமளாதேவி, பவானந்தவதி (பிரான்ஸ்), இரத்தினசிங்கம் (விநாயகர் ஸ்ரோர்ஸ்), ஆகியோரின் பாசமிகுதாயாரும் நடேசபிள்ளை, கனகேஸ்வரி, கந்தையா, இராசரத்தினம் (பிரான்ஸ்), சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் (மாவிட்டபுரம்) பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்வம், வல்லிபுரம் இரத்தினம், சிவராமலிங்கம் மற்றும் தங்கம்மா ஆகியோரின் மைத்துனியும் உதயகுமாரன், அஜந்தா, சசிக்குமார், நிஷாந்தினி (பிரான்ஸ்), கஜேந்திரகுமார் சுதா,கேதீஸ்வரன் கவிதா(பிரான்ஸ்), திருமாறன் தனுசியா (பிரான்ஸ்), திருக்குமார் மதிவதனி, கல்பனா, உதயன் அனுஷியா(பிரான்ஸ்), கஜீபன், வடிவாசன் குகாநந்தி (பிரான்ஸ்), கோபிநாத் (பிரான்ஸ்), சதானி(பிரான்ஸ்), தர்சியா, துஷாந், தாரணியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1238 , பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2226602

தகவல் :
இ.விக்கினேஸ்வரன்,
இ.இரத்தினசிங்கம் (மகன்மார்).

(92639)

ICE LAND ஐஸ் தொழிற்சாலை

நேற்றைய தினம் மதிப்புக்குரிய அரசாங்க அதிபர் க. கணேஷ் அவர்களால் மங்களகரமாகத் திறந்து வைக்கப்பட்டது. பெருந்தொகையில் (1தொன்) நாளாந்தம் வேண்டியவர்கள் முற்பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்களும் முந்திக் கொள்ளவும்.ஒரு தொன்னுக்கு அதிகமாக பெறுபவர்களுக்கு போக்குவரத்து வசதி இலவசம்.

ஒரு நாளைக்கான உற்பத்தி இயலுமை 18 தொன்
114, மவுண்ட் கார்மேல் வீதி, (பிரதான வீதி மடத்துவக்காந்திக்கு அண்மையில்) யாழ்ப்பாணம்.

எங்களின் கூப்பிடு தூரம் 021-3734600
வாடிக்கையாளர் கவனச்சேவை - 0777592040
மின்அஞ்சல் - icejaffna@sltnet.lk

(92636)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி ஆசிரியர்களை அவசரமாகக் கடமைக்கு அனுப்பதை நிதானித்துச் செய்தால் என்ன.....?

- ஒளண்யன் -

தீவுகள் தோசை சுடுவதில் எமது அரச அதிகாரிகளுக்கு நிகரானவர்கள் வேறு எவரும் இல்லை என்பதை நிரூபிப்பது போல 'வன்னியில் கடமையாற்றிய ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச பணியாளர்கள் தமது பணிக்கு உடனடியாகத் திரும்ப வேண்டும்.' என்ற அறிவிப்பு வெளிவந்திருக்கின்றது. சில வேளைகளில் வன்னியில் கடமையாற்றிய ஆசிரியர்கள் இவ்வாறு பணிக்குத்திரும்பப் பின்னடிக்கக்கூடும் என்ற எண்ணத்தில் வன்னியில் கடமையாற்றும் பாடசாலைகளில் வைத்தே சம்பளப்பட்டியலில் அவர்கள் கையொப்பமிடவேண்டும் என்றும் ஒரு மறைமுக அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் இத்தகைய அவசரம் நிறைந்த அறிவிப்பு யதார்த்தத்திற்கு உகந்ததாக இருக்குமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

யுத்தத்தால் முற்றுமுழுதாகச் சிதைவடைந்துபோன பகுதியாக வன்னிப் பகுதி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனவே வன்னிப்பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்பும் பணிகள் தீவிரத்தன்மையோடு முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. நாட்டின் அபிவிருத்திக்கும் மக்களின் சுபீட்சமான வாழ்வினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் வன்னிப் பகுதியில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகள் முக்கியமானவைதான். ஆயினும் அபிவிருத்திப் பணிகள் தமது பூரணத்துவத்தை எட்டுவதற்கு முன்னரே தம்முடைய அரச விசுவாசத்தை நிரூபித்துக் கொள்வதற்காக சில அவசரக்குடுக்கைத் தனமான காரியங்களையும் எமது அரச அதிகாரிகள் இப்போதே செய்யத் தொடங்கிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக நிலவுகிறது. ஆயினும் காரியங்களை நடைமுறைப் படுத்துவதில் உள்ள யதார்த்தச் சிக்கல்களை அவர்கள் சிறிதளவேனும் புரிந்துகொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர்.

வன்னிமீதான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து- ஏறக்குறைய ஒன்றரை வருடங்களாக- இடம்பெயர்வை மட்டுமே தம்முடைய நிரந்தர வாழ்வியல் அம்சமாகக் கொண்டவர்களில் வன்னிப் பகுதியில் கடமையாற்றிய அரச அலுவலர்கள் அனைவரும் உள்ளடங்குவர். இடம்பெயர்வதோடு மட்டும் நின்று விடாது தற்காலிகமாகத் தங்கியிருக்கும் இடங்களில் கூட தம்முடைய சேவையை மனங்கோணாது வழங்கியிருந்தனர் என்பது வெளிப்படையான உண்மை. வன்னியால் வந்தவர்களின் வாக்குமூலங்களின்படி இறுதி யுத்தத்தின் கடைசி 3 மாதங்கள் மாத்திரமே வன்னியில் கல்விச் செயற்பாடுகள் நடைபெறவில்லை. எனினும் இறுதிவரைக்கும் ஏனைய அரச அலுவல்கள் இடம்பெறவே செய்தன. உயிருக்கு உத்தரவாதமற்ற மிக இக்கட்டான சூழ்நிலை வந்தபோதிலும் கூட தமது மக்கள் பணியை அவர்கள் தொடர்ந்ததாலே தான் வன்னி மக்களின் வாழ்வியல் தொடர்ச்சி இடையறாத வண்ணம் காப்பாற்றப்பட்டது. அதேநேரம் அத்தனை காலமும் இடம்பெற்ற மிகக் கோரமான நிகழ்வுகளை கண்ணெதிரே கண்டவர்கள் இவர்கள். இத்தனை காலமும் அவர்கள் தமது வியர்வை சிந்தி உழைத்து சேமித்து வைத்திருந்த எல்லாவற்றையுமே தொலைத்தவர்களாக வெறுங்கையோடு நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைய நேரிட்டது.

பெயரில்தான் இவை நலன்புரிநிலையங்களே தவிர உண்மையில் மக்கள் நலன்கள் இங்கு சரிவரக் கவனிக்கப்படவில்லை. நடமாட்டச் சுதந்திரம் அறவே இல்லை. கூண்டுக்குள் அடைபட்ட குருவிகள் போல சுற்றிவர முட்கம்பிகளால் காப்பிடப்பட்ட திறந்த வெளி ஒன்றுக்குள், தரைவிரிப்புகளால் அமைக்கப்பட்ட கூடாரக் குவியல்களுக்குள் மட்டுமே இவர்களது நடமாட்டம் வரையறுக்கப்பட்டிருந்தது. உறவினர்களை வரவழைத்துச் சந்தித்தல், அவர்கள் கொண்டுவரும் உணவு உள்ளிட்ட பொருள்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பன கூட இவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான மனநிலையை மிகவும் பாதிக்கக்கூடிய திறந்தவெளி சிறைச்சாலைகள் போல விளங்கும் நலன்புரி நிலையங்களில் கூட தற்காலிக பாடசாலைகளை அமைத்து அங்குள்ள மாணவர்களுக்கு சிறந்த முறையில் தம்முடைய கற்றல் சேவையைத் தொடர்ந்தவர்கள் வன்னியில் கற்பித்து வந்த ஆசிரியர்கள். இவ்வாறு தாம் தடுத்துவைக்கப்பட்டிருந்த சூழலில் கூட தம்மை நம்பியிருந்த மாணவர்களின் கல்விச்சுடரை அணையவிடாது பாதுகாத்தவர்கள் இவர்கள். இவர்களின் முயற்சிக்கு பயனாக வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த போது உயர்தரப் பரீட்சையிலும், புலமைப்பரிசில் பரீட்சையிலும் மாணவர்கள் பலர் சித்தியடைய முடிந்தது.



வன்னியில் கல்விச் செயற்பாடுகள் நடைபெறவில்லை. எனினும் இறுதிவரைக்கும் ஏனைய அரச அலுவல்கள் இடம்பெறவே செய்தன. உயிருக்கு உத்தரவாதமற்ற மிக இக்கட்டான சூழ்நிலை வந்தபோதிலும் கூட தமது மக்கள் பணியை அவர்கள் தொடர்ந்ததாலே தான் வன்னி மக்களின் வாழ்வியல் தொடர்ச்சி இடையறாத வண்ணம் காப்பாற்றப்பட்டது. அதேநேரம் அத்தனை காலமும் இடம்பெற்ற மிகக் கோரமான நிகழ்வுகளை கண்ணெதிரே கண்டவர்கள் இவர்கள். இத்தனை காலமும் அவர்கள் தமது வியர்வை சிந்தி உழைத்து சேமித்து வைத்திருந்த எல்லாவற்றையுமே தொலைத்தவர்களாக வெறுங்கையோடு நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைய நேரிட்டது.

இல்லாதுவிடின் இவர்களது எதிர்காலத்தை இருள் கவ்வியிருக்கும்.

இவ்வாறெல்லாம் தம் நலனைத்துறந்து விட்டு சேவை செய்த ஆசிரியர்கள் முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்ட கையோடு அவர்களுக்கு நல்லதொரு (?) கைம்மாறு செய்திருக்கின்றது எமது கல்வித்திணைக்களம். உடனடியாக அவர்கள் பணிக்குத் திரும்ப வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஆயினும் அங்கு எந்தெந்தப் பாடசாலைகள் இயங்குகின்றன? மாணவர்கள் அந்தப்பாடசாலைகளுக்குச் செல்வதற்கான ஒழுங்கு முறைகள் எவை என்பன இன்னமும் மர்மமாகவே இருக்கின்றது. இருப்பினும் வன்னிக்கு பணிக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கென விசேட பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. வெறுமனே போக்குவரத்துச் சேவையை மட்டும் ஒழுங்குபடுத்திவிட்டால் எல்லாமே சரியாக நடந்துவிடும் என்று எண்ணுவது அபத்தமே.

போரினால் ஏற்பட்ட இழப்பு, நலன்புரிநிலையங்களில் மிக நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டதால் உண்டான உளச்சோர்வு, தமது வாழ்க்கையை மீளவும் ஆரம்பப் புள்ளியில் இருந்தே தொடங்க வேண்டிய அவலம் என்பவற்றால் பந்தாடப்பட்டு இன்னமும் சகஜ நிலைக்குத் திரும்ப முடியாதவர்களாகவே வன்னியில் இருந்து வந்த மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தமது முன்னைய சந்தோசத்தையும் அமைதியையும் உளஆற்றலையும் மீளப் பெறுவதற்கு சிறிதுகால ஓய்வும் இப்போது நிலவுவது போன்ற புதிய சூழலும் அவசியமானவை. ஆனால் அவர்கள் திரும்பவும் வன்னிக்குக் கடமையாற்றச் செல்வார்களேயானால் யுத்தத்தின் பாதிப்புகளை மீள மீள காணும் சந்தர்ப்பமே ஏற்படும். இதனால் அவர்கள் மனதில் இருந்து போர் தந்த வடுக்களை அவர்கள் மறக்கமுடியாதிருக்கும். கண்ணெதிரே கண்ட கொடூரங்கள் மனதில் ஒவ்வொரு நாளும் மேலெழுந்தாடும். இதனால் கற்பித்தல் மனோநிலையை அவர்கள் ஒட்டுமொத்தமாகவே இழக்கக்கூடிய அபாயமும் ஏற்படும். சில வேளைகளில் அவர்கள் மீள முடியாத உளப்பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரிடும்.

இதுதவிர பொருளாதார ரீதியாகவும் அவர்கள் பாதிப்பினையே எதிர்கொள்வர். யாழ்ப்பாணத்தில் இருந்து அவர்கள் ஏறக்குறைய 50 கிலோமீற்றருக்கும் அதிகமாக பயணித்தே தமது பாடசாலைகளை அடையவேண்டியிருக்கும். இதற்கு அவர்கள் மணித்தியாலக் கணக்கில் செலவிடவேண்டியிருக்கும். அது தவிர தமது குடும்ப உறுப்பினர்களை தனியே விட்டுவிட்டு செல்லவேண்டிய சூழல் ஏற்படும். உதாரணமாக ஒரே வீட்டில் கணவன் மனைவி இருவரும் ஆசிரியர்களாக இருந்தால் அவர்களுடைய பிள்ளைகளைத் தனித்துவிட்டுவிட்டே செல்லவேண்டியிருக்கும். இது தவிர போர் காரணமாக பல குடும்பங்கள் தமது குடும்ப அங்கத்தவர்களை இழந்துவிட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக குடும்பத்தின் தலைமைத்துவ உறுப்பினர்களே அதிகளவில் இழக்கப்பட்டிருக்கின்றனர். எனவே குடும்பத்தைக் காக்கவேண்டிய நிலையில் உள்ளவர்களே ஆசிரியப்பணிக்காக வன்னி செல்லவேண்டியிருக்கின்றது. இதனால் ஆசிரியர்களை கொண்டிருக்கும் குடும்பங்கள் தமது அவசியமான கருமங்களைச் செய்வதற்கு அல்லாட வேண்டியிருக்கும்.

வன்னியில் இருந்து வந்துள்ள ஆசிரியர்கள் மீது வங்கிகளும் பாரபட்சமாகவே நடப்பதாக கூறப்படுகின்றது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ரூபா 2 லட்சம் வரை அரச ஊழியர்கள் தவணைமுறையில் மீளச் செலுத்தும் வகையிலான கடனைப் பெறமுடியும். வன்னியில் இருந்து எதுவுமற்றவர்களாக வந்த ஆசிரியர்கள் தமது வாழ்க்கையை மீளவும் சரியான படி ஆரம்பிக்கும் உத்வேகத்தில் பல வங்கிகளிடம் இத்தகைய கடனை வேண்டி விண்ணப்பித்தார்கள். ஆயினும் 'நீங்கள் வன்னியில் இருந்து வந்தவர்கள். தற்காலிகமாகத்தான் இங்கு தங்கியுள்ளீர்கள் எனவே உங்களுக்கு அந்தக் கடனைத் தரமுடியாது' என்று அவை கைவிரித்துவிட்டன. இத்தனைக்கும் குறித்த வங்கிகளின் வன்னிக் கிளைகளில்தான் அப்பகுதி ஆசிரியர்களின் சம்பளம் இடப்படுகின்றது. நவீன தொடர்பாடல் முறைமூலம் வங்கிக் கிளைகள் எல்லாமே ஒரே குடையின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதாகவும், எந்தக்கிளையிலும் பணத்தைச் செலுத்த முடிவதோடு தன்னியக்க கருவிகள் மூலம் 24 மணிநேரமும் பணத்தினை மீளப்பெறலாம் என்றும் எல்லா வங்கிகளும் கூறிக்கொள்ளும் சூழலில், இத்தகைய நொண்டிச் சாட்டுகளைக் கூறி வங்கிகள் வன்னிப்பகுதி ஆசிரியர்களுக்கு இத்தகைய கடனைக் கொடுக்காது விடுவது எந்த வகையில் நியாயம் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கவலை தோய்ந்த முகத்துடன் வினா எழுப்புகின்றார்கள்.

ஏற்கனவே முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்ட கையோடு தமக்கு அருகில் இருக்கும் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்று வன்னிப்பகுதி ஆசிரியர்கள் தமது சேவையைத் தொடர்ந்த வண்ணமே இருக்கிறார்கள். எனவே ஓய்வு ஒழிச்சலின்றி கடமையே கண்ணெனக் கருதிச் செயற்பட்ட வன்னிப் பகுதி ஆசிரியர்களின் யதார்த்தச் சூழமைவைக் கருத்தில் கொண்டு உடனடியாக அவர்களை வன்னிக்குத் திரும்புமாறு விடுத்த பணிப்புரையை அதிகாரிகள் மீளாய்வு செய்ய வேண்டும் என்பது ஆசிரியர்களின் ஆதங்கமாக உள்ளது.

இது தவிர வாழ்வியல் முன்னேற்றத்திற்காக ஏனையோருக்கு வழங்கப்படுவது போன்ற வங்கிக் கடன்களை வன்னியில் இருந்து வந்த ஆசிரியர்களுக்கு வழங்கவும் உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாக உள்ளது. மாணவர்களின் கல்விக்காக உழைத்த வன்னிப்பகுதி ஆசிரியர்களுக்கு நமது கல்விச் சமூகம் செய்யக்கூடிய மிகச்சிறிய கைமாறாக அது இருக்கும்.

இதே வேளை ஆசிரியர்கள் வன்னிப்பகுதிக்குத் தொடர்ச்சியாகப் பாடசாலைகளுக்குச் சென்று செயற்படுவதன் ஊடாக மாணவர்களிடத்தே நம்பிக்கையை உண்டாக்கி அவர்களிடத்தேயும் வன்னிப் பகுதிக்கு வந்து கற்கும் மனோநிலையை உருவாக்கலாம் என்பது இந்தப்பிரச்சினையின் இன்னொரு பக்கம். மாணவர்கள் பலருக்கும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து தமது கற்றலையும் அங்கேயே பெற வேண்டும் என்ற எண்ணமும் இருக்கலாம். எனவே வன்னியில் மீளக்குடியேறும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் கூட அதிகாரிகள் 'ஆசிரியர்களை வன்னிக்குத் திரும்பும் படி' உத்தரவிட்டிருக்கலாம். எனவே மாணவர் நலனைக் கருத்தில் கொண்டு இந்தக் கோணத்தில் ஆசிரியர்களும் சிந்திக்க வேண்டும். *

தேவையான கட்டமைப்புகள், தேவைகளைச் சீர்செய்து ஆரம்பிக்க அவகாசம் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

எமது சிற்பாலயத்தில் கடமையாற்றி வருபவரும்
எமது உறவினருமாகிய இ.கெங்காதரன்
அவர்களின் அன்பு மனைவி

அமரர் புவனேஸ்வரி

25.11.2009 புதன்கிழமை காலமானார். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய விஸ்வப்பிரமாவை பிரார்த்திக்கின்றோம்.

ஸ்தபதி நா. மகேந்திரன், இதயானந்தன்,
இந்திரசிற்பாலயம், உடுப்பிட்டி.

மரண அறிவித்தல்

இராசையா மகேஸ்வரன்

தாவடி,கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கலைமணி வீதி, கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகேஸ்வரன் (வவா - தேனு தேநீர்ச்சாலை உரிமையாளர், கல்வியங்காடு) 26.11.2009 அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் தாவடி, கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா - நல்லம்மா தம்பதிகளின் புதல்வரும், கலைமணி வீதி, கட்டைப்பிராயைச் சேர்ந்த அமரர் ஸ்ரீனிவாசகம் மற்றும் சகுந்தலாதேவியின் அருமை மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், நிமலன் (உதவிப் பொறியியலாளர், மீளெழுச்சித் திட்டம், செயலகம், திருமலை), துவாரகா, தனேசன் (யா/மத்திய கல்லூரி, 2009 A/L, கணிதப் பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பாக்கியலட்சுமி, பரமேஸ்வரன் (கனடா), இராஜேஸ்வரன் (கருடா தேநீர்ச்சாலை, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம்), விக்கினேஸ்வரன் (கனடா), கமலேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), இந்திரேஸ்வரன் (லக்ஷிகா ரெக்ஸ், இல.51, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம்), ஈஸ்வரன் (கனடா), திருமதி பாலேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நடராஜா (நடராஜா அன் கோ, திருநெல்வேலிச் சந்தி) மற்றும் ஜெயந்தி (கனடா), கோமதிதேவி, லீலாவதி (கனடா), தயா (கனடா), ரஞ்சனி, சுகந்தி(கனடா), ஆனந்தசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், கிருஸ்ணதாசன், உலகநாதன் (ஜேர்மனி), சுபாசினி (சுவிஸ்) ஆகியோரின் ஆசை மைத்துனரும், ஞானமலர், நந்தா (ஜேர்மன்), சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-11-2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலைமணி வீதி, கட்டைப்பிராய். (92610) குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

கந்தையா பொன்னம்பலம்

(இளைப்பாறிய அரசாங்க அதிபர் - முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்)

வேதரடைப்பு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னம்பலம் 26.11.2009 வியாழக்கிழமை மாலை வண்ணார்பண்ணையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் கந்தையா (R.K. மாஸ்ரர்) -இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி-தில்லைநாயகி தம்பதியினரின் அன்பு மருமகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், கோசலா (அமெரிக்கா), இராமேஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்வேஸ்வரன், சுடர்விழி ஆகியோரின் மாமனாரும், தாமீரன், ஆரணி, அஞ்சலி ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சிவகாமசுந்தரி, உமாதேவி,சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான தில்லைநடராஜா, இரத்தினசபாபதி மற்றும் சிவபாக்கியம், சிதம்பரநாதன் ஆகியோரின் சகோதரனும், பாலசுப்பிரமணியம், நவரெத்தினம்,மார்க்கண்டு, காலஞ்சென்ற நடராஜா மற்றும் ருக்மணிதேவி, காலஞ்சென்ற பேராசிரியர் கைலாசபதி மற்றும் சிறிபதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86,மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (92634)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு
'மனித உரிமைகள் இல்லம்' நடத்தும்
கைராளி' ஆக்கபூர்வ போட்டி - 2009
28.11.2009 பக்கம் 16 இல் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில்
போட்டி விதிமுறை 3 பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.
போட்டி பிரிவு : பிரிவு 1 - O/L மாணவர்கள்
பிரிவு 2 - A/L மாணவர்கள்
(FOC)

சுகாதாரம் தொடர்பான
HNDநிகழ்ச்சிகள்
- நேர்ஸிங்
- எம்எல்ரி
- மருந்தகவியல்
- உடற்கூறுவியல்

இலவச ஆங்கில பாடநெறிகள்

+பாடநெறிகள் ஆங்கிலத்தில் உலகளாவிய அங்கீகாரம் உண்டு.
+HND டிப்ளோமாவினை 2ஆம் ஆண்டு பட்டப்படிப்புக்களுக்கான அனுமதிக்குப் பயன்படுத்தலாம்
+ஐக்கிய ராஜ்யம், மலேசியா, இந்தியா, பாலரஸ், ஆவுஸ்ரேலியா போன்ற நாடுகளில்

PATHE ACADEMY
The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
111-1/2, Maya Avenue, Kirulapona. Tel : 2502012
www.pathеacademy.org

for healthy life

Also available Surgical and Laboratary Equipment
ECG Machine, Syringers, BP Meters, Ultrasound Scanners
Centrifuge, Thermometers
Urine Bags, Infusion Set, etc.,
IMPORT & DISTRIBUTORS OF MEDICAL ITEMS
Sri Chin Holdings
#381, Colombo Road, Pepiliyana
Tel:0112 827739 Email: dreyril@yahoo.com

யாழ்.மாவட்ட பெண்கள் துடுப்பாட்ட அணி தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியாக மாவட்டங்களுக்கிடையில் நடைபெறவுள்ள துடுப்பாட்டப் போட்டிக்கு யாழ்.மாவட்ட பெண்கள் அணியைத் தெரிவு செய்யும் வகையில் வீராங்கனைகளைப் பதிவு செய்யும் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி மு.ப. 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

துடுபாட்ட அணியில் இடம்பெற விரும்பும் 16 வயதிற்கு மேற்பட்ட வீராங்கனைகளை அன்று காலை சமுகமளித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை கிரிக்கெட் சபையின் பயிற்றுவிப்பு முகாமையாளர் மல்கம் பெரேராவின் அறிவுறுத்தலின் படி யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் செயலாளர் ஏ.எஸ்.நிஷாந்தன் அறிவித்துள்ளார்.

பாடசாலை வீராங்கனைகள் தங்கள் பாடசாலை அதிபர்களின் சிபாரிசுடனும் ஏனையவர்கள் நேரடியாகவும் சமுகமளித்து பதிவுகளை மேற் கொள்ள முடியும்.

இப்போட்டி அடுத்த மாத நடுப் பகுதியில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(50)

அமரர் பாக்கியவதி சரவணமுத்து
அவர்களின் அந்தியேட்டிக்
கிரியைகளுடன்
நினைவு நூல் வெளியீடு

கடந்த 20.10.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் இன்று (29.11.2009) ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மு.ப. 10 மணிக்கு அவரின் நினைவாக திருமதி தேவகி ரமேஷ்வரன் அவர்கள் எழுதிய தெணியானின் நாவல்கள் - ஒரு நுண்ணாய்வு என்னும் நூலினை கலாநிதி த.கலாமணி அவர்கள் தலைமையில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் வெளியிட்டு வைக்க, கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்கள் கருத்துரை வழங்குவார்கள். இந்த இரு நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தெணியகம், பொலிகண்டி,
வல்வேட்டித்துறை. குடும்பத்தினர்.
(சி-562790)

31ஆம் நாள் உயிரமைதி வழிபாட்டு அழைப்பு

அமரர்
எட்வேட் அமிர்தலிங்கம்
மண்ணில் விண்ணில்
13.04.1933 05.11.2009

கடந்த 5.11.2009 அன்று எமை விட்டுப் பிரிந்த எம் அன்புக்குரிய குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு எதிர்வரும் 05.12.2009 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் உயிரமைதி வழிபாட்டு நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

(92633)
வேலணை கிழக்கு,
வேலணை. 021 321 8720 குடும்பத்தினர்.

8ஆம் ஆண்டு நினைவலைகள்

யோகசிங்கம் கமல்ஸ்ரோன்

பிறப்பு 06.11.1981 இறப்பு 29.11.2001

"எட்டாத தூரத்தில் எட்டு வருடங்கள்
எட்ட முடியா சோகத்தில் என்றும் நாம்"

957/10, வளன்புரம், கண்ணீர் மல்க
கொழும்புத்துறை. நண்பன் - ஜெ.ஜதன்.
(92629)

கண்ணீர் அஞ்சலி

எமது கழக அங்கத்தவர்களான குமாரதாஸ்,சிவதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிதாஸ் பிரமோத்தின் அன்புப் பேரனுமாகிய

சின்னத்தம்பி பொன்னுத்துரை

28.11.2009 அன்று மட்டக்களப்பில் காலமானார். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன்லேன், (சி/562795) வளர்மதி முன்னேற்றக் கழகமும்.
கொக்குவில் கிழக்கு. வளர்மதி நிறைவாழ்வகமும்.

கோழிக்குஞ்சு விற்பனைக்கு

BAHIRA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA பேட்டுக்குஞ்சுகள் 30.11.2009 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

ராஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம்
ஆனைக்கோட்டைச்சந்தி. T.P: 021 222 2867 (92624)

சக்தி பான்சி றேடர்ஸ் இன்
சிறப்பு விலைக் கழிவு

அன்பளிப்புப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், குழந்தைகளுக்கான பொருள்கள், நுளம்புவலைகள், மழைக்கவசங்கள், வாசனைப்பொருள்கள் மற்றும்பல பொருள்களையும் கொழும்பு விலைகளைவிட குறைவான விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

சக்தி பான்சி றேடர்ஸ்
பலாலி வீதி, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. (Music world அருகில்)
T.P: 0212223840 (C/562776)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைந்து போகுமா துரையப்பா விளையாட்டரங்கு...?

செருப்பு அளவில்லை என்பதற்காக காலை வெட்ட முடியுமா?

யாழ். மண்ணின் விளையாட்டு வீரர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது. இச் செய்தி விளையாட்டுத் துறையை சாந்தவர்களுக்கு மாத்திரமல்லாது, குடாநாட்டு மக்கள் அனைவருக்குமே அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தக்கூடியதாகும்.

அது யாதெனின் உயிர்த்துடிப்புடன் விளங்கும் யாழ் நகரின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் துரையப்பா பொது விளையாட்டு அரங்கின் கம்பீரமாக தலைநிமிர்ந்து நிற்கும் இரண்டு பார்வையாளர் அரங்கங்களில் (ஸ்ரேடியம்) ஒன்று இடித்து அழிக்கப்படப்போகின்றது என்பதே. இத் தகவலை விளையாட்டுத்துறை வட்டாரங்கள் வேதனையுடன் உறுதிப்படுத்தியுள்ளன.

போர்த்துக்கேயர் இலங்கையை கைப்பற்றி ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கோட்டை தற்போது இரணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இக் கோட்டையின் ஒரு பகுதியை பார்வையாளர் பகுதி மறைத்து நிற்பதனால் அதனை இடிப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இடிக்கப்படவுள்ளதாக கூறப்படும் ஸ்ரேடியம் இலங்கையில் சமாதான காலம் ஏற்பட்ட சமயத்தில் 3 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் 2000 பார்வையாளர்களுக்கு மேல் அமர்ந்திருந்து போட்டிகளை கண்டுகளிக்கக்கூடியதாகவும் அமைந்திருக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

இவ் விடயம் தொடர்பாக இம் மைதானத்தின் அபிவிருத்தியில் பங்கு கொண்டவர்களும் இங்கு நடைபெற்ற போட்டிகளில் விளையாடியும், தமது பயிற்சிகளை மேற்கொண்டும் யாழ் மண்ணிற்கு புகழ் பெற்றுக் கொடுத்த வீரர்களும் இதற்கு கடும் எதிர்ப்பும் விசனமும் தெரிவித்துள்ளனர். போர்த்துக்கேயரினால் குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டு கட்டப்பட்ட இக்கோட்டை பின்னர் ஒல்லாந்தர்களிடமும் ஆங்கிலேயரிடமும் கைமாறியது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததை அடுத்து ஜே.வி.பியினரின் புரட்சிக் காலத்தில் சிறைச்சாலையாகவும் விளங்கிய இக்கோட்டை பின்னர் உல்லாசப் பயணிகளின் சுற்றுலாத் தலமாக மாற்றமடைந்தது. ஆனால் யாழ். மாவட்டம் அமைக்கப்பட்டது. கொளுத்தும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் ஆடிய வீரர்களை உற்சாகப்படுத்த வந்த ரசிகர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் வீரர்களின் ஓய்வை கருத்தில் கொண்டும் கட்டப்பட்டது. இடிப்பதற்கு எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையை உரியவர்கள் மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்கின்றனர்.

மைதானத்தின் அருகில் அமைந்துள்ள இக்கோட்டை யாழ்ப்பாணத்தை அந்நியர்கள் ஆண்ட அடையாளச் சின்னமாகவே மக்களால் நோக்கப்படுகின்றது. எமது வரலாற்றை சுமந்து நிற்கும் இக்கோட்டை முக்கியமானதே; ஆனால் ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்களை உருவாக்கியும் உருவாக்கி வருகின்றதுமான இம் மைதானத்தை அந்நியரின் பெருமைபேசும் சின்னத்தை அழகு படுத்துவதற்காக மைதான வளங்களை அழிப்பதென்பது எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத செயலாகும் என்ற கருத்தும் ஒருசாராரிடம் நிலவுகின்றது.

இடிக்கப்படவுள்ள இந்த பார்வையாளர் பகுதி அமைக்கப்பட்ட காலத்தில் இலங்கையின் தேசிய அணியும் மாலைதீவுகளின் தேசிய அணியும் உதைபந்தாட்ட போட்டியில் மோதின. தவிர குடாநாட்டில் உதைபந்தாட்ட போட்டிகளை நடத்துவதற்கு யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் உதைபந்தாட்ட அணிக்கும் முக்கியமான மைதானமாக இது உள்ளது.

தவிர தேசிய அணிகள், மாவட்ட அணிகள், பிரதேச அணிகள் யாழில் நிலைகொண்டுள்ள முப்படைகளின் அணிகளும் என பலரும் இம் மைதானத்தில் தமது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தினர். இத்தனை பெருமைகளை வழங்கிய மைதானத்தை இழக்க வேண்டுமா என்பதே அனைவரினதும் கேள்வியாக உள்ளது.

சர்வதேசதரத்துக் குரிய மைதானம் ஒன்று யாழ். மாவட்டத்தில் இல்லாத நிலையில் அந்நிலையை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலே இம் மைதானம் அமைந்துள்ளது. போதிய இடவசதி, வளவசதி இல்லாத நிலையில் யாழ். வீரர்களுக்கு சிறந்த பயிற்சிளை வழங்கும் மையமாக விளங்கி வருகின்றது.

அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவிய அசாதாரண நிலைமைகளின் இம் மைதானத்தில் வீரர்கள் விளையாடுவதற்கும் போட்டிகளை நடத்துவதற்கும் மட்டுப்பாடு விதிக்கப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. போட்டிகளை நடத்துவதற்கு முற்கூட்டியே அனுமதி பெற வேண்டும் என்ற நிலைமை தற்சமயம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் அதிகளவிலான போட்டிகள் நடத்தப்படும் மைதானமாகவும் இது விளங்குகின்றது. தவிர மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகள் நடைபெறும் போது இம் மைதானமே அதிகாரிகளினுடைய போட்டி ஏற்பாட்டாளர்களினுடைய தெரிவாக அமைகின்றது.

யாழ்.நகரின் மையப் பகுதியின் அமைந்திருப்பதனால் குடாநாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் போட்டிகளைப் பார்வையிடுவதற்கு பாவையாளர்கள் வருகை தருவர். தவிர அண்மைக்காலத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்ட மக்கள் இம் மைதானத்தில் வைத்து விடுவிக்கப்படுவதற்கு சிறந்த தளமாகவும் விளங்கியது. இவற்றுக்கு சிறப்பு கூறுவதாக இங்குள்ள பார்வையாளர் பகுதிகளே அமைந்துள்ளன எனின் மிகையல்ல.

ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட மைதானமாக இல்லாத நிலையிலும் மைதானத்துக்குரிய அமைப்பு முறை சீரிய முறையில் இல்லாத நிலையிலும் யாழ். மாவட்டத்தில் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கித் தந்தது இம்மைதானமே. இங்கு வேறு இடத்தில் பார்வையாளர் பகுதி கட்டுவதற்கான வசதிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. 2003இல் இம் மைதானத்தில் பார்வையாளர் பகுதி அமைப்பதற்காக விளையாட்டு அதிகாரிகள் பலரும் தமது பணியினை இரவு பகல் பாராது செலவிட்டிருந்தனர். ஒதுக்குப்புறமாக பற்றைபடர்ந்து இருந்த கோட்டை பகுதியின் அகழிக்கு அருகில் இந்த ஸ்ரேடியத்தை அமைப்பதே மிகப்பொருத்தமானது என்று தெரிவு செய்யப்பட்டபின்னரே இது அமைக்கப்பட்டது. ஆனால் தற்போது இதனை இடித்துவிட்டு வேறு இடத்தில் பார்வையாளர் பகுதி அமைப்பதென்பது கேலிக்குரிய விடயமாகவே தெரிகின்றது. ஏனெனில் மைதான வசதியைப் பொறுத்தவரை இதனைவிட வேறு எப்பகுதியிலும் பார்வையாளர் பகுதியை அமைப்பதன் மூலம் இதனை மைதானமாக பார்க்க முடியாது என்றே கூற முடியும். இதனை மீறியும் பார்வையாளர் பகுதி அமைக்கும் பட்சத்தில் அதனை அண்மைக்காலத்தில் களியாட்ட நிகழ்வுகள் நடத்தியதைப் போன்று முற்றுமுழுதாக களியாட்ட நிகழ்வுகளுக்கே பொருத்தமுடையதாகவே இம் மைதானம் விளங்கும்.

யாழ். மாவட்டத்தில் மைதான வசதிகள் போதுமான அளவில் இல்லாத நிலையில் பொதுவான போட்டிகளை, நிகழ்வுகளை நடத்தும் இம் மைதானத்தில் மேலும் அபிவிருத்திகான இடங்கள் வெற்றிடமாகவே உள்ளன. ஆனால் இவ் வெற்றிடங்கள் நிரப்படப்பட வேண்டிய நிலையில் இருக்கின்ற வளங்களை அழிப்தென்பது எந்தவொரு மனிதராலும், சமூகத்தாலும் ஏற்கமுடியாத செயலுமா கும். ஆகையால் உரியவர்கள் இது தொடர்பாகக் கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதுடன் இந்நடவடிக்கைகளை மீண்டும் ஒரு தடவை பரிசீலனை செய்வதே சரியான செயலாகும்.

–தமிழரசன்–

கோட்டையை மறைப்பதாகக் கூறி இடிக்கப்படவுள்ள அரங்கின் ஒரு பகுதி.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூரியர் சேவை
ARRUL GLOBAL EXPRESS

T.P : 0212226113
Mail : arrulgex@gmail.com

இல. 01, பிறவுன் வீதி,
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

உலகின் முதற்தரமான கூரியர் சேவை நிறுவனத்துடன் இணைந்து 220 க்கு மேற்ப்பட்ட நாடுகளுக்கு நேரடியாக சேவையினை வழங்குகின்றோம்.

அனுப்பப்படும் பொருள் சென்றடையும் வரையான விபரங்களை கையடக்க தொலைபேசியிலிருந்தே அறிந்து கொள்ளும் வசதி.

Express , Economic, Normal சேவைகள்

U.S.A , CANADA
மிகக்குறைந்த கட்டணம்
(3 நாள் சேவை)

முகவர் நிலையங்கள் : - சபா பல்பொருள் வாணிபம் - அச்சுவேலி,
யாழ் பான்சி - மலாயன் கபே முன்பாக , பெரிய கடை, யாழ்ப்பாணம்.

அனைத்து நாடுகளுக்கும் முன்கூட்டியே நேரம் குறித்து பொருட்கள் ஒப்படைக்கப்படும்.
(TDD Service)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோயில் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள வெறும் காணி கிணற்றுடன் அமைந்த வீடு கட்ட உகந்தது- பரப்பு-3 குழி 6 உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

இ.செல்லையா

இல.132, கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 0770416285

(92622)

மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஒளடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, நரம்புகள், பட்சாகாரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதல் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்பு மற்றும் வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகத் துணைபுரிந்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் ரேஸர் பிரச்சனை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

Emerchemie NB
helping add life to years

We Need YOU. . .

We are a leader status Pharmaceutical Agency House representing the interests of many International Companies including 'inter-alia' PHARMACHEMIE, MERCK, TEVA, ACTAVIS, RANBAXY, DR. REDDY'S ALKEM, BAGO, RENATA and BEXIMCO. Having maintained impressive and consistent growths and annual turnover exceeding SLRs. 2 Billion we are in the process of further consolidating ourselves towards better yields.

Arising from the rapid expansion and development of both In-Line and New Business Activities we are in need of high calibre personnel for pivotal enlistment towards optimum productivity.

MEDICAL REPRESENTATIVES

Dynamic young candidates between 18 - 25 years, are required to render professional service to the Medical Community. They will need to be educated up to the GCE A/L in Biological Sciences and should be thoroughly articulate in the English Language. Should be willing to undertake extensive travelling and work long hours. The chosen candidates should be result oriented team players with a pleasing personality.

SALES REPRESENTATIVES

Candidates with a Credit Pass in Mathematics & English at the GCE (O/L) Examination with excellent communication and interpersonal skills. Perspective candidates should be between 20-35 years of ages and be willing to travel extensively. Previous experience will be an added advantage.

Candidates chosen for above position will need be proactive Team Players with strong interpersonal skills, be self motivated and have an excellent command of English and Sinhala/ Tamil. Terms and conditions of employment will be attractive and a pleasant working environment is assured.

Applications should be sent within the next 14 days, and should include a comprehensive resume including the contact telephone number and names & addresses of two non-related references. Post applied for should be clearly stated on the **top left hand corner of the envelope** and should reach:

Director, Legal & Corporate Affairs

Emerchemie NB (Ceylon) Limited

No. 60, Maligawatte Road, Colombo 10.

'National in Fiber, International in Flavour'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடைத் துணிகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு வருவதாகவும், இதுவரை சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளாத பாடசாலைகள் எதிர்வரும் டிசெம்பர் இரண்டாம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(50-207)

மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், நவ.29

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். நீர்வேலி, நிலாவரைப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் கொக்குவிலைச் சேர்ந்த சீ.பிரபாகரன் (வயது-36) என்ற இளைஞரே மேற்படி காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-16)

சென்.பற்றிக்ஸ் வீதியில் குப்பைகள் கொட்டப்படுவதால் தொற்றுநோய் அபாயம்

யாழ்ப்பாணம், நவ.29

சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் உள்ள வீதியோரத்தில் குப்பைகள் கொட்டப்படுவதால் பாடசாலை மாணவர்களுக்கு தொற்றுநோய் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இப்பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-23)

பிறப்பு, இறப்பு பதிவு நடமாடும் சேவை

சங்கானை, நவ.29

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற பிறப்பு, இறப்பு பதிவுக்கான நடமாடும் சேவையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்குபற்றி இருந்தனர். எனினும் பிற்பகல் 3.30 மணிவரை முந்நூறுக்கு உட்பட்ட மக்களின் பதிவுகளே மேற்கொள்ளப்பட்டன. (ஏ-29)

தாவடி மயான வீதி மோசமாகச் சேதம்

சண்டிலிப்பாய், நவ.29

தாவடி- மானிப்பாய் வீதியிலிருந்து தோட்டவெளி ஊடாக தாவடிமயானத்திற்குச் செல்லும் வீதி மக்கள் நடமாட முடியாதவாறு பலத்த சேதத்திற்குள்ளாகி இருப்பதால் வீதியில் செல்லும் பொதுமக்கள் மட்டுமல்ல தகனக் கிரியைக்காக மாயானத்திற்குச் செல்லும் மக்களும் பெருஞ் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

மானிப்பாய் தாவடி வீதியிலிருந்து மயானம் நோக்கித் தோட்டவெளி ஊடாகச் செல்லும் இந்த வீதி இணுவிலைச் சென்றடைகின்றது. இணுவிலில் இருந்து தாவடி, சுதுமலை, மானிப்பாய் ஆகிய இடங்களுக்கு வருபவர்கள் தூரத்தைக் குறைப்பதற்காக குறுக்கு வழியான இப்பாதையையே பாவித்து வருகின்றார்கள்.

ஏற்கனவே குண்டும் குழியுமாக இருந்த இந்த வீதி மாரி காலத்தைத் தொடர்ந்து மேலும் சேதத்திற்குள்ளாகியது. இதனால் சைக்கிள்களில் பயணம் செய்பவர்களும், நடந்து செல்பவர்களும் சிரமங்களை அனுபவிக்கின்றார்கள்.

குறிப்பாக இறந்தவர்களைத் தகனஞ் செய்வதற்காக மயானத்திற்குச் செல்லும் நூற்றுக் கணக்கான மக்கள் நிம்மதியாக நடந்து செல்ல முடியாதவாறு திண்டாடுகின்றனர். சில சமயங்களில் இறந்தவரின் சடலத்தைத் தோளில் வைத்துக் காவிக்கொண்டு நடந்து செல்பவர்கள் இறந்தவரின் சடலத்தை ஒழுங்காகக் கொண்டுபோக முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

எனவே இறுதிக்கிரியையின் போது மயானத்திற்கு நடந்து செல்பவர்களின் நன்மை கருதி இவ் வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (50-115)

முகவரியைத் தேடுகிறார்கள்

முத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 126

1969 ஆம் ஆண்டில் தமது முதல் சிறுகதையான 'அப்பா வரமாட்டார்' மூலம் ஈழத்துப் புனைகதைத்துறையில் பிரவேசித்தவர் சோமசுந்தரம் ராமேஸ்வரன். பருத்தித்துறை ஆத்திய படியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவரது ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகள் சிந்தாமணி, வீரகேசரி, தினகரன் மற்றும் வெய்தி உள்ளிட்ட ஈழத்தின் பிரபல பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் நால்கள் வெளியிட்டுள்ளார். இவரது சிறுகதைகள் இரு ஆங்கில மொழிபெயர்ப்புத் தொகுதிகளாகவும் வெளிவந்துள்ளன.

இரு தடவைகள் தமது நால்களுக்கு சாஹித்திய விருது பெற்றவர். முகவரியைத் தேடுகிறார்கள் என்ற சிறுகதைத் தொகுதியும் அவற்றில் ஒன்று.

ஆரம்பத்தில் பத்திரிகைத் துறையில் கடமையாற்றிய அனுபவம் வாய்ந்த இவர் தற்போது கொழும்பு கொப்பேகடுவ கலாசல ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தில் தகவல் வெளியிட்டு உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார்.

இவரது 'முகவரியைத் தேடுகிறார்கள்' சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'முகவரியைத் தேடுகிறார்கள்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

முகத்தில் சுருக்கங்கள்

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 126

முகவரியைத் தேடுகிறார்கள்

சோமசுந்தரம் ராமேஸ்வரன்

மண்ணை மிதித்து சிறிது நேரத்தில், அளவாளவும்போது, நிதானமாக, தாழ்ந்த குரலில, ராகவன் சொன்னான்:

''அது எழுந்தமான முடிவல்ல. கன நாளா யோசிச்சு எடுத்த முடிவு. அதுக்கு நிறையவே எதிர்ப்பு இருக்கும் எண்டு எனக்குப் பரிபூரணமாகத் தெரியும். ஆனால், காதலை மதிச்ச படியால அந்த முடிவுக்கு வந்தன். ஒரு வேளை நான் சேற்றைப் பூசிக்கொண்டு விட்டேனோ என நீர் நினைப்பீர். அப்படி நீர் நினைச்சால் அது சரியாகவும் இருக்கலாம்.''

ராகவன் ஆறுதலாகப் பெருமூச் சொன்றைவிட்டான். அவள் முகத்தில் இன்னமும் களைப்புச் சாயம் பூசியிருந்தது. நீண்ட நேர விமானப் பயணத்தின் களைப்பு. நித்திரையின்மை அவனுள் அயர்ச்சியைத் தோற்றுவித்திருந்தது. போதாக்குறைக்குத் தடிமலும் இருமலும் இடையிடையே அவனை வதைத்துக் கொண்டிருந்தன.

சுவிட்சர்லாந்திலிருந்து இருபத்தி இரண்டு வருடங்களின் பின்னர் தாய் மண்ணை மிதித்திருந்தான். கற்பனைகளை நிதர்சனமாக்குவதற்கு, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு வந்திருப்பதாகக் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வரும் வழியில் உற்சாகத்துடன் சொன்னான். அவன் தமிழில் புரள்வு இல்லை. நிறையத் தெளிவு. இடையிடையே இலக்கணச் சுத்தமாகப் பேசினான்.

அவனை விமான நிலையத்தில் கண்டபோது என்னால் அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் தான் முதலில் என்னைக் கண்டு கையசைத்தான். 'கோட்' அணிந்து, 'ரை' கட்டி, 'கூலிங்கிளாஸ்' போட்ட ஒரு கனவானைத் தேடியதில்தான் என்னால் அவனை அடையாளம் காண முடியவில்லையோ? எளிமையாக, சாதாரணமாக அலுவலகம் செல்லும் நிலையில், 'கோட், 'ரை', கூலிங்கிளாஸ்' அற்ற நிலையில்.... இளைஞனாக, வாலிபத் துடிப்பில், பட்டதாரி என்ற அந்தஸ்தில் - தொழில் தேடிக்கொண்டிருந்த வேளையில் - வீதியில் யதேச்சையாகக் கண்டு குசலம் விசாரித்த பின்னர், இப்போது தான் காண்கிறேன். அவன் இளமை அகன்றுவிட்டது. முதுமை சற்று அதிகமாகவே அரவணைத்திருந்தது.

குறுகிய மடல்கள்.

கடைசியாக வந்த மடலில் ஒரு சின்னக் கோரிக்கை.

''இலங்கை வரவிருக்கிறேன். உம் முடன் தங்க முடியுமா?'' என்று அவன் குறிப்பிட, ''அதற்கென்ன வாரும்'' எனப் பதில்அளித்தேன்.

ராகவன் நிறையவே படித்திருந்தான். பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு முடிந்த கையோடு அமெரிக்கா சென்ற வன் ஒரு கலாநிதிப் பட்டத்தை அங்கு சுவீகரித்தான். இன்னொரு கலாநிதிப் பட்டத்தைச் சுவிட்சர்லாந்தில் பெற்றான். அங்கு செல்லும் வழியில் விமானத்தில் தான் அந்தச் சந்திப்பு..... அச் சந்திப்பே அவனது வாழ்க்கையை நிறையவே மாற்றிவிட்டது. பல திருப்பங்கள்....

போலின்! ''அவளோ கதைக்கக் கிள்ள.... திக்கித் திணறி அவள் இங்கிலீஸ் பேசக்கிள்ள.... அந்தக் குறுகுறுத்த கண்கள்.... அதில தெரிஞ்ச ஈர்ப்பு சக்தி.... சின்னஞ்சிறிய உரு அமைப்பில் பதுங்கியிருந்த வடிவு.... சா! உண்மையிலேயே நான் என்ர மனதைப் பறிகொடுத்திட்டன்.'' இப்படியொரு வருணிப்பு ராகவனின் சொற்களில் வெளிப்பட்டது.

ராகவன் அவளில் கவரப்பட்டுவிட்டான்.

''அந்த நேரத்தில் நான் சந்திச்ச தமிழ் பெடிச்சியளைவிட, அமெரிக்காவில கண்ட வெள்ளைத் தோல்காரியளைவிட அவள் சிறப்பா தெரிஞ்சாள். ஒரு தேவதை மாதிரி.... சிரிக்கிறீரா?''

ராகவன் தனது வயதை மறந்தவனாக, என் சிரிப்பை அமிழ்த்தியபடி, அட்டகாச மாகச் சிரித்தான். அச் சிரிப்பில் மகிழ்ச்சி இல்லை. வெற்றிக் களிப்புப் போல....

ராகவனின் முகத்தில் ஒரு தெளிவு இருந்தது. தேநீரை ருசித்தான். என் துணைவி அவனிடம் 'கதை' பிடுங்கினாள்.

''இஞ்ச இருக்கிற பொம்பளையள விட..... இனம், மதம், மொழி, கலாசாரம், தேசியம், தாய் நாடு எண்டு எல்லாத்தையும் மறந்திட்டு.... இங் கிலீஷையே கொச்சையாகக் கதைக்கிற ஒரு பொம்பளையைக் கட்டுறதுக்கெண்டு எப்படி உங்களுக்கு மனம் வந்தது?''

சுகந்திக்குப் பதிலாக மௌனம் தான் கிட்டியது. அவன் பதில் அளிக்க முயல்வதாகவும் தெரியவில்லை. வினாடிகள் நிமிடமொன்றைத் தொட, சுகந்தியின் முகத்தில் ஓர் ஆர்வம், தவிப்பு... பொறுமையைக் கட்டுப்படுத்த சுகந்தியினால் முடியவில்லை. அவள் கேட்டுவிட்டாள். ''காதலுக்குக் கண் இல்லை எண்டு நினைச் சீங்களா?'' இல்லாட்டி காதல் தான் பெரிசு எண்டு நினைச்சீங்களா? இல்லாட்டி விரக்தி யால ஒரு முடிவை அரைகுறையாக எடுத்தீங்களா?''

ராகவனின் யோசனையில் முற்றுப் புள்ளி. சில வினாடிகளில் முகத்தில் கருமை படர்ந்தது. அவன் கண்களில் ஒரு சோகம் குடிபுகுந்தது. நீர்த்திவலைகள் எட்டிப் பார்த்தன. கண்களைத் துடைக்க வேண்டும் என்ற எண்ணமின்றி... பார்வையில் இலக்கின்றி....

''எங்கட சமுதாயத்தில புரையோடிக் கிடக்கிற சம்பிரதாயத்தாலதான் இப்படி ஒரு முடிவை எடுத்திட்டனோ எண்டு நான் இடைக்கிடை நினைக்கிறனான்.''

தெள்ளத் தெளிவாக வார்த்தைகள் அவனிடமிருந்து வெளிப்பட்டன. அவற்றில் ஏமாற்றத்தின் தொனி நிறைந்திருந்தது. எரிச்சல் கோடிட்டிருந்தது. துயரம் ஒரு மங்கலாக....

சுகந்தி பதிலுக்கு அவசரப்படவில்லை. பொறுமை காத்தாள். அவனே பேசட்டும் என்று அவனை நோக்குவதும், நோக் காததுமாக....

ராகவன் இரண்டு, மூன்று தடவைகள் இருமினான். தொண்டையைச் செருமியபடி பேசலானான், ஒரு பிரசங்கம்போல...

''எனக்கு ஒரு தங்கச்சி இருக்கிறா எண்டு உங்களுக்குத் தெரியும் தானே?.... அவவுக்கு நிறைய இடங்களில் கலியாணம் பேச வேண்டி இருந்தது. சாதகம் பொருந்தினால் சீதனம் பொருந்தாது. சீதனம் பொருந்தினால் சாதகம் பொருந்தாது. இரண்டுமே பொருந்தினால் பொம்பிளை வடிவு இல்லையெண்டு.... இப்படி எத்தனை கோணல்கள்? எத்தனை அலைச்சல்.... நிறையவே மன உளைச்சல். ஆறு, ஏழு வருசமாக முழு மூச்சாக..... ஒரு தொழில் செய்யுறமாதிரி அளவுக்கு மாப்பிளை தேடித் திரியுற வேலை... கடைசியா கட்டினா... நல்ல ஒரு மாப்பிளை. இப்ப இரண்டு பிள்ளையளோட கனடாவில.... அந்த ஆறு, ஏழு வருசத்துக்குள்ளை என்ர வயசும் ஏறி, தலையும் அரை வழுக்கையாகி... என்ர படத் தைப் பார்த்த சில பெடிச்சியள் தாத்தா வுக்கு இந்த வயசில கல்யாணமா எண்டு கேலி செய்திருக்கினமாம். நிறையப் பகிடிக் கதையள்... கலியாணம் முடிக்காமல் அமெரிக்காவுக்குக் கிளம்ப வேண்டி வந்திட்டுது. பிறகு நடந்தது எல்லாம் உங்களுக்குத் தெரியும்தானே! இது எல்லாத்துக்கும் என்ன காரணம்?''

சுகந்தியை ராகவன் கேள்விக் குறியோட பார்க்க, ''விதியா?'' எனச் சுகந்தி நுனிப்புல் நிலையில் கேட்க, ''இல்லை, இல்லை.... எங்கட சமூக அமைப்புத் தான் என்னை அந்த நிலைக்குத் தள்ளியது...'' வார்த்தைகள் தடைப் பட்டன. பேசுவதை நிறுத்தினான்.

தொலைபேசி அழைப்பு வர அந்தச் சாட்டில் சுகந்தி அங்கிருந்து அகல, ராகவன் என்னைப் பார்த்தான்.

''அது எழுந்தமான முடிவல்ல. கன நாளா யோசிச்சு எடுத்த முடிவு. அதுக்கு நிறையவே எதிர்ப்பு இருக்கும் எண்டு எனக்குப் பரிபூரணமாகத் தெரியும். ஆனால் காதலை மதிச்சபடியால அந்த முடிவுக்கு வந்தன். ஒருவேளை நான் சேற்றைப் பூசிக்கொண்டு விட்டேனோ என நீர் நினைப்பீர். அப்படி நீர் நினைச்சால் அது சரியாகவும் இருக்கலாம்.''

ராகவனின் முகத்தில் இப்பொழுது ஒரு தெளிவு.

மதியம் வெளியில் சென்ற ராகவன் இரவு உற்சாகத்துடன் வீடு வந்து சேர்ந்தான். அவனுள் ஓர் ஆனந்தம், ஆச்சரியம், அதையும் மீறி ஓர் ஏமாற்றம்...

அவனின் இரு உறவினர்கள் வெள்ளவத்தையில் தொடர்மாடிவாசிகள். ஒருவர் மதியபோசனத்திற்கும், மற்றவர் இராப் போசனத்திற்கும் அழைப்பு விடுத்திருந்தனர்.

''எங்கடை ஆக்கள் நல்ல வசதியாகத்தான் இருக்கினம். நான் எதிர் பார்க்க இல்லை. சொந்த வீடு... 'ஏர்கண்டிஷன்' அறை... 'கேபிள் ரீ.வி.... 'கிரனைட்' பதிச்ச நிலம்... 'லக்ஷறி கிச்சன்'.... வெள்ளவத்தை ஒரு குட்டிச் சிங்கப்பூர் மாதிரி ஜொலிக்கிறது.'' ஆச்சரியம் மேலிட, பற்களை வெளிச்சமாக்கிச் சொன்னான்.

(08 ஆம் பக்கம் பார்க்க....)

நிறை செல்வம்

இலக்கியக் காட்சி 17

இலக்கியம் வாழ்க்கை நடைமுறைகளைப் பதிவு செய்து வைத்துள்ளது. அதன்மூலமாகச் சென்ற கால நடைமுறைகளை இக் காலத் தில் அறிய முடிகின்றது. இயற்கை யோடு இணைந்து வாழ்ந்த மக்களின் வாழ்வியலைச் சங்கப் புலவர்கள் சொல் ஓவியங்களாக வடித்துத் தந்துள்ளனர். சங்கக் கவிதைகள் ஆழமான பொருளு டையவை. முன்னோர்களின் வாழ்வியலைச் சரியாக விளங்கிக் கொள்வதற்குச் சங்கக் கவிதைகள் பெரிதும் உதவியாக உள்ளன. இக் கவிதை களின் மூலம் வாழ்க்கையின் நுட்பமான தன்மைகளை அறியலாம். நற்றிணை என்னும் தொகுப்பிலுள்ள கவிதை ஒன்றை நோக்குவோம்.

தலைவன் பேரன்பு கொண்டு தலைவியைப் பிரியாமல் இன்பமாக வாழ்ந்து வருகின்றான். பொருள் இல்லாவிட்டால் இன்பமாக வாழமுடியாது. பிறருடைய துன்பத்தைப் போக்கி உதவிசெய்ய முடியாது என்பது அந்தத் தலைவனுக்குத் தெரி யும். பொருள் தேடும் நோக்கத் தோடு சிலர் வெளியூர் செல்லும் முயற்சி யைக் கேள்வியுற்றான். அதனால் அவன் வெளியூர் சென்று பொருள் தேடிவரப் புறப்பட்டான். தன் ஆருயிர்க் காதலியைப் பிரிந்து நெடுந் தூரம் செல்வதில் உள்ள துன்பம் அவனுக்கு நன்றாகத் தெரியும். தன்னுடைய மன உணர்வுகளை அறிந்து தண்ணளி செய்யும் காதலியை எண்ணிப் பார்க்கின்றான். பொருள் தேடிப் போவதை மனம் விரும்பவில்லை. ஆனால் ஆண்மகன் அப்படி இருந்துவிடமுடியாது. பொருள் தேட்டம் இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அவன் போகவே வேண்டும். இது இயற்கையின் நியதி. மனையாளைச் சேர்ந்திருக்கும் ஆவலை அடக்கி, ஆண்மகன் தன் பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துப் பொருள் தேடி வரப் புறப்பட்டான். தன் எண்ணத்தைத் துணைவியிடம் சொல்லத் தயங்கினான். அவளுடைய தோழியிடம் மெல்லத் தெரிவிக்கின்றான். தோழி தலைவிக்கு அறிவித்தாள்.

இதைக் கேட்ட தலைவியால் ஒன்றும் நம்பமுடியவில்லை. தலைவன் பிரியமுடியாத பேரன் போடு தன்னுடன் இனிது வாழ்வதை நினைத்தாள்.

'உன்னை ஒருபோதும் பிரியேன்' என்று முன்பு ஒருநாள் சொன்ன சொல்லை நினைத் தாள். சொன்ன சொல் தவறாத அவனுடைய பண்பை நினைத்தாள். அவனுடைய காதலுறவு எவ்வளவு உயர்ந்தது, மாசற்றது என நினைத்துப் பார்த்தாள். எக் காரணத் திற்காகவும் அவன் தன்னை விட்டுப் பிரியமாட்டான் என நம்பிக்கை கொண் டாள். அவளு டைய நம்பிக்கையின் கூற்றாகப் பாடல் அமைகின்றது.

நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிபுஅறி யலரே
தாமரைத் தண்தாது ஊதி மிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீர்இன்று அமையா உலகம் போலத்
தம்இன்று அமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே
(நற்றிணை. 01) (கபிலர் பாடல்)

இப் பாடலில் தலைவி தலைவன் மீது கொண்ட நம்பிக்கையையும் உண்மைக் காதலின் உயர்ந்த பண்பையும் புலவர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். 'நின்ற சொல்லர்' என்ற தொடர் தோழியின் ஐயத்திற்குரிய சொற்களால் நிறுகிட்டமாகப் பதிலளிக்கும் தலைவியின் உறுதியைக் காட்டுகின்றது. சிலருடைய பண்பு தொடக்கத்தில் இனிமையாகத் தோன்றி, பின்பு பழகப் பழக வெறுப்புக்கு இடமாகும். ஆனால் உண்மைக் காதலியின் இனிய பண்பு உண்மை நட்புப் போலவே நீடித்துத் தோன்றுதலாகும். என்றென்றும் அவன் காதல் இனிமையானபடியால் 'நீடு தோன்று இனியர்' என்றாள்.

மலர்களில் உயர்ந்தது தாமரை. நீர்வளம் நிறைந்த பொய்கையில் வளர்வது. சந்தனம், வளமான மலையின் உச்சியில் வளர்வது. தாமரையில் எடுக்கப்பட்ட தேன் சந்தனமரத்தில் சேகரிக்கப்படு கின்றது. பிறப்பிடம், சூழல், சேருமிடம், விளங்கும் தன்மை இவற்றால் சிறப்புப் பெறுவதோடு இன்மையும் அருமையும் நிறைந்தது தேன். மலைத் தேனுக்கு விசேட மான மருத்துவக் குணமுண்டு. தலைவியின் பிரிவென்னும் நோயை ஆற்றும் அன்பும் அரவணைப்பும் தலைவனுக்கே உண்டு என்பதைப் புலவர் தேன் என்னும் சொல்லால் குறிப்பால் உணர்த்தியுள்ளார். உயர்ந்த காதலனின் சிறந்த பண்புக்கு எல்லாவகையாலும் பொருத்தமான உவமையினைப் புலவரும் தலைவியின் உணர் வினூடாகக் காட்சிப் படுத்தியுள்ளார்.

செல்வி
செல்வ அம்பிகை நடராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவரியைத்.....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

''உங்கட சுவிட்சர்லாந்தை விடவோ?'' சுகந்தி குறுக்கிட்டாள்.

ராகவன் நேரடியாகப் பதிலளிக்க வில்லை. சில வினாடி மௌனத்தின் பின் பேசினான். ''நான் இஞ்ச இருந்து எண்பத்திரண்டில போனனான். இந்த இருபத்திரண்டு வருஷத்தில எங்கடை ஆக்கள் நல்லாத்தான் முன்னேறி இருக்கினம். பருவதம் மாமியிட்ட இரண்டு 'வேன்', ஒரு 'கார்', 'வேன்' இரண்டும் 'எயார் போட் ஹயர்' ஓடுதாம். நாலஞ்சு 'செல் போன்', என்னை விட உயரமான 'ஃபிரிஜ்...''

''நீங்களும் எங்கடை இனத்துக் குள்ள கட்டி இருந்தால் இந்த மாதிரிக் குட்டிச் சிங்கப்பூரில, இந்த மாதிரி சௌகரியங் களோட வாழ்ந்திருக்கலாம். நீங்கள் படிச்ச படிப்புக்கு.... பெரிய வேலை செய்து... பெரிய இடத்தில கட்டி....'' சுகந்தியின் வார்த்தைகளில குத்தல் மலிந்திருந்தது. கண்களால் அவளை நான் எச்சரிக்க, அவள் முகம் கூம்பிவிட்டது.

ராகவனின் கண்கள் கலங்கிவிட்டன. சுகந்தி பேச வாயெடுக்க ''கொஞ்சம் பொறும்'' என்று நான் எச்சரிக்க, ஒரு சின்ன மௌனம் விழுந்தது.

ராகவன் எழுந்தான். ஜன்னலுக்குச் சென்றான். பார்வையை வெளியில் விசிறினான். கம்மிய குரலில் தன் மனதைத் திறந்து விட்டான்.

''அமெரிக்காவில் காசு உழைச்சு தங்கச்சியின்ர கல்யாணத்திற்கு வாங்கிய கடனை அடைச்சிட்டு இஞ்ச வரத் தான் தெண்டிச்சனான். நிறையக் கனவுகள் என்ர அடிமனதில் ஊறிக்கிடந்தது. ஒரு வாறு கடனை அடைச்சு விட்டு நல்ல இடத்தில கட்டி 'செட்டில்' பண்ண வேணும் எண்டு ஒரு கனவு. யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில விரிவுரையாளராகச் சேர்ந்து எங்கடை பெடியளுக்குப் படிப் பிக்க வேணும் எண்டு ஒரு சின்ன ஆசை... எங்கட ஊர் ஆக்களின்ர பொருளாதாரத்தை மேம்படுத்த உதவி செய்ய வேணும் எண்டு இன்னொரு ஆசை.... சுமக்க முடியாத நிறையச் சின்னச் சின்ன ஆசையள்... ஆனா... 'பட்' ... எல்லா ஆசையளும் ஒரு நாளில அழிஞ்சு போச்சுது... ஊம். அந்தக் கரிநாளைத் தான் சொல் றன். 'பிளக் ஜூலை'... எண்பத்தி மூண்டு கலவரம்... அது முடிஞ்சு இஞ்ச கால் வைச்சு, என்ர கனவுகள் நிறை வேற்றலாம் எண்டால் என்னை வர வேண்டாம் எண்டு ஐயா, அம்மா 'லெட்டருக்கு' மேல 'லெட்டர்' போட.... முதுகெலும்பு இல் லாதவனாகி விட்டன்.''

சுகந்தி சாப்பிடக் கூப்பிட்டாள்.

சுகந்தி பிட்டுடன் முருங்கைக்காய்க் குழம்பும், கத்தரிக்காய்ப் பொரியலும் செய்திருந்தாள். ராகவன் முருங்கைக் காய்க் குழம்பை ருசித்துச் சாப்பிட்டான். மூக்கால் நீரெல்லாம் வடிந்தது. நெற்றியில் வழுக்கைத் தலையில் முத்துக் களாக வியர்வைத் துளிகள்.

''எனக்காகச் சம்பலின்ர, குழம்பின்ர உறைப்பைக் குறைச்சிடாதேங்கோ... உறைப்பின்ர ருசியை நான் அனுபவிக்க வேணும்'' என்று வந்த மறுநாளே அன்புக் கட்டளை இட்டிருந்தான்.

சுவிட்சர்லாந்துப் புதினங்கள் நிறையவே பரிமாறப்பட்டன. ராகவன் ஆலாவர்ணத்துடன் ஆச்சரியங்களை முன்வைத் தான்.

''சுவிட்சர்லாந்தா, இலங்கையா பிடிச் சிருக்குது?'' அகத்மாத்தாகக் கேட்டேன்.

''இது தாய் நாடு. இதில இருக்கிற உணர்வு அங்க இல்லை. அம்மான்ர மடியில படுக்கிற சுகம் இஞ்ச...''

''போலினைப் பற்றிச் சொல்லும்'' வெகுளியாகச் சிரித்தான்.

''என்னத்தைச் சொல்லுறது... பதினேழு வருஷ கல்யாண வாழ்க்கை. எங்கட மொழி, கலாசாரம், மரபு, பழக்கவழக்கம், பண்பாடு தெரியாத, எங்கட மதம் இல்லாத, எங்கட நாட்டைச் சேராத ஒருத் தியைக் கட்டினால் அந்தக் கலியாணம் ஒரு கொஞ்ச வருஷத்துக்குத்தான் எண்டு அம்மா சொல்லுறவ. அதைப் பொய்ப் பித்துவிட்டன்.''

ராகவன் வெற்றிக் களிப்புடன் சொன்னான்.

''இப்பவும் அவவுல விருப்பமா இருக்கிறீரா?'' கேட்கக்கூடாத கேள்வி. அவன் தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தப்பட்ட கேள்வி. அதைக் கேட் பதற்கு எனக்கு உரித்து இல்லை. கேட்டு விட்டேன். ஆனாலும், அவன் கோபப்பட வில்லை, எரிச்சல் கொள்ளவில்லை. எவ்வித தயக்கமும், தடங்களும் இன்றித் தன் மனதைத் திறந்து காட்டினான்.

''இருக்கிறதால தானே பதினேழு வருஷமா அவளோட வாழ்றன்... எங்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும். இங்க இருக்கிற பணக்காரர்களின் வாழ்க்கையுடன் ஒப்பிடக்கிள்ளை நாங்கள் அங்கை நல்லாத் தான் இருக்கிறம். ஆனால் அங்கை இருக்கிற ஆக்களின்ரை வாழ்க்கையோட ஒப்பிடக்கிள்ளை நடுத்தர வர்க்கத்தையும் விடக் கீழான வாழ்க்கையை வாழ்றம்.''

''சொர்க்கத்தில் பிச்சைக்காரர் நிலை என்று சொல்லலாமா?'' என ஆங்கிலத்தில் கேட்டேன்.

அவன் அதற்கு நேரிடையாகப் பதில் அளிக்கவில்லை. கேள்வி ஒன்றைத் தொடுத்தான். ''நான் உம்மை ஒரு கேள்வி கேட்கட்டுமா?''

''கேளும்''

''நீர் உம்மட கலியாண வாழ்க்கை இருபத்தியாறு எண்டு சொல்லுறீரோ... அதில முழு நிறைவு இருக்குதா?''

''சுகந்தியைக் கட்டக்கிள இருந்ததைவிட இப்ப சந்தோஷமாக இருக்கிறன். எங்கட வாழ்க்கை அனுபவம் கூடக் கூடசந்தோஷமும் கூடிக்கொண்டே போகுது. ஏனெண்டால் எனக்கு அவவுடைய கோபம், சந்தோஷம், ஆசை, லட்சியம், கசப்பு, எதிர்பார்ப்பு, கற்பனை, கனவு எண்டு எல்லாத்தையும் இப்ப விளங்கிக் கொள்ளக்கூடிய தாக இருக்குது. அதைப் போலை அவவுக்கும் என்ர உணர்ச்சிகள் எல்லாத்தையும் இப்ப விளங்கிக் கொள்ள முடியுது. இதுக்குக் காரணம் இருவரின்ர மொழியும், கலாசாரமும், பழக்கவழக்கமும்... சந்தோஷமான வாழ்க்கையை வாழ்றதுக்கான எல்லா விஷயமும் பொதுவாகத் தான் இருக்குது. உமக்குத் தெரிஞ்ச சுவிஸ் மொழியில பேசி, போலினுடைய மனதில என்ன இருக்குது எண்டு எப்படி அறிகிறீர்? அதே போல அவவால உம்மட தமிழ்ப் பற்றை எப்படி விளங்கிக் கொள்ள முடியுது? உங்கட வாழ்க்கையில ஒரு போலித் தனம் இருக்கிறதாகவே எனக்குப்படுது.'' நான் சற்று உணர்ச்சி வந்தவனாகப் பேசிவிட்டேன் என்று நினைக்கிறேன்.

ராகவன் திகைத்துவிட்டான். இவ்வாறான ஆழமான வார்த்தைகளை அவன் எதிர்பார்த்திருக்கமாட்டான். அதன் கனத்தினால் அவன் இடிந்திருக்க வேண்டும். நெற்றியைக் கையால் அழுத்தியபடி வந்து அமர்ந்தான்.

''தலையிடிக்குதா?''

''இல்லை...''

இரண்டு, மூன்று தடவைகள் செரு மினான். ''போலித்தனம் எண்டு சொல்ல ஏலாது. ஆனால், ஓர் இயந்திரத்தனம் தெரியுது. எனக்குள்ள கிடக்கிற உணர்ச்சியளை அவளால் சரிவர விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்குது. எங்கட குடும்பத்தைச் சுற்றிக் கிடக்கிற விஷயங்களோட ஒட்டியுள்ள உணர்ச்சியளை அவளால் விளங்கிக் கொள்ள முடியுது. ஆனால், பொதுவா என்ர சமூகத் தில, மொழியில, தாய்நாட்டில, மதத்தில எனக்கு இருக்கிற உணர்ச் சியள அவளால் விளங்கிக் கொள்ள முடியேல்ல. என்ர சமூக மக்களுக்காக நான் உதவி செய்ய வேணும் எண்டு சொன்னால் அவளுக்கு அதை விளங்கிக் கொள்ள முடி யல்ல. இதே மாதிரி நீர் இப்ப சொன்ன மாதிரி, அவவுடைய கோபம், சந்தோஷம், ஆசை, லட்சியம், கசப்பு, எதிர்பார்ப்பு, கற்பனை, கனவு எண்டு எல்லாத்தையும் என்னால விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்குது. அதே நிலையில் தான் அவவும் இருக்கிறா.... அதால நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறன்.''

உணர்ச்சி வந்தவனாகப் பேசினான். அவன் நெஞ்சு மேலும், கீழும் பலமாக உயர்ந்து தாழ்ந்தது. 'படபடப்பு' அடங்க, தொடர்ந்தும் பேசினான்.

''இன்னும் பத்து வருஷத்தில் நான் இஞ்ச வந்திடுவன். அதுக்குப் பிறகு இஞ்சயே தங்கி விடுவன். அதற்கு ஒரு முன்னோட்டமாகத் தான் இப்ப இஞ்ச வந்தனான்.''

என்னுள் ஒரு சின்னத் திகைப்பு.

''போலினையும், பிள்ளையளையும் விட்டுட்டு இஞ்ச வாறதா உத்தேசம்?''

''இன்னும் பத்து வருஷத்தில பிள்ளையள் படிச்சு முடிச்சு வேலை செய்யுங்கள். கலியாணமும் முடிச் சிடுங்கள். போலின் வந்தால் அவவை என்னோட முடிமெண்டால் கூட்டிக் கொண்டு வருவன். அவ வரமாட்டா எண்டு எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால், எனக்கு இதைத் தவிர வேறை வழி இல்லை.''

''இஞ்ச என்ன செய்யுறதா நோக்கம்.''

''நான நாளைக்கு யாழ்ப்பாணம் போறன். 'ஜஃப்னா யூனிவர்ஸிட்டிக்கு' போனாத் தான் ஒரு முடிவை எடுக்கலாம்.''

மறு நாள் காலை வேளை ராகவன் யாழ்ப்பாணம் பயணமானான்.

''எங்கடை ஆக்கள் வெளிநாட்டுக்குப் போய், வெள்ளைக்காரியளை கலியாணம் முடிச்சு தங்கட முகவரியைத் தொலைச்சுப் போடுகினம். அந்த மாதிரி ஆக்கள் முகவரியைத் தேடி இஞ்ச வருகினம். அதுக்கு உங்கட ''ஃபிரெண்ட் விதி விலக்கல்ல'' ராகவன் பஸ்சில் ஏறிய கையோடு சுகந்தி கூறினாள்.

வீதியில் மண்டிக்கிடந்த இருளைக் கிழித்தவாறே அந்த 'லக்சரி மினி பஸ்' வடக்கு நோக்கி வேகமாகப் பயணித்துக் கொண்டிருந்தது.

சுகந்தி கூறியது என் நெஞ்சில் நீண்ட நேரம் தடம் பதித்திருந்தது. ✱

சொற்சிலம்பம் - போட்டி இல: 89



அனுப்புபவர் பெயர்:.....

விலாசம்:.....

.....

கையொப்பம்:.....

போட்டி விதிகள்

1. வாசகர்வரும்சொற்சிலம்பம்போட்டியில்கலந்துகொள்ளலாம்
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 89

நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 09.12.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 89 இல் வெற்றி பெறுவோர் களது விவரம் 13.12.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப் படும்.

இடமிருந்து வலம்

1. ஜெக ஜோதியான காட்சி.
4. இறக்க.
6. வாழ்த்து/ புகழ்/ ஏத்துதல்.
7. கூறு/ தெரிவி.
8. சாந்தகுணமுடையவன்.
10. ஆவணம்/ கவனம்.
11. தரவேண்டியது.
13. கோல்.
14. பால் கூறா உயர்திணைத் தன்மை, பன்மைச் சொல்.
15. சேர்ந்து இயங்குபவன்/ நண்பன்.
18. தங்கு தடையின்றி.
19. மாலை.
20. குட்டி போட்ட ஆடு அல்லது கன்று போட்ட மாடு சுரப்பது.

மேலிருந்து கீழ்

1. தெய்வத்திற்கு படைத்தது/ நிவேதித்த பொருள்.
2. செவி.
3. கணவன்- மனைவி.
4. கடல்/ சமுத்திரம்.
5. இறப்பர் எரியும்போது வெளிவருவது.
7. பத்துச் செய்யுள் கொண்டது.
9. இரும்பில் பிடிப்பது.
12. சுப/ நல்ல செயல் அல்லது தன்மை
14. இருதயத்திலிருந்து இரத்தத்தைக் காவிச் செல்வது
15. நூல் அல்லது ஆபரணக் கொடி/ ஏமாற்றுதலையும் குறிக்கும்.
16. சப்பம்.
17. கைகளில் பத்து, கால்களில் பத்து.
18. கூட்டு என்பதைக் குறிக்கும்.
19. சபை/ மன்றம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 87 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1) அசம்பாவிதம் (6) கனி (7) மதம் (9) கரம் (10) அரி (11) பாவலன் (13)தாம்பு (14) வடம் (15)தும்பி (16)பசளை (18) காவ (20)நகம் (21) உபரி (22)கொடும்பாவி (23)திசை.

மேலிருந்து கீழ்

(1)அகம்பாவம் (2)சனி (3)பாமரன் (4)விதம் (5)தம் (8) திரிபு (9)கலம்பகம் (10) அம்பிகாபதி (12) வட (13) தாம் (15) துளை (17) சம்பா (19) வரிசை (20) நடு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 87 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — செல்வி ஜானகி தர்மலிங்கம்,
அருணோதயம், நாவலடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

2 ஆம் பரிசு — சிவராஜசிங்கம் பத்மயோகன்,
14/1, விதானையார் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு — அ. அரசகுலசேகரன்,
சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
சங்கானை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாராட்டுப் பெறுவோர்

(1) செல்வி சசி தங்கராசா,
48, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(2) நா. செல்லம்மா,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(3) ர. யோகதாசன்,
கோயில் குடியிருப்பு, கிளிநொச்சி.

(4) நா. சுந்தரலிங்கம்,
தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.

(5) திரு. சி. இளங்கோராசன்,
தம்பட்டியோலை,
உடுவில் வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜித்தின் புதிய ஜோடி

அசல் படத்தில் நடித்துவரும் அஜித் தன்னுடைய அடுத்த படம் பற்றியும் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார். இது அஜித்தின் 50ஆவது படம் என்பதால் இதில் அதிகளவு ஆர்வத்தை அவர் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது. இதற்காக நாயகி தேடும் படலம் இப்போதே ஆரம்பித்துவிட்டது. அஜித்தின் 50ஆவது படத்தில் அநேகமாக அவரது ஜோடியாக ஷம்மு நடிப்பார் எனத் தெரியவருகிறது. இவர் சாஞ்சிவரம் படத்தில் பிரகாஷ்ராஜின் அப்பாவி மகளாக வந்து அனைவரின் பாராட்டுக்களையும் அள்ளிக் குவித்தவர். அத்தோடு தெலுங்குப் பட உலகில் முன்னணி நடிகைகளில் ஒருவராகவும் ஷம்மு இருக்கிறார். அஜித்தின் படத்தில் நடிப்பதற்காகத் தன்னைத் தயாரிப்பாளர் அணுகியிருப்பதாக ஷம்முவும் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

காலம் முறிந்தது



தமிழில் அவ்வப்போது தலைகாட்டும் மாதவன் தன்னுடைய முழுக்கவனத்தையும் இப்போது ஹிந்திப்பட உலகின்மீது திருப்பியிருக்கிறார். அத்தோடு ஹிந்திப்பட உலகின் முன்னணி நடிகர்களோடு இணைந்து அவர்களுக்குச் சமனான வேடத்திலும் மாதவன் நடித்து வருகிறார். இந்நிலையில் அண்மையில் ஹிந்திப் படம் ஒன்றில் நடித்துக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் மாதவனின் முழங்காலுக்குக் கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதனால் காலில் கட்டோடு கட்டிலில் படுத்திருக்க வேண்டியநிலை அவருக்கு. எனினும் அப்படிக் கிடைத்த ஓய்வினைக்கூட வீணாக்க விரும்பாது உலக மொழிகளில் வெளியான சிறந்த திரைப்படங்களைப் படுத்திருந்தபடியே பார்த்து வருகிறார் மாதவன்.

ரம்பாவுக்குத் திருமணம்

உழவன் படம் மூலம் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகமான நடிகை ரம்பா ஒரு காலத்தில் தமிழில் முன்னணி நடிகையாக இருந்தவர். ரஜினி, கமல், விஜய், அஜித், பிரபு, கார்த்திக் போன்ற முன்னணி நாயகர்களுடன் இணைந்து நடித்தவர். இவர் நடித்த உள்ளத்தை அள்ளித்தா திரைப்படம் வசூலை வாரிக்குவித்தது. தமிழ்த் திரையுலகில் கனவுக்கன்னியாக விளங்கிய அதேநேரத்தில் ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், போஜ்புரி மொழிகளிலும் நடித்தவர். எனினும் காலப்போக்கில் திரையுலகிலிருந்து இவர் ஓரங்கட்டப்பட்டார். இப்போது இந்தக் கனவுக்கன்னிக்குத் திருமணமாகும் சந்தர்ப்பம் நெருங்கியுள்ளது. பிரபல தொழிலதிபரொருவரை நடிகை ரம்பா ஜனவரி 27ஆம் திகதி திருமணம் செய்யவுள்ளார். திருப்பதியில் மிக எளிமையாக இத் திருமணம் நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

திரைவிமர்சனம்- பழசிராஜா

மம்முட்டி, சரத்குமார், மனோஜ் கே.ஜெயன், சுமன், கனிகா, பத்மப்பிரியா போன்றோரின் நடிப்பில் ஹரிகரனின் இயக்கத்தில்தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் ஒரேநேரத்தில் வெளியாகியுள்ள திரைப்படம் 'பழசிராஜா'.கேரளாவி 1850களில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட மன்னனான பழசிராஜாவின் கதையை இத்திரைப்படம் கூறுகிறது. இந்தியா முழுவதையும் ஆக்கிரமிக்கும் வெள்ளையர்கள் பழசிராஜாவின் கோட்டைக்குள்ளும் நுழைகிறார்கள். இதனால் தன்னுடைய முக்கிய தளபதிகளுடன் காட்டுக்குள் சென்று தலைமறைவாகிறார் பழசிராஜா. அங்கு மலைவாழ் மக்களை ஒன்றுதிரட்டி வெள்ளையருக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பித்து அவர்களுக்குப் பேரழிவை உண்டாக்குகிறார். இதனால் நிலைகுலைந்துபோகும் வெள்ளையர்கள் பழசிராஜாவுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்கின்றனர். எனினும் பின்னர் திடீரென ஒப்பந்தத்தை வெள்ளையர்கள் மீறுவதால் மீண்டும் அவர்களுக்கெதிராகப் போரை ஆரம்பிக்கிறார் பழசிராஜா. ஆயினும் இம்முறை அதிநவீன ஆயுதங்களோடு வேறுநாட்டுப் படைகளும் வெள்ளையர்களுக்குத் துணையாக வருகின்றன. இதனால் பழசிராஜாவின் படைகளுக்குத் தோல்வி நேருகிறது. இறுதியில் எதிரிகளுடனான யுத்தத்தில் பழசிராஜா மரணத்தைத் தழுவுகிறார். பழசிராஜாவாக வரும் மம்முட்டி தன்னுடைய கம்பீரமான நடிப்பாலும் உணர்ச்சி மிகுந்த குரலாலும் பாத்திரமாகவே மாறிநிற்கின்றார். அவருடைய தளபதியாக வரும் சரத்குமாரும் தன்னுடைய நடிப்புத் திறமையை வெளிப்படுத்தத் தயங்கவில்லை. பத்மப்பிரியா வீரம் மிகுந்த மலைவாழ் பெண்ணாகவும், கனிகா பழசிராஜாவின் மனைவியாகவும் வந்து நடிப்பில் முத்திரை பதிக்கின்றனர். மலைவாழ் மக்களின் தலைவனாக வரும் மனோஜ் கே.ஜெயனும் மனதில் நிற்கிறார். இளையராஜாவின் இசை, இராம்நாத் ஷெட்டியின் ஒளிப்பதிவு என்னும் பலங்களின் துணையோடு காத்திரமான படமொன்றைப் படைத்திருக்கிறார் ஹரிகரன்.



புதிய வில்லன்



சரணின் இயக்கத்தில் வேகமாக வளர்ந்துவரும் படம் 'அசல்'. இதில் வித்தியாசமான வேடத்தில் அஜித் நடித்து வருகிறார். இப்படத்தில் வரும் வில்லன் பாத்திரம் மிக முக்கியமானது. இதற்குப் பொருத்தமான நடிகரைத் தெரிவு செய்வதில் சரண் நிறையவே குழம்பிப் போயிருந்தார். ஏற்கனவே வில்லனாக வெளுத்துக் கட்டிக்கொண்டிருக்கும் நடிகர்களை விடவும் புதிய வில்லன் ஒருவரை இப்படத்தில் நடிக்க வைத்தால் நன்றாக இருக்கும் என்பது அவரது எண்ணம். இந்நிலையில் ஹிந்திப் பட உலகில் வில்லனாகக் கலக்கிக் கொண்டிருக்கும் சுரேந்திரபால் என்பவரை இந்தப் பாத்திரத்திற்கு சரண் தெரிவு செய்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. இவர் பிரபுதேவா நடித்த மிஸ்டர் ரோமியோ படத்திலும் வில்லனாக வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bra & Petticoats

Solace Feder Deli World DELIA Baby Angel

DG Fashion Garment (Pvt) Ltd.

மிருதுவான இதமான சுகத்தைத்தந்து உங்களது தோற்றத்தை மெருகூட்டும்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான கடைகள் எல்லாவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம்

Ashokarama Road, Kondeniya, Dickwella.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com
Web:-www.newdgfashions.com

DG Brief & Vests

Glamour REGAL CREDO Xcellent Super Wear Bestwear apex

உங்களுக்கு காம்பீரமான தோற்றத்தைத் தரும் நாள்பூராகவும் உங்களுடன் இணைந்திருந்து உங்களுக்கு ஒத்தாசை புரியும் ஒரு நண்பன் DG.

ஆண்களுக்கான உள்ளாடைகள்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலயமான கடைகள் எல்லாவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம்

100% Combed Cotton Maximum Performance Quality Fabrics

Enhance Your Real Masculinity

DG Fashion Garment (Pvt) Ltd.

Ashokarama Road, Kondeniya, Dickwella. Sri Lanka.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com
Web:-www.newdgfashions.com

அறிமுகப்படுத்துகிறோம்!

TVS

கவர்ச்சிகரமான செலவை குறைக்கும் வாகனத்தை!



ஜெக்கட்டுடன் ஒரு ஹெல்மட்டும் இலவசம்

மேலதிக விபரங்களுக்கு,
ரொஸான் : 0777 266759

கைக்கு கிடைக்கும் பெரும் பணம், அதில் உச்ச அளவு சேமித்து, வாழ்கையை திட்டமிடவும், TVS மெட்ரோ சைக்கிள் ஒன்றை வாங்கினால், அனைவருக்கும் இந்த நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

குறுகிய கலத்தில் வாழ்கையை வெற்றி கொள்ள, நீங்களும் வாங்கி எடுத்து செல்லுங்கள TVS மெட்ரோவை...

- 4 ஸ்ரோக் 100CC எஞ்சின்
- எரிபொருளை சிக்கனப்படுத்தும் RCF & CCVTI தொழில்நுட்பம்
- இரண்டு வருட உத்தரவாதம் அல்லது 30,000 கிலோ மீற்றர் உத்தரவாதம்
- லீசிங் வசதிகளுக்கும் வழிகாட்டப்படும்
- 4 வாகனச் சேவைகள் இலவசம் மற்றும் பல நன்மைகள்

metro மெட்ரோ

TVS லங்கா (தனியார்) நிறுவனம்
757, சீர்மாவோ பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு 14
தொலைபேசி 0114 605200 :பக்ஸ் 0114 614909
வெப் : www.tvslanka.lk

நகரச் சுட்சியறை 100, ஸைட்பார்க் கோனர், கொழும்பு 2. தொலைபேசி: 4710456 நிறுவனரீதியான விற்பனை: 4714956
விநியோகப்பனை சுட்சியறை 20, ரொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு 6. தொலைபேசி: 4954375
மாத்தறை சுட்சியறை: 382, புதிய தங்காலை வீதி, பன்னிமுல்லை, மாத்தறை. தொலைபேசி: 041-4390809-11-12
யூ எல சுட்சியறை 162, நிகொழும்பு வீதி, யூ எல, தொலைபேசி: 4979189
நாடெங்குமுள்ள விற்பனை முகவர்களிடமும் கிடைக்கும்

United Motors

யூனியன் வங்கியில் கணக்கை ஆரம்பித்துப் பரிசுகளை வெல்லுங்கள்!

"மெகா தினம் சுப்பர் ட்ரோ" சீட்டிழுப்பில் பங்குபற்றுவதற்கு, உங்கள் சேமிப்புக் கணக்கில் ரூ.10,000க்கு குறையாத மீதியை அல்லது நடைமுறைக் கணக்கில் ரூ.5,000க்கு குறையாத மீதியை வைத்திருங்கள்.

2 வருடங்களுக்கான பெற்றோலுடன் மாருதி அல்டோ கார்

வைப்புத்தொகை போல இருமடங்கு பணம்

தங்க நாணயங்கள்

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 0714 770 333

UNION BANK

மெகா தினம்

SUPER DRAW

தலைமை அலுவலகம்: 15A, அல்பிரெட் பிளேஸ், கொழும்பு 3.
தொலைபேசி: 2 370870, 4 525525 www.unionb.com

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

நறுமணத்துடன் தங்க நகைகளை வெல்லுங்கள்...

Secrets

ரண் திலின வாசனா

ஏதாவது சீக்ரட்ஸ் வாசனைத்திரவிய பக்கற்றின் மேற்பகுதியில் உங்கள் பெயர் முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை குறிப்பிட்டு கீழ் உள்ள எமது முகவரிக்கு அனுப்பவும்

சீக்ரட்ஸ் ரண் திலின வாசனா
இல 146, டோசன் வீதி, கொழும்பு 02.

விண்ணப்பங்களை அனுப்பும் முதல் 500 பேருக்கு ரூபா 1,000/-

மாபெரும் இறுதிச் சீட்டிழுப்பில் 20 பேருக்கு ரூபா 15,000/- பெறுமதியான நகைகளுக்கான 20 பரிசுக்கூப்பன்கள் வழங்கப்படும்

சீட்டிழுப்பு 08 ஜனவரி 2010
(மாபெரும் சீட்டிழுப்பிற்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 31 டிசம்பர் 2009)

- கெப்பிட்டல் மஹாராஜா கூட்டுநிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் இந்த போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

WP/GT/2171

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட நாடகப் போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை மாணவர்களின் 'பன்டிற் குயின்' நாடகத்தின் ஒரு காட்சி இது.

நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் நிதிய அலுவலகத்தில். இடம்பெற்ற கலாசார விழா மற்றும் சிறுவர் சங்கமம் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி செல்வராணி செல்வதுரை சிறப்புரையாற்றுவதையும் அருகில் கௌரவவிருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் - சிறுவர்களின் கலை நிகழ்வுகளையும் படத்தில் காணலாம். (படம்:இரா.சுதா)

SINGER®
சைக்கிள்கள்
அனைவரினதும் தெரிவு...

உறுதியின் அச்சாணி
சிங்கர் ஸ்டேன்ட்ட்
சைக்கிள்கள்

நங்கையர்க்கே
உருவான
மோனாலீசா
சைக்கிள்கள்

ஊக்கமுள்ள
சிறுவர்களுக்கு
சூட்டி சைக்கிள்கள்

SINGER
உத்தரவாதத்துடன்
இலகு தவணைக்
கொடுப்பனவில்

நாடெங்கிலும் உள்ள
SINGER Plus, SISILWORLD, SINGER Mega
காட்சியறைகளில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம்

(011) 5 400 400
www.singersl.com

CSL

இன்றே சபதம் எடு!
பணத்தைக்
கரியாக்கி
பசும்பொன்னுடலைப்
பட்டமரமாக்கி
புகைத்தலுக்கு
உன்னுயிரைப்
பரிசாக வழங்கும்
மானிடனே யுன்
போதைப் பழக்கத்தால்
பேதையர் வாழ்வு
கேள்விக்குறியாச்சே!
புகைப் பழக்கத்தால்
உன்னுடலைப்
புகையாக்கும்மானிடனே!
இன்றே சபதமெடு,
புகைப்பழக்கத்துக்கு
இனியுன்
ஆயுள்வரை
விடுதலையென்று...
ஆ.சுவிஸ், திருமலை.

Loyolas
St.Patrick's Road,
Jaffna.

⇨ Marriage, Reception & Conference Halls A/C
⇨ A/C Rooms
⇨ Chinese & Sri Lankan Cuisine
⇨ Catering Section For all Occasions

For Futher details please Contact:
Loyolas
195,Main Street, Jaffna.
T.Phone : 021222 2110
Mobile : 0777 734083

From Samudra Book Publications
To train your child to shape his handwriting in British Style



Based on let's Learn English
MY COPY WRITING
GRADE 1 - 5
Available at Jaffna Annai Book Shop, Poobalasingham Book Shop,
& Book Lab, All Samudra Book Shop Outlets & Other Leading Book Shops
Island Wide. Contact : 0718140079, 0722136711

IDD
ரூ.5/-
Fixed Line
வியத்தகு லான்ட் லைன் கட்டணங்களுடன்
வெளிநாடுகளுக்கு அழையுங்கள்
இந்தியா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், சீனா ஆகிய நாடுகளின் எந்தவொரு தொலைபேசி இலக்கத்திற்குமான IDD அழைப்புகளை, நிமிடமொன்றிற்கு ரூ. 5/- என்ற ரீதியில், Per Second கட்டண முறை ஊடாக மேற்கொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு, எந்தவொரு Dialog வாடிக்கையாளர் சேவை நிலையத்தையும் நாடுங்கள்.
www.dialog.lk
Dialog

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெள்ளைத் தேவதை

அன்னம் என்ற பெயரை நாம் கதைகளிலும், கவிதைகளிலும் நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். நளன்- தமயந்தி கதையில் அன்னம் தான் தூது சென்று முக்கிய பங்காற்றியது.

அழகும் கம்பீரமும் உடைய பெரிய நீர்ப்பறவை அன்னம். இதன் உருவத்தை வைத்தே இது வாத்து இனத்தைச் சேர்ந்தது என்று சொல்லிவிட முடியும்.

அன்னத்தின் நடை மெதுவாகவும் அழகாகவும் இருக்கும். ஆணும் பெண்ணும் ஒரே மாதிரி காணப்படும்.

நீண்ட கழுத்தைக் கொண்டு நீருக்குள் நெடுந்தூரம் துழாவி இரை தேடும். புழு, நத்தை, மீன், முட்டைகள், நீர்த்தாவரங்களின் வேர், கிழங்கு, தண்டு, இலை, விதை முதலியவற்றை உண்ணும் போது மண் மற்றும் தேவையில்லாத பொருள்களை அலகால் வடிகட்டிவிட்டு உணவை மட்டும் விழுங்கும்.

வசந்த காலத்தில் ஏரிக் கரைகளில் நீர்த் தாவரங்களைச் சேகரித்து அவற்றை வைத்துப் பெரிய கூட்டை உருவாக்கும். அக்கூட்டின் பெண் அன்னம் 5 முதல் 9 முட்டைகள் வரை இடும். தாய் அன்னம் 35 முதல் 40 நாள்கள் வரை அடைகாக்கும். பெண்ணுக்கு ஆண் அன்னம் காவல் இருக்கும். அன்னத்தின் குஞ்சு முதலில் பார்ப்பதற்கு விகாரமாகக் காட்சியளிக்கும். பிறந்து ஓராண்டு கழித்துத்தான் குஞ்சுக்கு வெண்மையான, அழகான இறகு முளைக்கும். இரை தேடப் பழகிய குஞ்சுகள் சில காலம் வரையிலும் இரவு நேரங்களில் பெற்றோரைத் தேடி வருகின்றன.

உருவம் பெரிதாக இருந்தாலும் அன்னம் நன்றாகப் பறக்கும்.இவற்றில் சில இனங்கள் மணிக்கு 40-50 மைல் வேகமாகப் பறக்கின்றன. கூட்டமாகப் பறக்கும் போது V வடிவில் அணி வகுத்துச் செல்கின்றன.

சாதாரணமாக அன்னம் அறுபதாண்டு வரை உயிர் வாழும்.

அன்னங்கள் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பல்கிப் பெருகி இருக்கின்றன. இந்தியாவுக்கு அன்னங்கள் குளிர்ச்சியான காலங்களில் வெளி நாடுகளிலிருந்து வலசை வருகின்றன. பறக்கும் போது ஒரு வித ஒலி எழுப்பிக் கொண்டே செல்கின்றன.

அன்னத்தின் தூய வெண்மையான இறகும், நீண்ட கழுத்தும்,சிவந்த அலகும் அதற்கு மிகவும் அழகு சேர்க்கின்றன. அன்னம் நீரில் உடம்பை அசைக்காமல் நீந்திச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

அன்னங்களில் பல வகைகள் இருந்தாலும் அவற்றில் ஊமை அன்னம்,சீழ்க்கை அன்னம், காரன்னம்,கருங்கழுத்தன்னம் என்பவை முக்கியமானவையாகும்.

து.ஜெயந்தன், கந்தரோடை.

முத்தமிழ்

பாரதியாரின் அன்றைய அறிவுரை

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புமான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகின்றார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார், ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப்பார்.

நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை ''வாழ்க்கைத் துணை'' என்றனர். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு -என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும் உனது சுற்றத்தாருக்கும், பிறர்க்கும் நீ செலுத்தவேண்டிய கடமை.

பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும், புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இனப்பெருமை சேருதல், இவையெல்லாம் செல்வம்.

இன்பம் என்பது இனிய பொருட்களுடன் உயிர் கலந்து நிற்பது.பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸவஸ்துக்களை அனுபவிப்பது. வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. ''வீடு'' என்ற சொல்லுக்கு ''விடுதலை'' என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈட்டிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலையருள் செய்வான். தமிழா! உனது புருஷார்த்தங்கள் கை கூடுக!

மருத்துவ விஞ்ஞானி லூயி பாஸ்ரர்

நுண்கிருமிகளால்தான் பல நோய்கள் பரவுகின்றன என்பது கண்டு பிடிக்கப்படாமல் இருந்தால், இன்று பல நோய்களுக்குச் சிகிச்சை முறைகளையே கண்டறிந்திருக்க முடியாது. தொற்று நோய்கள், கிருமிகளால் தான் பரவுகின்றனவென்பதைக் கண்டு பிடித்து நிரூபித்தவர் பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானி லூயி பாஸ்ரர் ஆவார். வெப்பத்தினால் பல கிருமிகள் அழிந்துவிடும் என்பதையும் அவர் நிரூபித்தார்.

1882இல் பிறந்த பாஸ்ரர் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அடோன் பலார்டி என்ற விஞ்ஞான ஆராய்ச்சியாளரிடம் உதவியாளராகச் சேர்ந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். டார்டரிக் அமிலம் பற்றி அது வரை அறியாமல் இருந்த பல உண்மைகளைக் கண்டறிந்து கூறியதுதான் பாஸ்ரரின் முதல் சாதனை.

'வைன்' தயாரிப்பாளர் ஒருவருக்கு உதவுவதற்காக நொதித்தல் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியதன் காரணமாகத்தான் நோய்களை உண்டாக்கும் நுண்ணுயிர்களைப் பற்றி அறிய அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது. பாலை உயர் வெப்ப நிலைக்கு உயர்த்தி, சட்டென்று குளிரச் செய்யும் முறை அவர் பெயரால் 'பாஸ்டிய ரைசேஷன்' என்று கூறப்படுகின்றது. அந்த்ராக்ஸ் எனப்படும் நோய்க்கும் வெறிநாய்க்கடியினால் ஏற்படும் விளைவுகளுக்கும் மாற்று மருந்தொன்றை அவர் கண்டு பிடித்தார்.

அவர் தொடங்கி வைத்த விஞ்ஞான ஆய்வுகளை அடுத்து பலர் நுண்கிருமிகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு பல நோய்கள் வராமல் தடுக்கவும், வந்து விட்டால் போக்கவும் பல மருந்துகளைக் கண்டுபிடித்தனர். மருத்துவத் துறையில் ஒரு புதிய சகாப்தம் இதன் மூலம் தொடங்கியது.

நோய்த்தடுப்பு மருந்துகளுக்கு வழிகாட்டியவர் என்று அவருடைய புகழ் இன்று மருத்துவத் துறையில் நிலைத்து இருக்கிறது. டிப்தீரியா எனப்படும் கொடிய நோய்க்கு மருந்தைக் கண்டு பிடித்ததுடன் அவரது வாழ்நாள் முடிந்து விட்டது. காலரா, டைபாய்ட், பிளேக், அம்மை போன்ற கொள்ளை நோய்களை எளிதாக கட்டுப்படுத்த முடிகிறதென் றால் அதனை உண்டாக்கும் கிருமிகளைக் கண்டறிந்தது தான் காரணம். அதற்குத் தொடக்கம் செய்து வைத்தவர் லூயி பாஸ்ரர் தான்.

கல்லுக்குள் தேரைக்கும்...

மன்னன் சிவாஜிக்கு, தான் தான தருமம் செய்வது குறித்து பெருமை. மக்களின் பசியும் பட்டினியும் தன்னால்தான் போக்கப்படுகிறது என்ற கர்வமும் கொஞ்சம் தலையில் ஏறியது.அவனுடைய ஆணவத்தை அழிக்க அரசகுரு தீர்மானித்தார். சிவாஜியை மலைப்பகுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கேயிருந்த ஒரு பாறையைச் சுட்டிக்காட்டி, அதை அது இருந்த இடத்தில் இருந்து அப்பால் நகர்த்தும் படி கூறினார். சிவாஜியும் அவ்வாறே செய்ய, உள்ளேயிருந்து, ஒரு தேரை வெளிப்பட்டுக் குதித்து ஓடியது. பாறை அகற்றப்பட்ட இடத்தில் சிறிதளவு நீரும் இருந்தது. ''இந்தத் தேரைக்கு உணவும் நீரும் அளித்தது யார்; நீயா?'' என்று கேட்டார் குரு. சிவாஜி குழப்பத்துடன் குருவைப் பார்த்தார்.''ஒவ்வொரு உயிருக்கும் ஆண்டவன் தான் படியளக்கிறார். உன்னிடம் பொன்னையும் பொருளையும் கொடுத்து அனைவருக்கும் உதவும்படி உனக்கு அவர் உத்தரவிட்டிருக்கிறார். அவ்வளவுதான் தெரிந்துகொள்'' என்றார் குரு. சிவாஜி தன்னை உணர்ந்தார்.



நாணயக்குற்றி பாவனைக்கு வந்த கதை

நாணயக்குற்றி என்பது அதனைப் பாவிக்கும் நாட்டின் அல்லது அரசரின் முத்திரை அல்லது அடையாளம் பொறிக்கப்பட்டு அதன் பெறுமதியும் குறிக்கப்பட்ட ஓர் உலோகத்துண்டாகும்.

கிறிஸ்துவுக்குமுன் ஏழாம் நூற்றாண்டில் விதியன்ஸ் என்றழைக்கப்பட்ட நாட்டினரால் முதன் முதலில் நாணயக்குற்றிகள் உருவாக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. இந்த மக்கள் ஏஜியா மைனரில் வாழ்ந்த செல்வந்தர்களாகவும் பலம் வாய்ந்த மக்களாகவும் இருந்துள்ளனர்.

''இலக்ரம்'' (Electrum) என்றழைக்கப்படும் உலோகத்தால் இந்த நாணயம் உருவாக்கப்பட்டிருந்தது. இது இயற்கையான தங்கம் 75 வீதமும் 25 வீதம் வெள்ளியையும் கொண்டிருந்தது. ஒரு அவரை விதையைப் போல அமைந்திருந்த நாணயங்கள் 'ஸ்ரேட்டர்ஸ்' அல்லது 'ஸ்டேன்டர்ட்ஸ்' (Staters or standards) என்றழைக்கப்பட்டன.

இதை அவதானித்த கிரேக்கர்கள் தரமான உலோகத்தினாலான பணத்தின் பெறுமதியை உணர்ந்து தாங்களும் நாணயக்குற்றிகளைத் தயாரிக்க ஆரம்பித்தார்கள். அடுத்து வந்த 100 வருடங்களில் கிரேக்கத்தின் முக்கிய நகரங்களிலும் ஏஜியா மைனர், சிசிலி மற்றும் ஏஜீன் கடற் பிரதேச தீவுகளிலும் நாணயங்கள் புழக்கத்தில் வந்து விட்டன. தங்கத்தினாலான பொற்காசுகளே பெறுமதிமிக்கவையாக மதிக்கப் பெற்றன.

(ரம்யன்)

அடுத்தபடியாக வெள்ளியும் அதற்கடுத்ததாக செப்புக் காசுகளும் மதிக்கப்பெற்றன.

கிரேக்க நாணயங்கள் சுமார் 500 வருடங்கள் பாவனையில் இருந்தன. ரோமானியர்கள் இதனைப் பின்பற்றி மேலும் 500 வருடங்களுக்கு கொண்டு சென்றார்கள். பின் சிறிது காலம் நாணய பாவனை பின்னடைவு கண்டிருந்தது. கி.மு 500 இல் இருந்து கி.பி 1400 வரை பாவனையிலிருந்த நாணயங்கள் மெல்லியவையாகவும் கவர்ச்சியற்ற வையாகவும் இருந்துள்ளன. ஆனால் 15ஆம் நூற்றாண்டில் நாணய பாவனை மீண்டும் புத்தாக்கம் பெற்றன. உலோக பாவனை மேலும் அதிகரித்தது. உலோக நாணய உற்பத்தியில் கலை நுணுக்கங்கள் புகுத்தப்பட்டன.

ரோமன் நாணயங்கள் வருவதற்கு முன்பே பிரிட்டிஷ் நாணயங்கள் புழக்கத்துக்கு வந்துவிட்டன. நோர்மன் வீழ்ச்சியை அடுத்து பிரிட்டனில் 70 நாணய உற்பத்தி உலைகள் செயல்பட்டுள்ளன. ஆனால் 1850 ஆம் ஆண்டளவில் பிரிட்டிஷ் றோயல் நாணய உற்பத்திசாலை மேல் ஆதிக்கம் பெற்றிருந்தது. சிவில் சேவையின் ஒரு அங்கமாகவும் இந்த நாணய உற்பத்தி சேவை பரிணமித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடை அணிவதில் வேறுபாடுகள் கடைப்பிடிக்கப்பட்ட போதிலும் அது தனித்துவமான பண்பாட்டு அடையாளமாகக் கொள்ளப்பட்டது

ஒரு காலத்தில் ஏழைகளின் பிரதான உணவாக இருந்த ஒடியற்கூழ், இன்று அதிக செலவில் தயாரிக்கும் பண்பாட்டுப் பேணுகையின் அடையாளமாக அமைவதையும் அவதானிக்கமுடிகின்றது. புலம்பெயர் தமிழர்களிடையேயும் இந்த ஒடியற்கூழ் பாரம்பரியம் வழங்கி வருவதாகக் கூறப்படுகின்றது. பண்பாட்டு ஒட்டத்தில் இதன் இயங்கியல் சாத்தியப் பாட்டில் இத்தகைய நகர்வு இயல்பானதே எனலாம்.

பனம் பண்டம் போலவே சாமை, தினை, வரகு, குரக்கன் முதலானவற்றின் பயன்பாடும் மிகமிக அருகி விட்டது. இவற்றைப் பயிரிடுவதும் இப்போது குறைந்துவிட்டது. 19ஆம் நூற்றாண்டில் அரிசிப் பயன்பாட்டிலும் சற்று அதிகமாகவே முற்குறிப்பிட்ட சிறுதானிய வகைகள் பயன்படுத்தப்பட்டன என அறியமுடிகின்றது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலே நிலவுடைமையாளர்களுக்கும், வசதிபடைத்த சமூக மேலாதிக்கமுடையவர்களுக்குமே அரிசி போதியளவுக்குக் கிடைத்தது. மற்றவர்கள் பெரும்பாலும் சிறுதானிய வகைகளையும், கிழங்கு வகைகளையுமே தமது நாளாந்த உணவாகப் பயன்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

அரிசி முதலானவை வெளியிடங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டபோதும் ஏழைகள் அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய கொள்வனவு சக்தியுடையவர்களாக இருக்கவில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கது.

கோதுமை மாவின் (கூப்பன்மா) வருகையும் பயன்பாடும் முற்குறிப்பிட்ட உணவுப் பழக்கங்கள் அருகிப்போகக் காரணமாயின. கோதுமை மாவின் பயன்பாடு பற்றிய நாட்டுப் பாடல்களும் அரை வாய் மொழிப்பாடல்களும் (Oragetre) யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. எமது பண்பாட்டுப் பாரம்பரியத்திலே இணைந்துபோயிருந்த உணவுவகைகள் பல இன்று மறைந்து, மறந்து முதியவர்களின் நினைவுகளில் மட்டுமே நிலைத்திருக்கின்றது.

யாழ்ப்பாணச் சமூகத்தவரின் உணவு வகைகளிலே மீன், இறைச்சிப் பயன்பாடும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இருந்திருக்கின்றது. யாழ்ப்பாண குடாநாட்டைக் கடல் சூழ்ந்திருப்பதால் போதியளவு மீன்வளம் இங்குள்ள மக்களுக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சில பகுதிகளில் இன்றும் 'கறி' என்ற சொல் மீனைக்குறிக்கப் பயன்படுத்துவதையும் அவதானிக்க முடிகின்றது. (உதாரணம் கறிக்கடை, கறிக்காறி, கறிக்காறன்) மரக்கறி, மாமிசக்கறி என்ற பாகுபாடு இன்று வழக்கில் உள்ளது.

மரக்கறியை "ஆருதக்கறி" என வழங்கும் வழக்காறே இருப்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வழக்கில் இருந்தது என்பர். யாழ்ப்பாணத்திலே சில சாதியினர் பரம்பரையாகத் தாவரபோசனம் அருந்துபவர்களாகவே இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துச் சைவ மறுமலர்ச்சி இயக்கத்தினால் ஈர்க்கப்பட்ட பலர் மாமிச போசனத்தைத் தவிர்த்தனர். இதனால் இவர்கள் சமூகமேநிலையாக்க அந்தஸ்தினைப் பேணிக் கொள்ளவும் முயன்றனர். இந்த இடத் திலே டாக்டர் கிறீன் குறிப்பிடும் ஒரு கருத்தினைச் சுட்டிக்காட்டுவது எமது பிரதேச மக்களின் உணவுப் பழக்க வழக்கத்தின் பரிமாணங்களை அறிய உதவும் என்று நம்புகின்றேன்.

"Some of the respectable people here eat field
rats as well bats and lizarids"

யாழ்ப்பாணச் சமூகத்திற் கௌரவ மானவர்கள்கூட வயல் எலிகளையும் (அகிழான் என்பர்) வௌவால், உடும்பு முதலியவற்றையும் உண்கிறார்கள் என்று டாக்டர் கிறீன் குறிப்பிடுவது மிகுந்த கவனத்திற்குரியது. சமூக மேலாண்மையுடைய உயர்சாதிக்காரர் களுக்கு அவர்களது அடிமை குடிமைகள் இவ்வகையான இறைச்சிகளைக் கொண்டுவந்து கொடுத்திருப்பர் எனக் கருதலாம். காலப்போக்கில் அந்தஸ்துப் பேணுகை காரணமாக இத்தகைய உணவு வகைகளை மேனிலைச் சாதியினர் தவிர்த்திருப்பர். மிக அண்மைக் காலம் வரை அடிநிலை மக்கள் மத்தியிலே வயல் எலி முதலானவற்றை உண்ணும் பழக்கம் இருந்தமை நாம் அறியாதது அல்ல.

யாழ்ப்பாணப்பிரதேச மக்களின் பிரதான உணவு வகைகளோடு சிற்றுண்டிப் (பலகாரவகை) பயன்பாடும் வழக்கத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவற்றின் பாகமுறை பற்றியோ, பண்டங்களின் விவரம் பற்றியோ விளக்க வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்திலே தோன்றிய இலக்கியங்கள் பல இச்சிற்றுண்டி வகைகளைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. வகை மாதிரிக்குக் காதலியாற்றுப்படையில் வரும் ஒரு சில அடிகளைச் சுட்டிக்காட்டலாம்.

வீட்டுக்கள்ளினை விளைபத மெய்து நெல்
மாவினிற் கட்ட வண்புளிச் சப்பமும்
பனங்காய்க் களியுடன் சாமைமாக் குழைத்து
வனைபந்தினைப்போல் நெய்யிற் போட்டுத்
தட்டுத்தட்டாய்ச் சுட்டு மேலெடுத்து
.....
அருவிலை கொடுத்தே அரக்கு மாந்தும்
மாந்தர் வாய்க்கு வெங்கறிப்பாக
வளமுற உதவும் வடையின் கடகமும்
முறுக்கு, நல்வாய்ப்பன், மோதகம், இட்டலி,
பிட்டு, தோசை, புகழிடியப்பம்
எள்ளுக்கட்டியும்.....

இவற்றிலே சில இன்று அருகிப் போய்விட்டன. சிற்சில பிரதேசங்களுக் கெனச் சில சிற்றுண்டி வகைகள் சிறப்பானவையாகக் கருதப்படுவதும் உண்டு. உதாரணமாகப் பருத்தித்துறை வடை என்பதனைக் குறிப்பிடலாம். உலகெங்கும் பருத்தித்துறை வடையென வழங்கும் இந்த வடையை வடமராட்சிப் பிரதேசத்திலே கள்ளு வடை என்றே அழைத்தனர். பின்னர் சற்று நாகரிகமாகத் தட்டைவடை என அழைத்தனர். இவ்வுணவுப் பொருளின் பெயர்கூட ஒரு சமூகமாற்றப் பண்பாட்டின் அடையாளமாகப் புலப்படுவது கவனிப்புக்குரியது.

காலனித்துவ காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட தேயிலை, கோப்பிக்கு முன்னர் பால், மோர், பழங்கஞ்சி, பதநீர் முதலியனவே இப்பிரதேச மக்களின் பானவகைகளாக இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்றைய இளந் தலைமுறையினர் பழங்கஞ்சி என்றால் என்ன? என்று கேட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அது இன்று மறைந்து விட்டது. நாங்கள் மறந்தும் விட்டோம். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றிய குழந்தைப்பாடல் ஒன்றில் (இது ஈழத்துப்பாடல் என்று கூறப்படுகின்றது)

அம்மா மெத்தப்பசிக்கிறது
அப்பம் இரண்டு இப்போ தா
தந்தால் உடனே பசிதீரும்
தாகம் தீர மோருந்தா

மோரின் முக்கியத்துவம் இவ்வாறு புலப்படுத்தப்படுவதையும் சுட்டிக் காட்டலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே மா, பலா, வாழை, வெள்ளரி முதலான பழவகைகளும் பாவனையில் இருந்தன. இன்றும் இருக்கின்றன. யாழ்ப்பாண மாம்பழத்தின் சுவைபற்றிப் பலரும் விதந்து கூறுவர். குறிப்பாகத் தென்னிலங்கையில் யாழ்ப்பாண மாம்பழத்திற்குத் தனியானதோர் மதிப்பு இன்றும் உண்டு. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாண மாம்பழத்தின் சுவைபற்றிக் கவிஞர் சச்சிதானந்தன் பின்வருமாறு பாடியுள்ளார்.

நீதி பிழைப்பிக்கும் நோய்மை தவ்றுவிக்கும்
பாதிப் படிப்பில் பதவிதரும் - ஏதுக்கும்
ஒம்பட்சைவிக்கும் ஒன்றன்றோ யாழ்ப்பாண
மாம்பழத்துத் தீஞ்சுவையின் மாண்பு

வெறுமனே நகைச்சுவையாக மாத்திரமின்றி யாழ்ப்பாணத்தவர்கள் மாம் பழத்தைப் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்திய பாங்கும் இப்பாடலின் உட்பொருளாகக் கொள்ளத்தக்கதை அவதானிக்கலாம்.

ஆடை அணிகலன்கள்

19ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உடை மற்றும் அணிகலன்கள் பற்றிய விவரங்களைக் கண்டுகொள்ள எமக்கு உதவுபவை இலக்கியங்களும், மிஷனரிமாரின் குறிப்புகளும், அக்காலத்திலே எடுக்கப்பட்ட புகைப்படங்களும், முதியவர்கள் தரும் வாய்வழிச் செய்திகளுமே யாகும். அக்காலத்து உடை மற்றும் அணிகலன் வகைகளை ஆண்களுக் குரியவை, பெண்களுக்குரியவை என இரண்டாகப் பகுத்து நோக்கலாம்.

ஆண்களின் உடையும் அணிகலன்களும்

யாழ்ப்பாணத்து வேளாளர்களின் உடையைப் பற்றிப் பல்டேயஸ் பின்வருமாறு குறிப்பிடுவார்.

..... வேளாளர் சீலையை இடுப்பிற் கட்டிக் கால்களுக்குக்கூடாக இழுத்துச் சொருகிக் கொள்ளுவார்கள். (அதாவது தாறுபாய்ச்சிக் கட்டுதல்) காலிற் செருப்பு தொடுப்பார்கள். மேற்சொல்லிய அரைச் சீலையிலே மடிவிட்டு அதிலே வெற்றிலை பாக்கும் தேவையான போது பாவிப்பதற்குக் கொஞ்சம் கடதாசியும் (ஓலைச்சுவடியாக இருக்க வேண்டும்) வைத்துக் கொள்வார்கள். இடையிலே ஒரு வெள்ளி கட்டிய உறைக்குள்ளே ஒரு கத்தி தொங்கவிட்டுக் கொள்வார்கள் (வில்லுக்கத்தியாக இருக்க வேண்டும்) இதனோடு ஒரு வெள்ளி கட்டிய எழுத்தாணியும் வைத்திருப் பதுண்டு

பல்டேயஸ் இங்கு வெள்ளாளர்கள் என்று குறிப்பிடுவது சுதேச கிராம அதிகாரிகளை எனக் கருதலாம் வெள்ளாள சமூகத்தினரே யாழ்ப்பாண அரசர் காலம்முதல் கிராமத் தலைமைக் காரர்களாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பல்டேயஸ் குறிப்பிடும் சேலையிலே மடித்துவிட்டுக் கட்டும் மரபு மிக அண்மைக்காலம் வரை யாழ்ப்பாணத்திலே காணப்பட்டது. ஆண், பெண் இருபாலாரும் மடிவிட்டுக் கட்டி அதிலே தமக்குத் தேவையான சில பொருள்களை (பணம் உட்பட) பத்திரமாக வைத்திருப்பர்.

உடுப்பிலே விடும் மடிபற்றி மரபுத் தொடர்களும் பழமொழிகளும் நாட்டுப் பாடல்களும் யாழ்ப்பாணத்திலே வழங்கி வருவதை இன்று அவதானிக்கலாம்.

உ+ம் மடியிலே கை வைக்கின்றார், மடியிலே கட்டி வளர்த்தல், அடிமடியைத் தேடுதல், மடிப்பிச்சை முதலானவை.

பெரும்பாலான ஆண்கள் வேட்டி, சால்வை முதலியவற்றையே அணிந்தனர். சால்வையைச் சவுக்கம் என அழைக்கும் வழக்காறும் இருந்தது. வேட்டியிலும் எட்டுமுழ வேட்டி, நான்கு முழவேட்டி என இரண்டு வகை வேட்டிகள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாக தமிழர்களின் பண்பாட்டு அடையாள மாக இவை விளங்கின 'உன்பதுநாழி உடுப்பது நான்குமுழம்' என்ற நீதிப்பாடல் நாம் அறியாதது அல்ல.

அக்காலத்தில் ஒருவரின் உடையைக் கொண்டு அவரின் சாதி சமூக அந்தஸ்து முதலானவற்றைக் கண்டுகொள்ளலாம். வேட்டியை உடுக்கும் முறையிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்திலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் சால்வை என்னும் மேலாடையை அணிய அனுமதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்திலே யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பிலுள்ளோர் தங்கள் உடைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முற்பட்டபோது உயர் சாதியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்திற் கொமாண்டோராகப் பதவிவகித்த சுவாடக்குறூன் வேளாளரல்லாத மற்றைய சாதியினர் சிலருக்கு உத்தியோகங்களை கொடுத்தான். வேறு சாதியினர் உத்தியோக உடைதரிப்பதை வேளாளர் விரும்பவில்லை. யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் இடம்பெறும் பின்வரும் பகுதி அக்காலத்தில் யாழ்ப்பாணத்தவரின் உடை பற்றி யெழுந்த பிரச்சினையை அறிய உதவுகின்றது.

''எளிய சாதிகள் தத்தம் உடைநடைகளை மாற்றத் தொடங்கியதைப் பற்றி அவன் (சுவாடக்குறூன்) பின்வருமாறு யாழ்ப்பாண அரசியற் சங்கத்தாருக்கு எழுதியிருக்கிறார்.

கீழ்சாதிகள் தங்கள் உடை முதலிய வைகளைப் பற்றிய ஒழுங்குகளை அனுசரிக்கும்படி செய்யவேண்டும். இதுசில ஒழுங்கீனங்கள் உண்டாகியிருக்கிறதாகக் கேள்வி. இவர்கள் சரியான மாதிரிச் சீலை கட்டிக் கொள்கிறார்கள் இல்லை. தலைமயிரை வெட்டாமலும், காதிற் பொன்கம்பிகள் போடாமலும் திரிகிறார்கள். இதனால் இவர்களை யாரென்று தெரியாமற் போகிறதென்றும், இது தங்களுக்கு ஒரு அவமானமென்றும் சாதியாளரான 'கொனறாடர்ஸ்' (இவர்கள் மேல் சாதியினர் போலும்) முறைப்படுகிறார்கள். இவ்விஷயமாய் இலங்கைத் தேசாதிபதியாகிய லோறன்ஸ்பில் கவணரால் 1686ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18ஆம் திகதி ஓர் 'பிளக்காற்' கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

சமூக மேலாதிக்கமுடையவர்களே வேட்டி, சால்லை, தலைப்பாகை (இதில் பலரகம்) அணிய அனுமதிக்கப்பட்டனர்.

காலனித்துவ அரசு சுதேச பிரபுக்களுக்கு அல்லது முதலியார்களுக்கென வரையறுக்கப்பட்ட சீருடைகளைப் பற்றிய விவரத்தினை உத்தியோக பூர்வமாகவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

படித்த மத்தியதர வர்க்கத்தினர் வேட்டியுடன் சேட், கோட் முதலிய வற்றை அணிந்தனர். படிப்பின் மூலம் தம் அந்தஸ்தினை உயர்த்திக் கொண்டவர்கள், காலனித்துவ நிர்வாகப் பணியில் இணைந்த சுதேசிகள் வேட்டி அல்லது நீளக்காற்சட்டை, சேட், கோட் முதலியவற்றுடன் தலைப்பாகையும் அணிந்தனர். காலனித்துவ பிரபுத்துவப் பாரம்பரியத்திற்கும் சுதேச மேலாண்மைப் பாரம்பரியத்திற்கும் அமைதி காணும் வகையில் உடைகள் பயன்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்துச் சுதேசிகள் மிஷனரிமார் கொடுத்த ஆங்கிலக் கல்விப் பாரம்பரியத்தினால் விதேசிகள் ஆவதைப் பற்றி 1847ஆம் ஆண்டு மானிப்பாயில் வைத்தியப்பணியாற்றிய டாக்டர் கிறீன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''வேட்டி.. காற்சட்டையாகவும், சால்வை.. மேற்சட்டையாகவும் தலைப்பாகை... தொப்பியாகவும் தாவரபோசனம்... மாமிசபோசனமாகவும், மண்குடிசை... கல்வீடாகவும் மாற்றம் அடைகின்றன என்றே எண்ணுகிறேன். கிறிஸ்தவர்கள் ஆகாமல் தேசியத்தை இழப்பவர்களையே நான் காண்கிறேன்''

டாக்டர் கிறீனின் கவலையெல்லாம் கிறிஸ்தவத்தை உண்மையாக உள்வாங்காமல், வெளித் தோற்றத்திலே ஐரோப்பியப் பண்பாட்டுக்கு மாறுகின்றார்கள் என்பதாகவே அமைகிறது. ஆனால், இக்கூற்றின் உள்ளீடாக அமைவது யாழ்ப்பாணச் சுதேசிகளின் பண்பாட்டு அடையாளமாக வேட்டி, சால்வை, தலைப்பாகை முதலியனவே கருதப்பட்டன என்பதாகும். *(வளரும்)*

யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைந்தவையும் 2

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா நிகழ்த்திய அமரர் துணைவேந்தர் சு.வித்தியானந்தன் நிகழ்வுப் பேருரை ஞாயிறு உதயனில் தொடர் கட்டுரையாக வெளிவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகளால் நோய் பரப்புவதைக் கட்டுப்படுத்துவதே நியாயம்

அதற்காக அவைகள்மீது குற்றம் சுமத்துவது தவறு

"வணக்கம் பெரியவரே!

நாங்கள் மக்கள் மனம் நிறைந்த நாளிதழின் நண்பர்கள்."

"ம், என்ன கேட்க விரும்புகிறீர்கள்?"

"மிகவும் சுவாரஷ்யமாகவும், விறுவிறுப்பாகவும் அதே நேரத்தில் புதுமையானதுமான இந்த வழக்கினது தீர்ப்பு இன்று என்பதால் அதனை நேரில் பார்த்தறிய வந்திருக்கிறீர்கள் போலத் தெரிகின்றது."

"ஆமாம் தம்பி! விலங்குகளாக விருப்பங்கொண்டு அதுவும் மனிதர்களால் நடத்தப்படும் வழக்காடு மன்றுக்கு வந்து சாட்சியக்கூண்டிலேறி நீதி கேட்கும் பாங்கு இதுவரை என் வாழ்விலே அறிந்திராத ஒன்று. அதே நேரத்தில் சிந்திக்க வேண்டியதுமாகும். இல்லையா?"

"ஆமாம் ஐயா! நீங்கள் கூறுவது சரியே! ஆனால் இந்த வழக்கு பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன? கூறுவீர்களா?"



நிச்சயமாக!

நான் காலங்காலமாக கால்நடைகளை வளர்த்து வருபவன். என்னிடம் 400 கோழிகளும் 10 ஆடுகளும் 15 பசுக்களும் உண்டு. எப்படி என்று தம்பி தெரியவில்லை,

அவையெல்லாவற்றிற்கும் இப்படியொரு வழக்கு நடைபெறுவது தெரியும். இந்த விசயத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழுக்கென முத்தான மூன்று நாளிதழ்களும் செய்யும் சேவை அளப்பரியது. இந்த நாளிதழ்களனைத்தும் பட்டி தொட்டியெங்கும் செய்திகளைக் காவிச்செல்வதில் முதலிடம் வகிக்கின்றன. இதுவொரு தலைசிறந்த சமூகத் தொண்டு. என் வீட்டு கால்நடைகள் அவையெல்லாம் சேர்ந்து தங்கள்து பிரதிநிதியாக என்னை, அதுவுமொரு மனிதனை அனுப்பியிருப்பது தான் வேடிக்கை."

"நன்றாகச் சொன்னீர்கள் பெரியவரே!"

"எங்களது கால்நடைகள் நம்பியும் நம்பவும் நடப்பவர்கள். அவர்களுக்கு மனி தனைப் போல 'நம்பிக்கைத் துரோகம்' என்னவென்றே தெரியாது. இன்றொன்று சொல்லி இன்னதொன்று செய்யும் நாக்கில் நரம்பில்லா நச்சுப் பிராணிகளென்றால் மனிதர்களைத் தானே நல்லதொரு உதாரணமாக்கலாம்."

"உங்கள் வீட்டு கால்நடைகளின் பிரதிநிதியான நீங்கள் இவ்வழக்குப் பற்றி என்ன கூறு விரும்புகிறீர்கள்?"

"எனக்குப் பட்டதை அப்படியே கூறுகின்றேன். ஏனெனில் நான் ஒரு கிராமத்தவன். எனக்கு இருக்கின்ற ஒரு நாக்கை வைத்துக் கொண்டு அப்படி இப்படி உவயல் போல பிரட்டிக் கதைக்கத் தெரியாது. உள்ளொன்று வைத்து புறமொன்றும் பேசத் தெரியாது."

"நல்லது! உங்களது கருத்தைக் கூறுங்கள்."

"இன்று இந்தத் தீர்ப்பு தீர்க்கமானதாக இருக்கவேண்டும். நடுநிலை தவறான நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் தம்பி! விலங்குகளும் இப்பூமியின் ஓரங்கமே. ஒருவர் உயிர்வாழ இன்னொருவரின் உயிரை எடுப்பதும் அவரை இம்சிப்பதும் சரியல்லவே."

"மேலே சொல்லுங்கள்."

"விலங்குகளால் பரவுகின்ற தொற்று நோய்க்கிருமிகளைக் கட்டுப்படுத்த வழிபார்க்க வேண்டுமேயொழிய அதற்காக விலங்குளை ஒட்டுமொத்தமாக குற்றவாளிகளெனக் கூற முடியாது. ஐந்தறிவு ஜீவன்களாகவொரு உயிரினம் எங்களுடன் வாழுவதில் நாங்கள் பெருமை கொள்ள வேண்டும். இந்தப் பூமியில் அவற்றுக்கென இடத்தைக் கொடுத்து அவை வாழ வழிசெய்தல் அவசியமன்றோ.?"

"நல்ல கருணை உள்ளம் உங்களுக்குப் பெரியவரே! ஆனால் அவற்றினால் உயிர் கொல்லி நோய்கள் மனிதனுக்குப் பரவுகின்றதே! அந்த வகையில் அவற்றை அழிக்கத்தானே வேண்டும். யாழ்ப்பாணத்திலே டெங்கு நோயினால் இருவர் இறந்து விட்டார்களாம். தென் பகுதியில் பலர் பன்றிக் காய்ச்சலால் இறந்து விட்டார்களே."

"நல்ல தம்பி நீங்கள்! செய்திகளை விரல் நுனியில் வைத்திருக்கும் உங்களது அறிவுத்திறமையைப் பாராட்டுகிறேன். ஆனால் இந்த நோய்கள் மனிதனில் ஏற்படுவதற்கு அவர்களே காரணம் என ஏன் நீங்கள் யோசிக்கவில்லை?

எனக்குத் தெரிந்ததை உங்களது பத்திரிகையிலிருந்து வாசித்ததை வைத்துக் கொண்டு தான் இவ்வளவும் பேசுகிறேன். இது இந்த கிராமத்தவனுக்கு உங்களது பத்திரிகைகள் தந்த அறிவு.

டெங்கு நுளம்பு நீர் நிலைகள் என ஆங்காங்கே உள்ள சிரட்டைகள், ரயர்கள், பேணிகள் என நாங்கள் கவனமில்லது எறிந்ததில் மழைநீர் தேங்கி அதிலே இலகுவாகப் பெருகிவிடுகின்றது.

இது பற்றி மருத்துவத்துறையும் ஊடகங்களும் திரும்பத்திரும்ப எவ்வளவு சொல்லியும் எங்களது மக்கள் இதனை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லையே. எங்களை எங்களது சூழலைச் சுத்தமானதாகவும் கழிவுகளை ஒழுங்காக அகற்றியும் நீர் தேங்கியிருக்காதவாறும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு எங்களுடையதல்லவா? கிராமத்தவன் எனக்குப் படிப்பறிவில்லாது விட்டாலும் இந்த சூட்சுமம் புரிந்த அளவுக்கு நகரத்து மக்களுக்கு இது புரியவில்லையா? அல்லது புரிந்தும் ஏனோ தானோ என இருக்கிறார்களா? நோயென்று வந்தவுடன் மருத்துவ மனைக்குக் கொண்டோடுவதும் அங்கே மருத்துவர்கள் சரியாகக் கவனிக்க வில்லையா?"

"இன்னும் ஆரம்பமாகவில்லை "இது பற்றி நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?"

"மனிதர்களுக்கு ஆறறிவு மட்டும் இருந்துவிட்டால் அவர்கள் மேன்மையானவர்கள்? எங்களை அவர்கள் இம்சிப்பதும் சுதந்திரமாக வாழவிடாது தடுப்பதும் தவறன்றோ? வாயிலலா ஜீவன்கள் என எங்களுக்கொரு பட்ட மும் சூட்டி எங்களுக்குப் பகுத்தறிவு எதுவுமேயில்லையெனப் பறைசாற்றுவதில் என்ன ஆதாரம் உண்டு.

பசுமரத்தாணி போல என்பார்களே! அங்கே நாங்கள் பசுமைக்கு உதாரணம். பசு+மை எனப் பிரித்துச் சொல்லி எங்களது பாலுக்கு அதுவும் உதாரணம். அனைத்தும் தரும் கடவுள் என புலம்பலுக்கும் நாமே உதாரணம். எங்களது கழிவான சாணம் காயவைத்து அடுப்பு எரிவதற்கு விறகாக, அதை எரித்து திருநீறாகச் சாணத்தையும் அதனுடன் சிறுநீரை வடித்து நொதிக்க வைத்து இயற்கைப் பசளையாக, பாலை அப்படியே காய்ச்சி குடிக்கவும், ஆற விட்டு நுண்ணங்கியை விட்டு தயிராக, யோகெட் எனவாக்கி, தயிரை கடைந்து நெய்யைப் பிரித்தெடுத்து மீதியை மோராக்கி, போதாக்குறைக்கு எம்மைக் கொலை செய்து இறைச்சியாக்கி, தோலை காயவைத்து மத்தளமாக்கி இந்தளவிற்குப் பயன்படுத்துகிறார்களே, எங்களது பாலை குடித்தால் மட்டும் எப்படி மந்தபுத்தி வரும். நாங்கள் கொடுக்கும் சுத்தமான பாலுக்கு கல்சியம் கார்பனேற்றினைக் கரைத்து கலந்து கொடுக்கும் இழி செயலை என்னவென்பது?

நாங்கள் அங்கு தேடி இங்கு தேடி இருக்கின்ற புல் பூண்டுகளைக் கடித்து அதை இரத்தமாக்கி இரத்தத்தை பாலாக்கி கொடுக்கும் போது மனிதர்களால் தாம் பெற்ற மகவுக்குப் பால் கொடுக்க முடியவில்லையே. நாம் கொடுத்த பாலைப் பவுடராக்கி விதம் விதமாய் கடைகளிலே அடுக்கி வைத்திருக்கிறார்கள். கறந்த பாலினுள் அதனுள் நீர் கலந்து சைக்கிளிலே வீடு வீடாக விற்கிறார்கள். தூய்மையானதாக கொடுத்த பாலை இப்படியாக்கிவிட்டார்களே! எங்களது இரத்தத்தையல்லவா குடிக்கிறார்கள். நிறம் வெள்ளையே தவிர உள்ளுக்குள் எல்லாம் ஒன்றுதானே."

"பசு அவர்களே! மனிதர்கள் மீது கோபத்துடன் இருக்கிறீர்கள் போல!"

"பொறுமைக்கு உதாரணம் நாங்கள். எங்களிடமிருந்து இதை மனிதன் கற்றுக் கொள்ளவேண்டியது இன்னும் நிறையவே உண்டு. நீங்கள் இவ்வளவு கேட்டதற்காக இதையும் கூறுகின்றேன். எங்களது சாணம் எங்களுக்குக் கழிவு. ஆனால் உங்களுக்கு விபூதி. தாவரங்களுக்கு கூட்டெரு. வறியவர்களுக்கு அவர்களுடன் காய்ந்து எரிக்க விறகு. பூச்சிகளுக்குக் குறிப்பாக சாணம் உருட்டும் வண்டுக்கு உணவு. கொட்டிலில் வாழவிரும்பும் வயதான வருக்கு அவர் மனை மெழுகுவதற்கு நல்லதொரு பசை. மண்புழுவுக்கு பிடித்த உணவு. இவ்வளவும் எங்களது கழிவுகள் தந்த பரிசுகள். எங்களைப் பார்த்து இனியும் இளக்காரமோ? ஆனால் எமக்கு உணவு தருவதில் மட்டும் இவ்வளவு கஞ்சத்தனம் உமக்கு. உங்களது சமையலறை, வயல் மற்றும் தோட்ட கழிவுகளை நாமுண்டு எமது கழிவை உமது பயனாக ஆக்கினோமே! இந்த விந்தை எங்கு நிகழும்?

இவையனைத்திற்கும் மேலாக ஒரு சாரார் எங்களைக் கோமாதா என விளித்து வாகனமாக்கியும் பார்க்கிறார்கள். அந்த வகையில் இது மன ஆறுதல் தரும் விடயமல்லவா. நாம் எம்மையுருக்கி, பாலாக்கி, மனிதருக்குக் கொடுப்பதை நினைத்தாவது இனியொரு தடவை இழிவுபடுத்தி செய்யும் செயல்களை நிறுத்தச் சொல்லவும். அங்கே பாருங்கள் எங்களைப் போன்ற வீட்டு மிருகங்களும் பறவைகளும், ஊர்வனவும், வன விலங்குகளுமென ஒரு பட்டாளமுமே அணிதிரண்டு வந்து கொண்டிருக்கின்றன. இனி வருங்காலம் மனிதனுக்குச் சோதனையான காலம்."

"நன்றாகவே குறிப்பீட்டீர்கள்."

"வணக்கம் தம்பி!"

"உங்களிடம் இந்த வழக்கின் தீர்ப்பு எப்படியிருக்கும் என அறியலாமா?"

என்னைக் கேட்டால் சற்று வித்தியாசமாகவே யோசிப்பேன். வர வர மனிதனுக்குச் சமூகப் பொறுப்புணர்வு என்பது குறைந்து செல்லத் தொடங்கிவிட்டது. நான் இப்போது படிக்கும் 6ஆம் தரத்தில் இருந்து கொண்டு இதனைச் சொல்ல என்னைப் பார்த்து எவரும் நகைக்கக் கூடும். ஆனாலும் இது மாதிரியான தீர்ப்புத் தான் எங்களைப் போன்ற மனிதருக்குச் சரி.

நுளம்பைக் குற்றவாளியாக்கு வதை விடுத்து அசட்டையாகத் தனது செயலினால் அவற்றைப் பெருக வழி செய்பவர்க்குத் தண்டனை கொடுங்கள். வீட்டிலே அழகுக்காகப் பூஞ்செடி வளர்த்துக் கவனமில்லாது நீர் தேங்க விட்டு நுளம்புகளைப் பெருக்குபவர்களுக்கு நுளம்புகளுக்கு அறிவித்து இன்னும் கடிக்கச் சொல்லுங்கள். உயிர் காக்கும் இரத்ததானம் ஒருதரமாவது செய்யாத மனிதரைத் தேடி கடிக்கச் சொல்லுங்கள். சூழலையும் வீட்டையும் தன்னையும் சுத்தமாக வைத்திருக்காதவர்களைச் சூழ்ந்து கடிக்கச் சொல்லுங்கள். இவர்கள் இச் சமூகத்தில் இருந்தென்ன இறந்தென்ன?

(16 ஆம் பக்கம் பார்க்க...)

கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

விலங்குகளால் மனிதன் பெறும் பயன்களோ ஏராளம்

மிருகவதைக்கு எதிரான விழிப்புணர்வு மனிதனுக்கு அவசியம்

விலங்கிலிருந்து மனிதனுக்கு..... சேதங்களும், தொற்று நோய்களும் 14

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருமணங்கள் மெய்ப்பட, இலவச சேவை

01.12.2009, கார்த்திகை தீபத்திருநாளில், அருள்முருகன் திருமணப் பணியகம் சகல மணமக்களுக்கும் இலவச திருமண சேவையைப் அறிமுகப்படுத்துகின்றது. கண்ணியமிக்கவர்கள் புரிந்துணர்வுள்ளவர்கள் தோடர்புகளுக்குரியவர்களாவர். தகுந்த மணமக்களையும் நம்பகமான திருமணசேவையையும் தேடிக்கொண்டிருப்போருக்கு நம்பிக்கை அளிக்கும் வாய்ப்பு! வாவிரும்பும் நேரம், திகதிகளை உறுதிப்படுத்த 222 9374, இல 3, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், பலாலி வீதி, யாழ்ப்பாணம். (92539)

100 ஆவது பிறந்தநாள் ஞாபகார்த்தமும் 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

சூசைப்பிள்ளை அருளானந்தம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

மலர்வு: 26.11.1909
உதிர்வு: 02.12.1989

'வாழ்ந்தாலும் இறந்தாலும்
நாம் ஆண்டவருக்கே
உரியவர்கள்' (உரோ. 14.8)

வருடங்கள் சென்றாலும் நீங்காத்துயர் தன்னில்
நீந்துகின்றோம் நாம்,
எம்மை அன்புடன் பேணிக்காத்து
கடமைதனை ஆற்றி, மறைந்துவிட்ட உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இவரின் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

'வசந்தம்',
சூராவத்தை, சுன்னாகம்

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்		மறைவு
16		21
★		★
07		11
★		★
1950		2007

அமரர் சின்னத்தம்பி யோகராசா

(திதி: துவாதசி)

பாரினில் பூத்தவரே,உழைப்பால் உயர்ந்தவரே
எமக்குக் குருவும் நீங்களே எமது வாழ்க்கைக்கு வழி காட்டியும் நீங்களே
பாரினில் எம்மை பரிதவிக்க விட்டுச் சென்றதும் ஏனோ,
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் நினைவுகள் உங்களையே சூழ்ந்திருக்கும்.....

மிதிலை,
மணற்பகுதி, புத்தூர். (92460)

குடும்பத்தினர்.

8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்		மறைவு
24		27
★		★
09		11
★		★
1952		2001

திருமதி அருள்ராசலிங்கம் ரேவதிதேவி (கிளி)

திதி:துவாதசி

அழியாத உங்கள் நினைவுகள் என்றும் எங்கள்நெஞ்சங்களில் அணையாத தீபமாய் ஒளிர்ந்துகொண்டிருக்கும்.

என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

குப்பிளான், ஏழாலை. (92542)

பிரிவால் துயருறும்:
கணவர், தாய்,
சகோதரர்கள்.

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப அழகான குண மான 5 அடி 8 அங்குலம் உயரமான 35 வயது M.B.B S அரசினர் டாக்டர் மணமகனுக்கு மணமகளைத் தேடுகின்றோம். டாக்டர் விரும் பத்தக்கது. விவரங்களுக்கு:-
0771723464, 0113150303

HOUSE VACANT

House within the MC limits of Jaffna. Available for Rent.Suitable for NGO's Contact-
No.0773564662

விற்பனைக்கு

ஏ-9 பாதைக்கு அருகிலுள்ள மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகாவித்தியாலயச் சந்திக்கும் பெருங்குளம் சந்திக்கும் இடையில் உள்ள 5 பரப்பும் 6 குளியிலும் அமைந்த சகலவசதி களுடன் கூடிய பெரிய வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0115645655, 0776305274 (91281)

இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட், ஊர்சேவல்கள், முட்டை என்பன மிகமலிவான விலையில் வேண்டிய அளவு களில் எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம். மொத்த மாகவும் விற்பனைசெய்யப்படும். விலைக் கழிவு கள் உண்டு. தொடர்பு: மல்ரிபாம் சென்ரர்,
தொடர்பு: 0217912783 (92540) 61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி.

விற்பனையாகின்றது

புலோலங்குழல் கலை கர்நாடக இசை இலகு கற்கை முறை எவரும் பயிலும் நூல்.
பெறுமிடங்கள்: லங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, லஜன்ஸ் பான்சிகடை (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்). (91373)

காணிவிற்பனைக்கு

சங்கானை தேற்கில் அந்திரான் வாய்க்காலிற்கு அருகில் 2½பரப்பு தென்னம்பிள்ளைக் காணியும், 7½ பரப்பு நேற்காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0575675640, 0774121918 (92472)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (92111)

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு நீதிமன்றம் அபராதம்

யாழ்ப்பாணம்.நவ.29

அனுமதிப்பத்திரமின்றி லொறியில் மணல் ஏற்றிச்சென்ற சாரதிக்கு சாவ கச்சேரி நீதிமன்றம் 90 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் லொறியினை டிசெம்பர் 30 ஆம் திகதிவரை நீதிமன்றம் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப் பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரினால் நீதிமன் றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 25 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் லொறியின் சாரத்திக்கு 90 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அபராதத் தொகை செலுத்தத் தவறின் 36 மாதங்கள் சாதா ரண சிறைத் தண்டனை அனுபவிக்குமா றும் லொறியினை டிசெம்பர் 30 ஆம் திகதி வரை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட் டது. (50-207)

சர்வதேச மாற்று வலுவுடையோர் தினத்தையொட்டிய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.29

கல்வி அமைச்சினால் சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினம் அனுஷ்டிக்கப்பட வுள்ளது. எதிர்வரும் 3 ஆம் திகதி சர் வதேச மாற்று வலுவுடையோர் தினத்தை முன்னிட்டு முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை மாற்று வலுவுடையோர் வார மாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பாடசாலை கள், கல்வி அலுவலகங்களில் கொண்டா டுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் மாற்று வலுவுடை யோர் தின நிகழ்வுகள் 8 ஆம் திகதி கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் வலயக் கல்வி அலுவலர்களும், ஆசிரியர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இவ் வருடத்தின் மகுடவாசக மாக 'அபிவிருத்தி உலகின் இலக்கை நோக்கிச் செல்ல மாற்று வலுவுடையோ ரையும் உற்சாகமூட்டுவோம்' என்னும் கருப்பொருளை நோக்கி பல்வேறு செயற் றிட்டங்களையும் கல்வி அலுவல கங்க ளும் பாடசாலைகளும் மேற்கொள்ளத் வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (50-267)

பெற்றோருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் வைஷ்ணவாக் கல்லூரியில் தரம் 13 கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகளில் கற்கும் மாணவர்களது பெற்றோர்களை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக்கு சமூகம ளிக்குமாறு அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ)

முகவர்கள் தேவை

தளபாடங்களைச் சந்தைப்படுத்துவதற்கு வடபகுதியில் முகவர்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு : 077-3013239

2ஆம் ஆண்டு நினைவு நினைவலைகள்

மண்ணுக்கு வந்த நாள்
1951.09.09

விண்ணுக்கு சென்ற நாள்
2007.11.29

அமரர் சின்னத்தம்பி தில்லை நடராஜா

[புலோலி கீழக்கு, புலோலி, பருத்தித்துறை]
திதி. கார்த்திகை மாத தேய்பிறை ஷஷ்டி
[2009.12.07]

அன்புள்ள அப்பா,
ஆண்டுகள் இரண்டு
இன்றுடன் ஆனதுவே.....!
உங்கள் ஆத்மா சாந்திக்காக
என்றும் பிரார்த்திப்போம்.

மனைவி - தி.வனிதாகாந்தி,
பிள்ளைகள்-பிருந்தா காந்தி,
வருணகாந்தி, நிர்ஷாகாந்தி,
மருமகன்-சுபசீலன்

புலோலி கீழக்கு,
புலோலி,
பருத்தித்துறை.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு		மறைவு
03		30
★		★
04		10
★		★
1946		2009

முருகன் கனகன்

(வடிசாலை முன்னாள் பணியாளர், கைதடி.)

பாசமுடன் எம்மை வளர்த்து
பரிவுடன் வழிகாட்டிய
பாசமிகு - சித்தப்பாவே!
பாரினில் உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

(92520)

மு.சட் கரப்பிள்ளை
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ங்குகளால் நோய் தொற்றுவதை.....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி...)

...னும் சொல்கிறேன் கேளுங்கள். வெறுமனே ஆறு கம்பிகளைத் திரும்ப திரும்ப எண்ணும் அறையினுள் பூட்டி வைக்காது இவர்களுக்கான தண்ட னையைச் சமூக மேம்பாட்டுக்காகவென மாற்றிப்பாருங்கள்.

உணவினைச் சுத்தமாக வைக்காத உணவகங்களிலுள்ளவர்களைத் தேடி யொரு தரம் கொட்டும்படி தேனீக் களுக்கு உத்தரவிடுங்கள். ஏழைக்கும், வயதானவருக்கும் தாய், தந்தையருக்கும் உதவாத மனிதர்கள் எவரென்றாலும் அவரில் தாராளமாக இரத்தத்தைக் குடிக்கலாமென நுளம்புகளுக்கும் மூட் டைப்பூச்சிகளுக்கும் உத்தரவிடுங்கள். தலைமயிரைச் சுத்தஞ் செய்யாது ஸ்ரைல் என அப்படி இப்படி வளர்ப் பவர்களின் இரத்தத்தைத் தாராளமாக குடிக்கலாம் எனப் பேன்களுக்கும் உத்தரவிடுங்கள்.

தனது பணியைச் சரிவர செய்யாத வருக்கும், இன்னொருவர் மீது காழ்ப் புணர்ச்சி கொள்பவருக்கும், பகிடியாக தன்குலத்தையே வதைப்பவர்களுக்கும் வீதியில் நாலடுக்கில் சைக்கிள் ஓடு பவர்களுக்கும் தண்டனையாகக் குளவி களுக்கு அறிவித்து ஒருதரம் கொட்டச் சொல்லுங்கள்.

ஏழை மக்களின் வயிற்றிலடிப்பவரை, லஞ்சம் வாங்குபவரை, ஊரார் பணத்தில் ஏப்பம் விடுபவரை, காசுப்பிசாசுகளைத் தேடிப்பிடித்து இரத்தத்தைக் குடிக்கலா மென நுளம்புகளுக்கு அறிவியுங்கள்.

களவெடுப்பவர்களைக் கண்ட இடத்தில் கொட்டச் சொல்லி தேனீக்களுக்கு உத்தரவிடுங்கள். அதே நேரத்தில் நல்ல மனிதர்களை நல்லவர்களைப் பிறருக்காக வாழ்பவர்களை, இறை தியானமுள்ளவர் களை, சமூக சேவையாளர்களை எதுவிதத்திலும் தீண்டவேண்டாமென கட்டாய அறிவிப்பையும் இடுதல் நன்று.

***

அமைதி! அமைதி! அமைதி!

நீதிபதி அவர்கள் வருகின்றார்!''

நீண்ட நாள்களாகப் பலரினுடைய வாதப்பிரதிவாதங்களைச் செவிமடுத்த நிலையில் இன்று தீர்ப்பினை வழங்க வருகின்றேன். அதற்கு முன்பு மனிதர்கள் நடத்தும் இவ் வழக்காடு மன்றினை மதித்து, நீதி வேண்டி வந்து தமது பக்க வாதங்களை முன்வைத்த அனைத்து விலங்குகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

''இம் மன்று அரசாங்கத்தினால் வகுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே தீர்ப்புக் கூற முடியும். இந்தச் சட்ட நெறிகளெல்லாம் மனிதர்களுக்காகவே உருவாக்கப்பட் டுள்ள போதிலும் இனிவருங்காலத்தில் விலங்குகளுக்காகவும் அவர்களை உள்ளடக்கிய பேரவையில் சட்ட நெறி கள் கோவைகளாக்கப்பட வேண்டும் என சிபார்சு செய்கின்றது. அதே வேளையில் இவ்வுலகில் எவ் உயிரினமாகிலும் சரி ஒருவருக்கு இன்னொருவர் தீங்கு விளைவிப்பதும் அவரது உயிருக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊறு விளைவிப்பதும் பாரிய குற்றாமவே இம் மன்று கருதுகின்றது.

ஆரம்பத்தில் தாவர உண்ணிகளாக இருந்த பூச்சிகள் ஊன் உண்ணிகளாக பின் மாற்றம் பெற்றதை வைத்து நோக்கும் போது ஒருவரின் இரத்தத்தைக் குடிப்பது குற்றமாகவே கருதமுடியும். ஆனால் மனிதனது செயற்பாடுகள் சமூக சிந்தனையற்று இருப்பதால் நுளம்பு களையும், உண்ணிகளையும் பேன் களையும் மட்டும் குற்றவாளிகளென இம்மன்று கருதவில்லை. மனிதர்களின் இறப்பு அதிகரிக்கும் போது தேவையேற் படுமிடத்து இரசாயன பூச்சி கொல்லி களைப் பயன்படுத்தலாம் என எண்ணு கின்றது. அதே நேரத்தில் எந்த ஒரு உயிரினமும் முழுமையாக அழிந்து விடாது பாதுகாக்கப்படவும் வேண்டும்.

விலங்குகளைக் காப்பதற்காக சட்ட திட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட் டுள்ளன. இதற்கென காப்பகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. பிரித்தானி யாவில் 1911 இல் உருவாக்கப்பட்ட விலங்குகள் நலசட்டம் இப்போது இலங்கையிலும் அமுலில் உண்டு. உதாரணமாக தெரு நாய்களுக்கென KACPAW (விலங்குகளின் நலமேம்பாட்டுக்கான சமூக பாதுகாப்பினை வழங்கும் கண்டி சங்கம்), AWPA (விலங்குகள் நலவாழ்வு பாதுகாப்பு சங்கம்), SOFA (எங்களது நண்பர்களை காப்பாற்றும் சங்கம்) என இலங்கையில் பல உண்டு. மறைந்த இலங்கை இசைஞானி பிறேமசிறி கேமதாச 100 தெருநாய்களை காப்பாற்றி வளர்த்தார் என்றும் இன்னும் மேன்மை தங்கிய எமது ஜனாதிபதி அவர்களினது மகிந்த சிந்தனை எனும் எண்ணக் கருவிலிலே தெருநாய்களனைத்தும் கொல்லப்படக்கூடாது எனும் இரக்க சிந்தனையை நல்ல ஒரு உதாரணமாக இங்கே குறிப்பிடாலம். இறப்பது நாமானாலும் தெருநாய்கள் எதுவும் இறக்க கூடாது. இதனடிப்படையில் 18,000 தெருநாய்கள் 2008 ஆம் ஆண்டு சுத்தஞ் செய்யப்பட்டனவாம். உயிர்களின் மேலுள்ள பற்றுதலுக்கு இதைவிட எடுத்துக்காட்டு வேறெது?

இவையனைத்தையும் ஒன்று சேர்த்து பார்க்கும்போது மனிதராயினும் ஏனைய விலங்குகளாயினும் தீண்டுதல் எவ்வழியிலென்றாலும் அது குற்றமாகவே கருதப்படவேண்டும். உயிருக்கு அச்சுறுத்தல் எனும் போது அது கடுமையான தண்டனையாகவே சட்டத்தினாலே கருதப்படும் என முடிக்கிறேன். இதில் அவரவர் பங்களிப்பிற்கேற்ப தண்டனை கூடிக்குறையும்.

* * *

சட்டம் போட்டு திருத்திற கூட்டம் திருத்திக் கொண்டேயிருக்குது. ஆனால் திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டுமிருக்குது. திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால்.....

(முற்றும்).

விற்பனைக்கு

யாழ்.நகர் K.K.S. வீதியில் கடை விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

0777 301392

(சி/562532)

PRINTING MACHINE FOR SALE

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- HEIDELBERG KORD BLACK -18" X 24½ " (SHORT BOX)
- HEIDELBERG KORD BLACK -18" X 25½ " (LONG BOX)

முழுமையாகப் புதுப்பிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட மெஷின்கள் 06 மாதகால உத்தரவாதத்துடன் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

0777519766

(சி/562553)

மணமகள் தேவை

யாழ்.இந்து 1970இல் பிறந்த நட்சத்திரம் திருவோணம், பாவம் 14, செவ்வாய்க் குற்றம் இல்லாத 5' 6" உயரமும் M.Sc. Computer, M.B.A. முடித்து American citizen தொழில் புரியும் மணமகனுக்கு யாழ்ப்பாண கலாசாரத்துடன் Professionally qualified மெல்லிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். December முதலாம் வாரத்தில் Sri Lanka வர இருக்கிறார்.

011 - 3150759

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

30.11.2009

திருமதி தம்பிப்பிள்ளை தங்கம்மா

31.09.2009அன்று பிரான்ஸில் காலமான யாழ்.அல்வாய் ஓடையம்பதியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மாலிசந்தியையும், இறுதிக்காலத்தில் பிரான்ஸையும் வதிவிடமாகக் கொண்ட, காலஞ்சென்ற இராமு - மீனாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியுமான அமரர் திருமதி தம்பிப்பிள்ளை தங்கம்மா அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.11.2009) திங்கட்கிழமை அன்னாரது Malakoff, au 35 rue Paulvai Clant couturier - France இல்லத்திலும் (தொ.பே: 0033146541353), நெல்லியடி, தடங்கன் புளியடி முருகமூர்த்தி மண்டபத்திலும் நடைபெற இருப்பதால், அன்றையதினம், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் பங்குகொண்டேக அன்போடும் அழைக்கின்றோம்.

மகன்கள்: திருநாவுக்கரசு(பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - தெஹியோவிற்ற கல்வி வலயம்), யோகராணி (வவுனியா), சரோஜினிதேவி (லண்டன்), நவரத்தினராசா (பிரான்ஸ்), ஈஸ்வரன் (பிரான்ஸ்), உருத்திராதேவி (பிரான்ஸ்),

மருமக்கள்: இராஜேஸ்வரி (பிரான்ஸ்), நாகநாதன் (வவுனியா), சிவராசா (லண்டன்), கிருபா (பிரான்ஸ்), ராதா (பிரான்ஸ்), செல்வநிதி (பிரான்ஸ்),

சகோதரர்கள்: கந்தசாமி (அல்வாய்), கனகரத்தினம் (வவுனியா), இராசம்மா (மீனாட்சி- லண்டன்),

மைத்துனர்கள்: தங்கமுத்து (அல்வாய்), சகுந்தலாதேவி (வவுனியா), அரசரெட்ணம் (நிலாவெளி),

பேரர்கள்: அமிர்தினி, தாட்ஷாயினி, அஜந்தன், அங்கதன், அரிவர்த்தனன், அர்ஜீன், மஞ்சுளா, பிரமிளா, நவநீதன், செல்வநீதன், சம்யா, சஜன், சௌயா, சுருதி, சுவாதி, ஆதித்தன், செல்வ துயந்தன், பிரணவன், திவ்யா, அகாஷ், கோகுலன், திவாகரன்,

பூட்டப்பிள்ளைகள்: மதுஷன், சதுர்ஷன்.

(90973)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்: சுந்தரலிங்கம் (மகன்), தொ.பே.: 0724722716.

உதயன்
தொலைபேசி 222 3337, 222 9933 தொலைநகல்.: 222 9944

தடுமாறாமல் முடிவு எடுக்கவேண்டிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டரை வாரத்தில் வேட்புமனுத் தாக்கல். அது முடிந்து நாற்பது நாள்களில் தேர்தல்.

இந்தத் தேர்தலை தமிழர்களுக்கு வாய்ப்பான விதத்தில் எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பது தொடர்பில் தமிழ்க்கட்சிகள் இன்னும் தெளிவான முடிவுக்கு வரவில்லை. இரண்டுங்கெட்டான் நிலையில் அவை அந்தரிக்கின்றமை பகிரங்கமானது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி, சித்தார்த்தனின் புளொட், கிழக்கு மாகாண முதல்வர் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போன்றவை மஹிந்த ராஜபக்ஷவை இத்தேர்தலில் ஆதரிக்கத் தீர்மானித்து விட்டன. இது அனேகமாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலை தான் திரிசங்கு சொர்க்க நிலையில் இருக்கின்றது.

அக்கூட்டமைப்பில் உள்ள கட்சிகளைப் பொறுத்த வரையில், தமிழர் தரப்பின் நலனுக்கு எது உகந்ததோ அதனைச் செய்யவேண்டியவையாக அவை உள்ளன. ஆனால் அக்கட்சியின் முக்கிய பிரமுகர்களின் ஊசலாட்டங்களைப் பார்த்தால் அவர்களும் தமது அரசியல் இருப்புக்கான விடயத்துக்கே முன்னுரிமை கொடுப்பவர்கள் போல ஒரு தோற்றம் தெரிகிறது.

இந்தத் தேர்தல் மூலம் தென்னிலங்கை அதிகாரத் தரப்பில் ஏற்படக்கூடிய மாற்றம் அல்லது மாற்றமின்மை மூலம், தமிழர்களுக்கு கொஞ்சநஞ்ச அதிகாரத்தையாவது-வலிமையையாவது-அரசியல் பலத்தையாவது பெற்றுத் தருவதற்கான முழு முயற்சிகளிலேயே இத்தரப்பினர் ஈடுபட வேண்டும். ஆனால் அதைச் செய்பவர்களாக அவர்களின் போக்குத் தென்படவில்லை என்ற குற்றச்சாட்டு மேலோங்கி வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வரக்கூடிய பொதுத் தேர்தலைத் தாம் எப்படி எதிர்கொள்வது, அதற்காகத் தங்கள் தேர்தல் மாவட்டங்களுக்குத் தங்குதடையின்றித் தாங்கள் சென்று வருவதற்கான உறுதிப்பாட்டை இந்த ஜனாதிபதித் தேர்தலை ஒட்டித் தாம் எடுக்கும் நிலைப்பாடு பாதிக்காமல் பார்த்துக்கொள்வது எப்படி, அந்தப் பொதுத் தேர்தலில் தத்தமது வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான சூழல் பாதிப்புறாமல் பார்த்துக் கொள்வது எங்ஙனம் என்பனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரமுகர்களின் சிந்தனையோட்டத்தில் மேலோங்கி வருவதாகக் கருதப்படுகிறது.

ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகின்றமை நல்லதா? அல்லது சரத் பொன்சேகா தெரிவு செய்யப்படுகின்றமை உசிதமானதா? தமிழர் தரப்பின் முடிவும், தீர்மானமும் இந்தத் தேர்தலின் இறுதி முடிவை மாற்றச் செய்யுமா, இல்லையா? இத்தேர்தலைப் பயன்படுத்தித் தமிழர்களின் வலிமையை - பலத்தை - மேம்படுத்தச் செய்யும் இலக்குகளைப் பேரம்பேசி எட்டுவதற்கான வாய்ப்புகள் உண்டா? இல்லையா? - இதுபோன்ற விடயங்களைக் கவனத்தில் கொண்டு, முடிவுகளைத் தீர்மானிக்கவேண்டிய கடமை, பொறுப்பு தமிழ்க்கூட்டமைப்புக்கு உண்டு. அதனையே அவர்களுக்கு வாக்களித்த மக்கள் விரும்புகின்றார்கள்.

அதிகாரத் தரப்பாரையும் பகைக்காமல், அதேநேரம் மக்களுக்கு வெளிப்படையாக சரியான வழிகாட்டலைத் தாம் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டுத் தமக்கு எதிராகக் கிளம்பாமலும் பார்த்துக்கொள்வதில்தான் கூட்டமைப்புத் தலைமையின் சிரத்தை இருப்பதாகவும் மக்கள் மத்தியில் சந்தேகம் கிளம்புகிறது.

இந்த ஆட்சியை நீடிக்க விடலாமா? மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமா? அப்படிக் கொண்டு வர வேண்டுமாயின் அதில் தமிழர்கள் ஆக்கபூர்வமாகப் பங்களிக்க வழிவகை உண்டா? வாய்ப்புண்டா? - என்பவை பற்றியெல்லாம் சிந்தித்து, சரியான முடிவு எடுத்து, தமது மக்களை நேரான பாதையில் வழிநடத்த வேண்டிய முழுப்பொறுப்பும் தமிழ்க் கூட்டமைப்புக்கு உண்டு.

ஆனால், அதுபற்றியெல்லாம் ஆழமாக ஆராயப்படுவதாகத் தென்படவில்லை.

அதைவிடுத்து, போட்டியில் இருக்கும் இரு தரப்புகளையும் சமாளித்து நடந்துகொள்வது அல்லது ஒரு தரப்புடன் கைகோர்ப்பது என்ற நிலைப்பாட்டால் தமிழ் மக்களுக்கு எதனையும் ஈட்டிக்கொடுக்க முடியாது.

மக்களின் மனங்களை அறிந்து ஒரு முடிவை மேற்கொள்ள தமிழ் கூட்டமைப்பினர் முன்வர வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ, ஜெனரல் சரத்பொன்சேகா ஆகியோருக்கு மேலதிகமாக பொதுத் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற முயற்சியின் பின்னால் புதைந்து கிடக்கும் சூட்சுமம் இதுதான் எனக் கூறப்படுகின்றது.

இந்த ஆட்சியை நீடிக்க அனுமதிக்கலாமா? இல்லையா? மாற்றத்தான் வேண்டுமாயின் அதற்காகப் பொன்சேகாவைத் தெரிவு செய்யஇடமளிக்கலாமா?

யாழ்.-வவுனியா பயணிகள் பஸ் சேவைக்கு முதற்கட்டமாக 7 மினிபஸ்கள் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.-வவுனியா இடையிலான பயணிகள் பஸ்சேவையில் ஈடுபடுவதற்கு முதற்கட்டமாக 7 மினிபஸ்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற மினிபஸ்களுக்கான தரப் பரிசோதனையின்போது இந்த மினிபஸ்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதிகோரி 51 மினிபஸ்களின் விவரங்களை யாழ். மாவட்டத் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் யாழ்.அரச அதிபரிடம் கையளித்தது.

இந்த பஸ்கள் பயணிகள் சேவைக்கு உகந்தனவா என்பதை அறியும் தரப் பரிசோதனை நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதில் முதற்கட்ட மாகப் 10 மினிபஸ்கள் பரிசோதிக்கப்பட்டன. இவற்றில் 7 மினிபஸ்கள் பயணிகள் சேவைக்கு உகந்ததாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. ஏனைய 3 மினி பஸ்களும் நீண்ட தூரப் பயணத்துக்குத் தகுதியான நிலையில் இல்லை என மோட்டார் வாகனப் பரிசோதகரால் இனங்காணப் பட்டது. அந்த பஸ்களில் உள்ள குறைபாடுகள் சீரமைக்கப்படுமாயின் அவர்களுடைய விண்ணப்பம் மீள்பரிசீலனை செய்யப்படும்.

பஸ்களுக்கான தரப் பரிசோதனையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறும். இதில் மேலும் 10 மினிபஸ்கள் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரடிக் கண்காணிப்பில் இயங்குவதால் இந்த தரப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது-என்றார். (50-9)

வன்னி தொண்டர் ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.29

வன்னித் தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தின் விசேட கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர்கல்லூரியில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட சகல ஆசிரியர்களையும் அன்று சமுகமளிக்குமாறு ஒன்றியத்தின் செயலாளர் பொன். சிவகரன் கேட்டுள்ளார். (ஒ-1)

ஒத்திவைப்பு

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த, வடமராட்சி வடக்கு ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் தாயரிப்பது தொடர்பான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று திட்ட இணைப்பாளரும் பருத்தித்துறை நகர சபைச் செயலாளருமான அ.நடராசா தெரிவித்தார். (ஒ-1-236)

இன்று வைர விழாவும் மலர் வெளியீடும்

கோப்பாய், நவ.29

நீர்வேலி ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத்தின் வைர விழாவும் ஸ்ரீ கணேசா முன்பள்ளி வெள்ளிவிழாவும் 'ஸ்ரீ கணேசம்' மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீ கணேசா முன்பள்ளி முன்றலில் தலைவர் ச.க. முருகையா தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆனையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொள்வார்.

நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள், சக்திகலா கேந்திர மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்வுகள், தேசிய கலை இலக்கிய பேரவை வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' நாடக நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ஒ-72)

நாளை

கார்த்திகை	14	30.11.2009
	திங்கட்கிழமை	
திதி:	திரயோதசி	
	பி.ப.04.26 வரை	
நட்சத்திரம்:	பரணி	
	பி.இ.04.10 வரை	
சுபநேரம்:	12.14-01.44 வரை	
ராகுகாலம்:	09.44-11.14 வரை	

சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும்

இடம் பெயர்ந்த மாணவரின் விவரங்களை 3ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்களில் இம்முறை நடைபெறவுள்ள சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விவரங்களை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பரீட்சைத் திணைக்களம் வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் அறிவித்துள்ளது.

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்களில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விவரங்களை வலயக்கல்விப் பணிப்பாளர்கள் திரட்டிவருகின்றனர்.

அந்த மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி நாளை 30ஆம் திகதியாகும்.

அந்தவகையில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களின் விவரங்களும் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விவரங்கள் அனுப்பிவைக்கப்பட்டதும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மேலதிகமான பரீட்சை நிலையங்கள் அமைப்பது தொடர்பாக பரிசீலனை செய்யப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (50-9)

யாழ். மத்திய கல்லூரியில் இன்று புத்தகக் கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 29

காயத்திரி பப்ளிகேஷன் தனது பத்தாண்டு நிறைவை முன்னிட்டு யாழ். அன்னை புத்தகசாலை அனுசரணையில் மாபெரும் புத்தகக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது. இக்கண்காட்சி எதிர்வரும் முதலாம் திகதி வரை-தொடர்ந்து நடைபெறும்.

தொடர்ந்து அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் புத்தக அறிமுகவிழாவுக்கு காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி வேலாயுதம் பிள்ளை நவமோகன் தலைமை வகிப்பார். தொடக்கவுரையை சிவ ஆறுமுகசுவாமி நிகழ்த்துவார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக 'கலாபூஷணம்' எம்.எஸ்.ஸ்ரீதயாளன் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் இ.ஓங்காரமூர்த்தி, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் மற்றும் யாழ்.பிரதேச கல்வியதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

காயத்திரி பப்ளிகேஷனால் இது வரை வெளியிடப்பட்டுள்ள 150 இற்கு மேற்பட்ட நூல்களின் அறிமுகமும் புத்தகக் கொத்து அறிமுக நிகழ்வு அங்கு இடம்பெறவுள்ளன.

சிறுவர் நூல்கள், கணனி நூல்கள், புலமைப்பரிசில் நூல்கள், கதைப்புத்தகங்கள், பாடநூல்கள், சிங்களம் கற்பதற்கான நூல்கள், சிங்கள நூல்கள் ஆகியன காட்சிப்படுத்தப்படவுள்ளன. பாடசாலைகள், மாணவர்கள் நூலகங்கள் ஆகியவற்றுக்கு விசேட விலைக் கழிவில் புத்தகங்கள் வழங்கப்படுவதோடு பாடசாலை மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிட விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-50)

சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பம் பெறுவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளதாக திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டு ஜனவரி 11ஆம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (50-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ணத்தில் விரைவில் 'விதாதா' வள கூட்டுறவு வங்கி

நல்லூர்,நவ.29

யாழ்ப்பாணத்தில் விரைவில் 'விதாதா' வள கூட்டுறவு வங்கி திறந்து வைக்கப்படும் எனக் கைத்தொழில் விஞ்ஞான அபிவிருத்தி அமைச்சின் 'விதாதா' நிலைய உத்தி யோகத்தர் சிறிசேன ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் 'விதாதா' வள நிலைய வெதுப்பகப் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்ட சிறிசேன ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்:

அமைச்சின் பலதரப்பட்ட தொழில்நுட்பத் துறைசார்ந்த பயிற்சிகளில் கீலந்துகொண் டும் இளைஞர், யுவதிகள் தொழிபயிற்சிகளைப் பெற்று சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடக்கூடியதாக அவர்களுக்கு கடன் உதவிகள் வழங்கப்படவுள்ளன. அது தொடர் பாக யாழ்ப்பாண மக்கள் வங்கியின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி உள்ளதாகவும், இக்கடன் உதவிகளைப் பெற பயிற்சி நெறிகளில் கலந்து கொண்ட 'விதாதா' வள நிலைய உறுப்பினர்களே பிணையாளிகளாக ஒப்பமிட முடியும் என தெரிவித்தார்.

காணி உறுதிகளோ அல்லது அரச உத் தியோகத்தர்களோ பிணையாளர்களாக வேண்டி யதில்லை எனவும் அவர் கூறினார்.

தற்சமயம் கேகாலையில் ஒரு 'விதாதா'வள கூட்டுறவுவங்கி ஆரம்பிக்கப்பட்டுள் ளதாகவும் இது நாட்டின் ஏனையபகு திகளுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளதாக வும் சிறிசேன ராஜபக்ஷ தெரிவித்தார். (50-111)

HUGO
Power Innovation
BESTECH
MACHINES & TOOLS



- Power Tool Accessories
- Compressors
- Electric Hoist
- Spray Guns
- Welding Transformers
- Battery Chargers
- High Pressure Cleaners
- HUGO Water Pumps & More & More.

06 MONTH WARRENTY



தில்லையம்பதி மோட்டோஸ்
Thillaiyampathy Motors
Sole Distributors for
Bestech Machines & Tools
(HUGO)
இல.114, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021222 5710,
தொலைநகல்: 222 4542
Web:www.hugo.lk

மரண அறிவித்தல்

திருமதி லதா சிவபாலன்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாக வும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லதா சிவபாலன் 22.11.2009 ஞாயிற்றுக்கிழமை ஜேர் மனியில் காலமானார்.

அன்னார் சிவபாலனின் அன்பு மனைவியும் பாலச்சந்தரின் அன்புத் தாயும் இராமலிங்கம்- சாந்தநாயகி தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென் றவர்களான சதாசிவம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சதீஸ் (சதீஸ் வீடியோ) மற்றும் ஐங்கரன் (செலிங்கோ இன்சூரன்ஸ், பொதுப் பிரிவு, சுன்னாகம்) ஆகியோரின் அன் புச் சகோதரியும் ராஜாம்பிகை, சிவா னந்தன், கோடீஸ்வரி, சுதர்சினி, அஜந் தினி ஆகியோரின் அன்பு மைத்துனியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2009) திங்கட்கிழமை ஜேர்ம னியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்:
பெற்றோர், சகோதரர்.

கல்லடி மூட்டு லேன்,
நுணாவில்கிழக்கு, சாவகச்சேரி.தொ.பே.: 0773058427.

(92320)

அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.29

தேசிய இளை ஞர் கூட்டுறவுச் சங் கத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் 10ஆம், 11 ஆம் ஆண்டு மாண வர்களுக்கிடையே சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டி யில் பங்குபற்று பவர்கள் 'நாங்கள் சுதந்திரமானோம்' என்னும் தலைப் பில் ஆக்கங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பிவைக் குமாறு கேட்கப் பட்டுள்ளது.

இந்தப் போட் டிக்குரிய ஆக்கங் கள் பாடசாலை மட் டத்தில் சித்திர ஆசி ரியர், அதிபர் ஆகி யோரால் உறுதிப் படுத்தப்பட்டு, உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன் றம், தேசிய வீட மைப்புஅபிவிருத்தி அதிகார சபைக் கட்டடம், மாவட்ட அ லு வ ல க ம், யாழ்ப்பாணம் என் னும் முகவரிக்கு அ னு ப் பி வை க் குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (50-204)

உரக் களஞ்சியம் நிர்மாணம்

யாழ்ப்பாணம், நவ.29

சாவகச்சேரி கம நல சேவை நிலை யத்திற்கென 250 மெற்றிக் தொன் கொள்ளளவுடைய உரக் களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

வடக்கின் வசந் தம் நிகழ்ச்சித் திட் டத்தின் கீழ் நிர்மா ணிக்கப்பட்டு வரும் இந்த உரக் களஞ்சி யத்தின் நிர்மாண வேலைகள் யாவும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்படவுள் ளதாகத் தெரிய வருகிறது. (50-14)

25 ஆவது ஆண்டில் நடம் பதிக்கும்....
உதயன்
மக்களின் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரி யர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வாரகாலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்தப் போட்டி எதிர்வரும் *டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி* வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் விடைத் தாள்களை பாடசாலைகள் மற்றும் உதயன் முகவர் நிலையங்களில் அமைக்கப் பட்டுள்ள விசேட பெட்டிகளில் சேர்ப்பித்து உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யுங்கள்.

விநியோகஸ்தர்கள் தேவை

பிரசித்த நிறுவனத்திற்கு Furnishing, Lace, Curtain, Linen, Handloom பொருட்களை வடபகுதியில் விற்பனை செய்வதற்கு விநியோகஸ்தர்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:- 077- 3013239.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை அதிபர்
திரு.த.சண்முகசுந்தரமூர்த்தி
அவர்கள் இலங்கை அதிபர் தரம்-1இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்.
யா/சுதுமலை மகாவித்தி,
தகவித்தி,
மானிப்பாய்.
(92621)

வேலையாள்கள் தேவை

★ விற்பனையாளர்
★ உதவியாளர்
} ஆண்/பெண்
★ கணக்காளர் (கணனி அறிவுள்ளவர்)

இளைப்பாறிய ஆங்கிலம் தெரிந்த ஒருவரும் தேவை.
நேரில் வரவும்.

யாழ் போன் சொய்
இல.10, நவீன சந்தை (மேல்மாடி), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(இ/562756)

கோப்பாய் இராச வீதியிலுள்ள தரிசு நிலங்களில் பயிர்ச் செய்கை

யாழ்ப்பாணம், நவ.29

கோப்பாய் இராச வீதியில் தரிசு நிலங்களாகக் காணப்பட்ட தோட்டங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் விவ சாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக விவசாய நடவடிக்கை இன்றி தரிசு நிலங்களாகக் காணப்பட்ட இந்தத் தோட்டங்களைத் தற்போது சீர்செய்யும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வரு கின்றனர்.

சீர்செய்த தோட்டங்களில் மரக்கறிப் பயிர்களை நடும் பணிக ளும் இடம்பெற்று வருகின்றன. (50-224)

லண்டன் கண்காட்சியில் இடம்பெற்ற நாரந்தனை சுவாம்பிள்ளையின் யாழ்ப்பாணத்துச் சுருட்டு

நவம்பர் 1925 லண்டனில் நடைபெற்ற கண்காட்சியில் யாழ்ப் பாண உற்பத்திகள் பரிசு பெற்றன.

லண்டனிலுள்ள வெம்பிளி நகரத்தில் 1925 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வர்த்தக உற்பத்திக் கண்காட்சியொன்று நடைபெற்றது. இக்கண்காட்சிக்கு யாழ்ப்பாணத்திலி ருந்தும் உற்பத்திப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன. ஏற்கனவே விருதுகள் பலபெற்ற நாரந்தனை வர்த்தகர் சுவாம்பிள்ளையின் சுருட்டு, இந்தக்கண்காட்சியி லும் சிறப்பிடம் பிடித்தது. எம்.சுப்பிரமணியம் என்ற பொற்கொல்லரால் வடிவ மைக்கப்பட்ட தங்க ஆபரணங்களையும் வலி.மேற்கு முதலியாரான சந்திரசேகர முதலியாரால் அனுப்பப்பட்ட விவ சாய உபகரணங்களையும் வி.முத்துக் குமாரு முதலியார் கண்காட்சிக்கு எடுத் துச் சென்றார்.

இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!

சந்திரசேகர முதலியாரால் அனுப் பப்பட்ட வண்டில்கள், கைத்தடி (walking stick) போன்றன கண்காட்சியை ஏற்பாடு செய்த பிரித்தானியக் குழுவினரின் பாராட்டைப் பெற்றன. இந்த விவசாய உபகர ணங்கள் வட்டுக்கோட்டையிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றை உற்பத்தி செய்த தச்சுத்தொழிலாளர்களும் கொல்லவேலை செய்பவர்களும் வெகுவாகப் பாராட் டப்பட்டனர்.

இந்து சாதனம் 25.11.1925

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு நடத்திய கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும் - பிரதேச செயலகப் பிரிவில் வெற்றிபெற்ற பிரதேச செயலகங்களுக்கான பரிசில்களை பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வரதீஸ்வரன், வேலணை பிரதேச செயலக கலாசார நிகழ்ச்சித்திட்ட பதில் உதவியாளர் கு.அற்புதன் ஆகியோர் பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதை இரண்டாம், மூன்றாம் படங்களிலும் -

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவி ஒருவர் மாவட்ட கலாசார உத்தியாகத்தர் திருமதி சு.விஜயரத்தினத்திடமிருந்து பரிசு பெறுவதை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

தமிழில் முதுகலைமாணிப் பட்டம்பெற்ற முதலாவது அணியினரின் பெயர்,விவரம்

அச்சுவேலி,நவ.29

யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்புகள் பீடத்தால் 2007/ 2008 கல்வி யாண்டில் நடத்தப்பட்ட தமிழில் முதுகலை மாணிக் கற்கை நெறியின் முதலாவது அணி யினரின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளி யாகி உள்ளன.

இவர்களின் அதிவிசேட சித்தியை 44 பேரும் திறமைச் சித்தியை நால்வரும் பெற் றுள்ளனர்.

அதிவிசேட சித்தி

வே.அகிலன் (ஆசிரியர், கொற்றாவத்தை அ.மி.த.க.பா.), இ.ஆனந்தநடராசா (பிரதி அதிபர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஆ.கேதீஸ்வரன் (ஆசிரியர், இராமநாதன் கல் லூரி), ஏ.அனுசாந்தன்(ஆசிரியர், யூனியன் கல்லூரி), அ.வாசுகி (ஆசிரியர், மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை), பா.பாலகணேசன்(விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி), கு.பாலஷண்முகன் (ஆசிரியர், சரவணை நாகேஸ்வரி ம.வி.), ந.பவன் (பகுதித் தலைவர், ஸ்கந்தவரோத யக் கல்லூரி), வே.ஞானசம்பந்தன் (ஆசிரி யர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தி.ஜோன் குயின்ரஸ்(பிரதிக் கல்விப் பணிப்பாளர், தீவகம்)-

ச.ஹம்சானந்தி (ஆசிரியர், வேலணை கிழக்கு ம.வி.), திருமதி கு.கலாமணி (ஆசி ரியர், தேவரையாளி இந்துக் கல்லூரி), பா. காசிநாதன் (ஆசிரியர்,பரியோவான் கல் லூரி), கி.கலைவதனி (ஆசிரியர், அல்வாய் சின்னத்தம்பி வித்தி.), ச.லலீசன்(விரிவு ரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), ம.பா.மகாலிங்கசிவம் (ஆசிரியர்,ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி), ம.கலைவாணி (ஆசிரி யர், இணுவில் மத்திய கல்லூரி), க.மார்க்கண்டு (ஆசிரியர், டிறிபேர்க் கல்லூரி), சி.மதன மோகனராஜ்(குப்பிளான்), மு.ஜெயக்கு மாரி (கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.), ந.சுதாஜினி(மானிப்பாய் மெமோறி யல் ஆங்கிலப் பாடசாலை), ந.பிருந்தா வனிதை (ஆசிரியை, டிறிபேர்க் கல்லூரி)-

ந.ஜெகதாம்பாள் (ஆசிரியை, சிறிசோ மாஸ்கந்தக் கல்லூரி), நெ.காயத்திரி (ஆசி ரியை, சிறிசோமாஸ்கந்தக் கல்லூரி), ஜோ. சார்ல்ஸ் நிமிலன்(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), ப.வாசுகி (ஆசிரியர், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி.), இ.சுகந்தினி, கா.சசி தரன் (அதிபர், கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.), எஸ். தனேஸ்வரி (ஆசிரியர், விக்கி னேஸ்வராக் கல்லூரி), ச.தர்சினி(ஆசிரியர், சிறிசோமாஸ்கந்தக் கல்லூரி), க.சின்னத் துரை (உதவிக் கல்விப் பணிப்பாளர் - தமிழ், தென்மராட்சி), சி.சிவகுமார்(ஆசிரியர், உரும் பிராய் இந்துக் கல்லூரி), சி.பாலாம்பிகை (ஆசிரியர்,வரணி ம.வி.), சி.சுபத்திரா (அல் வாய், ஸ்ரீலங்கா வித்தி.), சி.ஜனகா (ஆசி ரியை, ஏழாலை ம.வி.)-

த.பிரேமலா(ஆசிரியை, அருணோதயக் கல்லூரி), சி.சுந்தரமூர்த்தி(ஆசிரியர், வரணி ம.வி.), க.தர்மராஜா (விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி), ம.தவரூபன் (ஆசி ரியை, வட்டு. இந்துக் கல்லூரி), ந.தேவ ராஜா (ஆசிரியர், ஞானசாரியர் கல்லூரி), க.உருத்திரகுமாரன் (ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி), பொன். வல்லிபுரநாதன் (ஆசிரியர், திருநாவுக்கரசு ம.வி.கொடிகா மம்), கலாநிதி தி.வேல்நம்பி (சிரேஷ்ட விரிவு ரையாளர்,யாழ்.பல்கலைக்கழகம்), செல்வி வி.ராதிகா (ஆசிரியை, மானிப்பாய்)-

நிறமைச் சித்தி

வீ.மகேந்திரகுமார்(ஆசிரியர், மிருசுவில் அ.த.க.பா), டாக்டர் வெ.சக்திவேல் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), வை.சொர்ணலிங் கம் (ஆசிரியர், கரணவாய் பொன்னம்பலம் வித்தி.), மு.சந்திரசேகரம்(முதன்மை ஆசிரி யர், கல்வி வலயம், வடமராட்சி). (ஒ-11)

தேர்தல் காலத்திலாவது தங்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல் சமாதான ஒப்பந்தப் பேச்சுகள் நடைபெறும்போது தமிழ் கைதி கள் விடுதலை பற்றி பேசப்பட்டு எதுவும் நடைபெறாது போனது.

அப்போதும் நாம் ஏமாந்து போனோம். கடைசியில் எமது சூழ்நிலைகளும் மாறின.

எமது விடுதலைக்கு நாம்தான் பல முறை உண்ணாவிரதம் இருந்தோம். உண்ணாவிரதம் முடிப்பதற்கு ஆர்வம் காட்டியோர் எமது விடுதலையில் ஆர்வம் காட்டாது விட்டமை மன வேதனையான விடயம்.

நாம் சிறையிலிருப்பதால் பல உள் குழப்பங்களுக்கும் உள்ளாகியுள் ளோம். இப்போதும் உயிர் பயத்தில்தான் உள்ளோம். எமது நாட்டில் யுத்தம் நடைபெறாத வேளையில் சமாதான பேச்சுகளின்போது கைதிகள் பரிமாற்றம் என்ற வகையில் நீதிமன்றில் வழக்கை சந்தித்தவர்கள் கூட கைதிகளாகவே - இன்னமும் இருக்கிறோம்.

இப்போதும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு எமக்கும் விடுதலை பெற்றுத் தர முடியும்.

எமக்கு விடுதலை வேண்டும். எங்களையும் மற்றவர்களைப் போல வெளியில் வாழ விடுங்கள் என்ற ஒன்றையே வேண்டி நிற்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் எம்மை விடுவிப்பது கடமை

தற்போது ஜனாதிபதி தேர்தல் வருகிறது. இச்சந்தர்ப்பத்தில் அவருக்கு எம்மை விடுப்பது சிரமமில்லை. பொது மன்னிப்பு வழங்குவதிலும் சிரமம் இல்லை.

நாமும் விடுதலை பெற்று ஜனநாயக முறைப்படி வாக்களிக்கச் செய்ய முடியும். ஜனாதிபதியால் 24 மணித்தியாலத்தில் எம்மை விடுவிக்க முடியும்.

எந்த ஒரு சுதந்திரமும் இல்லாமல் சமாதான காலத்திலும் சமாதான காற்றுக் கூட சுவாசிக்க முடியாமல் நாங்கள் சிறையிலுள்ளோம்.

யுத்தம் - சமாதானம் - யுத்த முடிவு இப்போதும் கூட பல ஆயிரம் காலம் என இருட்டு சிறையில் எதிர்காலம் தெரியாது தவிக்கின்றோம்.

யுத்தத்தைக் காரணம் காட்டி நாம் கடைசி வரை யுத்த எச்சங்களாகத் தான் காட்சியளிக்க வேண்டுமா? மரணிக்க வேண்டுமா?

எமது விடுதலைக்கு ஒரு சிலர் ஆர்ப்பாட்டம், மறியல் செய்தமை மறுப்பதற்கில்லை.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் நிலையில் எமது விடயம் குறித்து ஜே.வி.பியினர் பேச ஆரம்பித்துள்ளனர். ஆனால் இதற்கு முன்னரும் இப்போதும் எப்போதுமே எங்களுக் காக குரல் கொடுக்கும் அமைப்புகளில் மலையக மக்கள் முன்னணி உபதலைவர் ஆர். ராதாகிருஷ் ணன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், சமூக சேவைகள் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா, இடதுசாரி கட்சியின் தலைவர் சோமபால தர்மரத்ன, மன்னார் ஆண்டகை ராஜப்பு ஜோசப்பு அடிகளார் ஆகியோர் குரல் எழுப்பியுள்ளனர்.

ஜே.வி.பி. கட்சி எமது பேச்சு பற்றி பேசுவது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், அது தேர்தல் பிர சாரமாக இருக்கக் கூடாது.

தமிழ்க் கூட்டமைப்பினர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்

இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் 22 பேர் உள்ளனர். இவர்கள் தான் எமது விட யத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இது அவர்களின் கடமையும் கூட. அவர்கள் எங்களுக் காக பொது மன்னிப்பு கேட்க வெட்கப்பட வேண் டியதில்லை.

தேர்தல் காலத்தில் இதைச் செய்வதற்கு கடினமிராது. 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்ற போது அ.அமிர்தலிங்கம் தலைமை யில் நடைபெற்ற தேர்தலில் தமிழீழம் தான் எமது கொள்கை. உதய சூரியன் சின்னம் தான் எமது சின்னம் என போட்டியிட்டு வெற்றி பெற்றபின் எதிர்க்கட்சியில் சேர்ந்தனர். இன்று ஆயுத மோதல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சிறையில் வடக்கு, கிழக்கு, மலையகம் மற் றும் சிங்கள பிரதேசத்தை அண்மித்துள்ள தமிழ் பெற்றோரின் பிள்ளைகள் தான் கைதிகளாக உள்ளனர்.

ஜனாதிபதி ஏதோவொரு வகையில் யுத் தத்தை நிறுத்திவிட்டார். யுத்தத்தை நிறுத்திய அவருக்கு எங்களை விடுப்பது பெரிய விடய மில்லை.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க ஜனநாயக ரீதியில் எமக்கும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை தந்து சமூக வாழ்வில் லோடு இணைவதற்கு சந்தர்ப்பம் தாருங்கள் என வேண்டுவதோடு விடுதலை கிடைக்கு மென நாம் நம்புகின்றோம்.

எமது விடுதலையை நாமே வேண்டி நிற்கின் றோம். இந்த வேண்டுதலை நிறைவேற்றித் தாருங்கள்.இன, கட்சி, குலம் பேதமின்றி ஒரு தாய் பெற்ற பிள்ளை என நினைத்து வேதனையு டன் சீர்தூக்கிப் பார்த்து சம்பந்தப்பட்டவர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து தேர்தல் பிரச்சாரமாக கருதாது உணர்வு பூர்வமாக பேசி எமக்கு உடனடி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை பெற்றுத் தருவீர்கள் என வேண் டுகிறோம் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஒ-சி)

BOC
ஒன்று இலங்கை இலங்கை வங்கி

மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ். மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 04.03.2009 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 04.09.2008 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

கிளையின் பெயர்	ஏலவிற்பனைத் திகதி இடம், நேரம்
யாழ். மேற்தரக்கிளை	யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2009 டிசெம்பர் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு
யாழ். 2 ஆம் மேற்தரக்கிளை	
திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற் கிளை உட்பட)	
காரைநகர்	
சுன்னாகம்	
மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட)	
காங்கேசன்துறை	
நெல்லியடி	
ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை விரிவாக்கற் கிளை உட்பட)	
பருத்தித்துறை	
சாவகச்சேரி	
அச்சுவேலி	

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி வடபிராந்தியம்.
உதவிப்பொது முகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3126,021 222 2735

சுவனா புடைவையகம்
நல்லூர்
NEW Selection
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விற்பனை
01.12.2009-31.12.2009 வரை
* இந்தியன் சாறிகள், பஞ்சாபித் துணிகள்
* சீக்குன்ஸ் சாறி -1900/=
(Full worked)
* இந்தியன் சில்க் சாறி -650/=
(Offical Saree)
* கொட்டன் சாறி -850/=
(Offical Saree)
* கொட்டன் சாறி -1500/=
(Vijaya Laksmi Saree 6: 20 Metre)
* சில்க் பஞ்சாபி துணி -1000/=
(Special Quality Guru Krupa)
* பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபி துணி - 650/=
* கொட்டன் பஞ்சாபி துணி - 1400/= - 2400/= வரை
இன்றே விரையுங்கள்
பஞ்சாபி துணி 1000/=
மற்றும் விதவிதமான புடைவை தெரிவுகளுக்கு
SARAVANA TEX, NALLUR
526, பருத்தித்துறை வீதி, நல்லூர்.(பின் வீதி)
(சிவன் கோயில் அருகாமை),யாழ்ப்பாணம்.
குறிப்பு: (ஏழுநாள்களும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை கடை திறந்திருக்கும்)
(92611)

தபால் மூல ஆங்கிலப் பாடநெறிகள்
SPOKEN ENGLISH COURSE
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் பழக்கலாம்.
கிளாஸ் போகும் காலம். நேரம் மிகுதி. குறுகிய காலம் / வயது எல்லை இல்லை. ஆங்கில முன் அறிவு தேவையிலலை வீண் கட்டணங்கள் செலுத்த வேண்டாம்
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் உங்களுக்கு
இலவச அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card ஒன்று Spoken English Book ஒன்றும் Spoken English Video CD என்பன இலவசமாக வழங்கப்படும்.
பெயர்/முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.ம.வி. புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேச துரை சந்திரகாந்தன் அறிவித்துள்ளார்.

எமது கட்சியின் அரசியல் குழுவின் 13 உறுப்பினர்கள் மூன்று மணி நேரம் ஆராய்ந்து இந்த முடிவுக்கு வந்துள்ளோம் என்று அக் கட்சியின் செயலாளர் ஈ.கைலைராஜா கூறினார்.

மாகாண சபையைப் பொறுப்பேற்று 18 மாதங்களாகியும் அபிவிருத்தியோ, வேலைவாய்ப்போ வழங்காத நிலையில் எப்படி மக்களிடம் சென்று வாக்கு கேட்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பினார். (அ-1)

யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மேலதிகமாக அமைச்சர் முரளிதரன் பிரசாரத்தை மேற்கொள்ள விருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தை எதிர்வரும் வெள்ளிக் கிழமை அமைச்சர் வி.முரளிதரன் திறந்து வைக்கவிருக்கிறார். (அ-1)

காங்கேசன்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே அதனை அமுல்படுத்துவதை விடுத்து அதற்கு அப்பால் சென்று தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண் பதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமெனச் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள் இந்தியத் தூதுவரிடம் எடுத்து விளக்கினார்கள்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட் டம் ஆகியன நீக்கப்பட்டால் தமிழ் மக்களின் அரைவாசிப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் எனவும் மக்கள் குழுவின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினார்கள்.

அத்துடன் தற்போது முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள அநாதரவான மாணவர்களுக்கு உதவிவழங்கும் நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இந்தியத் தூதுவருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம்,தொழில் நுட்பபீடம் ஆகியவற்றை அமைப்பதன் மூலம் மாணவர்களின் கல்வி வசதிகளை மேம்படுத்த முடி யும் எனவும், யாழ். சிறைச்சாலை வசதியான முறையில் புதிதாக அமைக்கப்பட வேண்டும் எனவும் இந்தியத்தூதுவரிடம் மக்கள் குழுவின் பிரதிநிதிகள் விவரித்தார்கள். (ஒ-50)

கனடா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது கவலையை இலங்கை தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு கனேடிய வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பௌத்த விகாரை சேதமாக்கப்பட்டுள்ளது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

விகாரையின் ஒரு பகுதி இனந்தெரியாதவர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இச்சம்பவத்தில் விகாரை பலத்த சேதத்துக்குள்ளாகியது. எனினும் உயிர் இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ரொறன்ரோ மாநிலம் இலங்கைத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் பகுதியாகும் (அ-1)

ஜனாதிபதித் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தவை வருமாறு:-

நடக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் முக்கிய பங்காளர்களாக இருக்கப் போகிறார்கள். அவர்கள் அளிக்கப் போகும் வாக்குகள் தான் ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றன.

இந்தத் தேர்தலில் தமிழர் தரப்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர் பாகவோ அல்லது வேட்பாளர்களில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பாகவோ இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. அது தொடர்பாக மிக ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து வருகிறோம். உரிய நேரத்தில் தமிழ் மக்கள் தேர்தலை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த முடிவை பகிரங்கமாக அறிவிப்போம்.

இன்றுள்ள நிலையில் அது தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டு சிக்கிக் கொள்ள விரும்பவில்லை - என்றார் அவர்.

தமிழ் பேசும் கட்சிகளின் ஒற்றுமை தொடர்பாக கேட்டபோது இது விடயமாக சந்திப்புக்கள் நடைபெற்றுள்ளன. இறுதி முடிவு எட்டப்பட வில்லை - என்றார் மாவை சேனாதிராசா. (அ-1)

பிரபாகரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டது. முதலாம் தடா நீதிமன்ற நீதிபதி பி.ராமலிங்கம் விடு முறையில் சென்றிருப்பதால், 6ஆவது கூடுதல் செசன்ஸ் நீதிமன்ற நீதிபதி எம்.ஏ. ஆனந்தகுமார் அறையில் வெள்ளிக்கிழமை காலையில் விசாரணை நடைபெற்றது.

சி.பி.ஐ. அதிகாரி மற்றும் வக்கீல் ஆஜ ராகி 4 மூலைகளிலும் 'சீல்' வைத்த உறை ஒன்றைத் தாக்கல் செய்தனர். அதைத் தொடர்ந்து அடுத்த கட்ட விசாரணையை அடுத்த ஆண்டு பெப்ரவரி 3ஆம் வாரத்துக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தர விட்டார்.

இலங்கையில் நடந்த போரில் பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகின. அவர்களின் இறப்பு சான்றிதழ்களை சி.பி.ஐ. தாக்கல் செய்தால்தான் வழக்கு முடிவுக்கு வரும்.

வெள்ளிக்கிழமையன்று விசாரணையில் அவர்களின் இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்று நீதிமன்ற வட் டாரம் தெரிவித்தது. இருவரின் இறப்புச் சான்றிழ்களை இலங்கை அரசு கொடுக்க வேண்டும். எனவே இவர்களின் இறப்பு சான்றிதழ்களையும் கேட்டு இலங்கை அரசிடம் சி.பி.ஐ. தொடர்ந்து வற் புறுத்தி வருகிறது. (அ-1)

ஜனாதிபதித் தேர்தலுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசிய முன்னணிப் பிரமுகர் கரு ஜெயசூரியா இத்தகவலை வெளியிட்டார்.

தமது கூட்டணியினர் தேர்தல் ஆணையாருடன் நடத்திய சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

நடைபெறவிருக்கும் தேர்தலில் நாட்டு மக்கள் சுதந்திரமாக செயல்படுவதற்கும் தமக்கு விருப்பமான வரும் நாட்டுக்குத் தலைமைத்துவத்தை நேர்மையாகப் பெற்றுக் கொடுக்கின்றவருமான தலைவர் ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

இதனை மையமாகக் கொண்டு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் தேர்தல் சட்டவிதிகள் முறையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஏனெனில் கடந்த சகல தேர்தல்களின்போது தேர்தல் விதிகள் மீறப்பட்டிருந்ததையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் நாம் கண்டிருந்தோம். எனவே இந்த நிலைமை ஜனாதிபதித் தேர்தலிலும் சரி, பொதுத் தேர்தலிலும் சரி மாற்றியமைக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானது.

அரச சொத்துக்கள், அரச ஊடகங்கள் முழுமையாக அரச தரப்பினரால் உபயோகிக்கப்பட்டமை மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்காக அநாவசியமாக ஹெலிகொப்டர்கள் கூட பயன்படுத்தப் பட்டிருந்தன. இது மேலும் தொடர முடியாது.

அரசுடைமைகள் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்த வேண்டுமானால் அதற்கான செலவுகளையும் பொறுப்பெடுத்துக் கொள்வது சிறந்ததாகும்.

அரச ஊடகம் என்பது இந்நாட்டு மக்களுக்கு சொந்தமானது. எனவே அரச ஊடகம் மத்தியஸ்தம் வகிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

இதனூடாக ...ரு தரப்புக்கு மாத்திரமே இடமளிக்... தரப்பினருக்கும் இதில் வாய்ப்பளித்து ... நேர காலத்தை ஒதுக்கித் தர வேண்டும். தற்போது அரச ஊடகங்களில் எதிர்க் கட்சிகளை இழிவுபடுத்தும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் பட்டு வருகின்றன. இது நிறுத்தப்பட வேண்டும்.

தேர்தல் பணிகளை கண்காணிப்பதற்கென சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதையும் நாம் தேர்தல்கள் ஆணையாளருக்கு வலியுறுத்தியுள்ளோம். அந்த வகையில் பொதுநலவாய நாடுகள், ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், ஆசிய நாடுகளின் தேர்தல் கண்காணிப்புக் குழு ஆகிய தரப்புக்களில் இருந்து கண்காணிப்பாளர்களை இங்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க எமக்கு உறுதியளித்துள்ளார்.

இடம்பெயர்ந்த வன்னி மக்கள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படாது துன்பப்படுகின்றனர். ஆனால் இவர்களை சென்று பார்ப்பதற்குக்கூட எதிர்த் தரப்பினருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே இப்பகுதிகளுக்குச் சென்று பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிலையை உருவாக்கித் தருமாறு நாம் கோரிக்கை விடுத்துள்ளோம். - என்றார்.

நேற்றைய சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர உள்ளிட்ட முன்னணியில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ-1)

புதிய ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவருக்கு எதிராக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவும் களம் இறங்குவதாக அறிவித்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகளே ஜனாதிபதி யார் என்பதை முடிவு செய்யப் போகின்றன. இரு வேட்பாளர்களுமே சிறுபான்மை மக்களிடம் பிரபல்யம் பெறாதவர்கள். அவர்களின் அபிமானத்தைப் பெறாதவர்கள்.

ஐ.தே.கட்சி தனது வேட்பாளரின் வெற்றிக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு கடுமையா உழைக்க வேண்டும்.

ஐ.தே. கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் இந்நிகழ்வில் உரையாற்றினார். (அ-1)

சரத் பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறை ஒழிப்பு, தமிழ் மக்களின் இனப் பிரச்சனைக்கான தீர்வு முறை, வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் மறுவாழ்வு, தாம் கடைப் பிடிக்கப் போகவுள்ள வெளிநாட்டுக் கொள்கை ஆகியன தொடர்பான விவரங்களை அவர் இன்று வெளியிடுவார் என அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. (அ-1)

குறுகிய காலத்தில் புதிய வரலாறு படைத்த NEC இன்
A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 30.11.2009 காலை 8 a.m
★ வழமையான முன்னணி ஆசிரியர் குழாம்
அனுமதிகள் இன்று முதல்
NEC Clock Tower Road, Jaffna
யாழ்.பெருமாள் கோயிலுக்கு அருகில்

காணி விற்பனைக்கு
யாழ். நகருக்கு சுமார் 6கி.மீ. தூரத்தில் கல்வியங்காடு, 3 ஆம் கட்டை ஒழுங்கையில் பாதுகாப்புமிக்க தூய்மையான நீர் வளமுள்ள, அமைதியான சூழலில் இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4 ¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 077-6081693
077-3604111

பிரத்தியேக வகுப்புகள்
கணிதம்
தரம் 6 - 11
இணைந்த கணிதம் / பௌதிகவியல் A/L
T.P: 0771651621

உங்களின் உடலை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?

மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப்படுகிறீர்களா ...
இதோ! அதற்கான தீர்வு எம்மிடமிருந்து...
முற்றுமுழுதாக பெண்களுக்கான (காலை 6.00 - மாலை 6.30) எமது பயிற்சி நிலையம், சிறந்த பெண் பயிற்றுவிப்பாளருடன் 230/1, நாவலர் வீதியில் நடைபெறுகின்றது. ஆண்களுக்கான பயிற்சி நிலையம் மேலும் பல புதிய உபகரணங்களுடன் கோவில் வீதிக்கு (கைலாசபிள்ளையார் கோவில் அருகில்) மாற்றப்பட்டு இயங்குகிறது.
மானிப்பாய் GYM இல் பெண்களுக்கான நேரம் 12.00pm - 3.30pm
POWER GYM
230/1,Navalar Road, Jaffna (only for Ladies)
38, uduvil Road, Manipay
Temple Road, Jaffna

Phillips Nursing Home
பிலிப்ஸ் நேசிங் ஹோம்
★ அதி நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் நியாயமான கட்டணத்தில் சத்திர சிகிச்சைகள்.
★ தனித்தனி தொலைக்காட்சி வசதிகளுடன் கூடிய சுகாதாரமான வார்ட் வசதிகள்.
★ இலவச வைத்திய ஆலோசனைகளுடன் கூடிய அடிப்படை உடற்பரிசோதனையும் (Basic Full Body Check-up) கணனி மய ஆய்வு கூட பரிசோதனைகளும்.
★ நிபுணத்துவமிக்க யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் வழங்கப்படும் (OPD) வெளிநோயாளர் சேவை.
223, பிரதான வீதி, (யாழ்.சிறைச்சாலை முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 4172

DAY CLASS
(வர்த்தகப்பிரிவு)
ஆரம்பம்
டிசெம்பர்-2 (புதன்)
காலை 9 மணி
DMI
Jaffna

O/L தமிழ் வினாவிடைகள்
30/= மட்டுமே
★ பூபாலசிங்கம் - யாழ்.
★ துர்க்கா - சுன்னாகம்
★ T.E.C
ஸ்ரான்லி வீதி
நாக. தமிழ்ந்திரன்
subra-14- Tue.2.15.
Seminar

CHEMISTRY
DAY CLASS
ஆரம்பம் 30-11-2009
Mon - 4.30 pm
N. KALA
83/19, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021-2229650

NALIN
இப்போது பரமேஸ்வரா சந்தியில்
நளினின் புதிய காட்சியறையில் விசேட விலைக்குறைப்பு
இச்சலுகை ஒரு வாரத்திற்கு...
NALIN Information Technologies Pvt Ltd
195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166,0777667974 email: nitpvt@nalininfotech.com



உலக எயிட்ஸ் தினம் - World AIDS Day 2009
HIV/ AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும், மனித உரிமைகளை மதித்தலும்
"Universal Access and Human Rights"

இலங்கையில்,
2009 ஆம் ஆண்டு 3ஆம் காலாண்டு வரைக்கும்,
● HIV தொற்றுடன் வாழ்வோர் 1161 ● இதில் ஆண்கள் 684, பெண்கள் 477
● AIDS இறப்புகள் 197 ● AIDS நோயாளிகள் 302
UNAIDS இனது கணிப்பீட்டின்படி 4000 வளர்ந்தவர்களும், 50 சிறுவர்களும் HIV தொற்றுடன் இருக்கலாம் என கணிப்பிடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில்,
இதுவரை HIV/AIDS தொற்றுக்குள்ளானவர்கள் 38 பேர் உறுதிசெய்யப்பட்டுள்ளனர்.
இதில் ஆண்கள் 27, பெண்கள் 11, குழந்தைகள் 02
HIV தொற்றுடன் வாழ்வோர் 16
AIDS இறப்புகள் 22
யாழ்ப்பாணத்தில் உள்ள சேவைகள்,
போதனா வைத்தியசாலையில் AIDS மற்றும் பாலியல் நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையம் உள்ளது (அறை இலக்கம் 33)
இங்கு நம்பகத் தன்மையுடன் HIV க்கான பரிசோதனை, உளவளத்துணை, சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் HIV/AIDS தடுப்பு செயற்பாடுகளுக்கான அமையம் செயற்படுவதோடு HIV/AIDS நோயாளருக்கு உதவும் நிதியமும் உள்ளது.
நிதியுதவி
ஆக்கம்: சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.
அனுசரணை
TRRO LIMITED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் ... கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மானுவர் தூரிகை

கு.சரண்யா, தரம் - 5,
யா/கொழும்புத்துறை இந்து ம.வி.

உ.துஷாந்தினி, தரம் -6 D,
யா/இந்து மகளிர் கல்லூரி.

தி.மதுஷா,
மதுரம் பாலர் பாடசாலை.

சா.பவிதா, தரம் - 6,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

ஸ்ரீ.ஸ்ரிரியன், தரம் -5,
யா/இராமநாதன் கல்லூரி.

உ.வைஷ்ணவி, தரம் - 2,
யா/உடுவில் மகளிர் கல்லூரி.



பா.மதனிகா, தரம் - 3A,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

மௌலி இது எதைப்பற்றியும் கண்டு கொள்ளாமல் கற்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். ஓநாய்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து தன்னைப் பார்த்துக்கொண்டு போனதையும் அவன் கவனிக்கவில்லை. இறுதியில் எல்லா ஓநாய்களும் ஒன்று சேர்ந்து எருதுமாடு கிடக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு சென்றன. அகீலா (ஓநாய்களின் தலைவன்) பகீரா, பாப்லு மற்றும் மௌலியின் வளர்ப்பு பெற்றோரான ஓநாய்களும் குட்டிகளும் மட்டுமே எஞ்சி இருந்தன.

''மனிதர்களும் அவர்களின் பிள்ளைகளும் நல்ல அறிவுள்ளவர்கள். சமய சந்தர்ப்பம் வரும் போது அவன் எங்களுக்கு உதவியாக இருப்பான்.'' என்று கூறினார் அகீலா. பின்னர் அப்பா ஓநாயைப் பார்த்து ''அவனைக் கொண்டு போங்கள், எமது சுதந்திரக் கூட்டத்தில் ஒருவனைப் போல வளர்த்தெடுங்கள்'' என்றார்.

இவ்வாறு தான் மௌலியாகிய மனிதச் சிறுவன் இந்தியாவின் சியோனிக் காட்டின் ஒருவனாக சேர்த்துக்கொள்ளப்பட்டான். ஒரு எருமைமாடு இதற்கு விலையாக ஓநாய்க் கூட்டத்திற்கு வழங்கப்பட்டது.

ஷேர்கானின் உறுமும் குரல் இரவில் தொடர்ந்து கேட்டுகொண்டே இருந்தது. மௌலியைத் தன்னிடம் கொடுக்காமல் விட்டமைக்காக மிகுந்த கோபமாக இருந்தது அவருக்கு.

அதன் பின்னர் பத்துப் பதினொரு ஆண்டுகள் மௌலி ஓநாய் கூட்டத்துடன் வாழ்ந்து வளர்ந்தான் என்று வைத்துக் கொள்வோம். காட்டு மிருகங்களுடன் மனிதப்பிள்ளை எவ்வாறு வாழ்ந்து வளர்ந்தான் என்பதை விலாவாரியாக எழுதப்போனால் அது பல புத்தகங்களாக விரிந்துவிடும். அதனால் பதினொரு வருடத்தின் பின்னர் அவன் வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை இனி நாம் பார்க்கலாம்.

ஓநாய்க் குட்டிகளோடே மௌலியும் வளர்ந்தான். ஆனால். அவன் ஒரு சிறுவனாக வளர்வதற்கு முன்பே அவை பெரிய ஓநாய்களாக வளர்ந்து விட்டன.

அப்பா ஓநாய் காட்டு வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் கற்பித்தார். புற்பற்றைகளின் சலசலப்பு, இரவில் வீசும் காற்றின் போக்கு, மரத்தில் இருந்து ஆந்தை எழுப்பும் ஓசை,ஓடைகளில் மீன்கள் பாய்ந்து விளையாடும் தன்மைகள் எல்லாம் ஒன்றும் விடாமல் மௌலிக்கு கற்பிக்கப் பட்டது. *(வளரும்)*

உங்களுக்கும் பரிசில்கள்

விடை தெரியுமா? -42

01. ஜேர்மனியின் சர்வாதிகாரியாக விளங்கிய அடோல்ப் ஹிட்லர் பயன்படுத்திய பென்ஸ் கார் அண்மையில் எத்தனை கோடி ரூபாவுக்கு ஏலம் போனது?
02. இலங்கைக்கான இந்தியத் தூது வரின் பெயர் என்ன?
03. இந்தியாவின் மும்பை நகர்மீது தீவிரவாதிகள் எப்போது பெரிய தொரு தாக்குதலை நிகழ்த்தி யிருந்தனர்?
04. சர்வதேச எயிட்ஸ் தினம் அனுஷ் டிக்கப்படும் நாள் எது?
05. அகில இலங்கை ரீதியில் நடத்தப் பட்ட 'மைலோ' கிண்ணத்தை வென்ற உதைபந்தாட்ட அணி எது?

விடை தெரியுமா?

தெரிந்தால் 09.12.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர் களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

விடை தெரியுமா? -40 சரியான விடைகள்

01. ஈரான்.
02. மகாவலி கங்கை.
03. அமெரிக்கா.
04. சச்சின் டெண்டுல்கர்.
05. நிஷா.

பரிசுபெறுவோர்

01. **ச.தயாநன்,** தரம்-6G, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
02. **ந.சுமுகனி,** தரம்-4E, யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
03. **ஜெ.யதுர்ஷனி,** தரம்-8 D, யா/பருத்தித்துறை ஸ்ரட்லி கல்லூரி.
04. **பு.கஜமுகனி,** தரம்-8B, யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
05. **ம.மதுஷா,** தரம்-8 B, யா/வட இந்து மகளிர் கல்லூரி.
06. **கி.ஷியாமளன்,** தரம்-7A, யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.

எல்லாம் நன்மைக்கே

ஒரு ஊரில் துறவி ஒருவர் வசித்து வந்தார். அவரை அவ்வூரில் உள்ள மக்கள் பெரிதும் மதித்தனர். துன்பம் நேரும் போதெல்லாம் அவரிடம் சென்று ஆலோசனை கேட்பார்கள். அவரும் அருளுரை வழங்குவார். ஒருமுறை பயங்கரமான தொற்றுநோய் ஒன்று அவ்வூரில் பரவியது. கோழி, சேவல் யாவற்றையும் அந் நோய் அடியோடு ஒழித்துவிட்டது. அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் துறவியிடம் சென்று முறையிட்டனர். ''எல்லாம் நன்மைக்கே'' என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார் அந்தத் துறவி.

சில நாள்கள் சென்றன. வேறொரு தொற்றுநோய் அங்கு பரவியது. அதனால் ஊரில் உள்ள நாய்கள் யாவும் இறந்துவிட்டன. காவலுக்கென்று ஒரு நாய் கூட இல்லை. இம்முறையும் மக்கள் துறவியிடம் சென்று முறையிட்டனர். அவரும் ''எல்லாம் நன்மைக்கே'' என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார்.

ஒரு நாள் அந்த ஊரில் திடீரென வெடிச்சத்தங்கள் கேட்டன. மக்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து ஓடத் தொடங்கினர். அப்போதும் சிலர் துறவியிடம் சென்று முறையிட்டனர். 'கடவுளின் கருணை' எனக் கூறினார் துறவி. பொறுமை எல்லை கடந்த நிலையில் மக்கள் அனைவரும் பக்கத்து ஊருக்குச் சென்று தஞ்சம் புகுந்தனர்.

மறுநாள் ஒரு கொடுங்கோல் மன்னன் தன் படைகளுடன் அவ்வூருக்குப் படை யெடுத்து வந்து கொண்டிருந்தான். வரும் போது அவன் ஊர் எல்லையில் நின்று அவதானித்தான். அந்த ஊரில் ஒரு நாயின் குரைப்புச் சத்தமோ, மக்கள் நடமாட்டமோ எதுவும் தென்படவில்லை. அவனுக்குப் பெரும் ஆச்சரியம் ஏற்பட்டது. மக்கள் வசிக்காத ஊர் போலும். இங்கு சென்று கொள்ளையிட என்ன இருக்கப் போகிறது என்று யோசித்தான்.

ஊரினுள் செல்லாது தன் படைகளை வேறு திசை நோக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டான்.

படைகள் திரும்பிச் சென்றதும் மக்கள் தம் இருப்பிடத்திற்கு ஓடோடி வந்தனர். துறவியிடம் சென்று வணங்கினர். அப்பொழுதும் அவர் 'கடவுளின் கருணையே கருணை', 'எல்லாம் நன்மைக்கே' என்று கூறிய வண்ணம் இருந்தார். அவரது தீர்க்க தரிசனம் கண்டு பெரிதும் மகிழ்ந்தனர் மக்கள். 'எல்லாம் நன்மைக்கே' என்றிருந்தால் எத்தீங்கும் நம்மைப் பாதிக்காது என்ற உண்மையைத் துறவியின் கூற்று மக்களுக்கு உதவுகிறது.

"எல்லாம் நன்மைக்கே என்றிருந்தால் தொல்லை எதுவும் நமக்கில்லை"

பா.வேணுகா, தரம் - 6,
யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்.

மல்லிகைப் பூ

எங்கள் வீட்டுத் தோட்டத்தின் மல்லிகையே
நாங்கள் வளர்த்திடும் மல்லிகையே
கொடியாய்ப் படரும் மல்லிகை
தடியிலே படரவிடுவோம்
நறுமணம் வீசும் மல்லிகையே
தருவில் படரும் மல்லிகையே
வண்ண வண்ண மல்லிகையே
வண்ணத்துப் பூச்சி தேன் குடிக்கும் மல்லிகையே
வண்டு மொய்க்கும் மல்லிகையே
கண்டவர் பறித்திடுவர் மல்லிகையை

இ.ரூபலக்ஸ்மன்,
தரம்-6A,
வட்டு - இந்துக் கல்லூரி, சித்தங்கேணி.

நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-.....
தரம் :-.....
பாடசாலை :-.....
.....

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

....
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

விமானம்

வானில் பறக்கும் விமானம்
வண்ணப்பறவையின் வடிவம்
மக்கள் செல்லும் விமானம்
மேலே செல்வதில் நிதானம்
உலகைச் சுற்றும் விமானம்
உயரப் பறக்கும் விமானம்
சுகமாய் செய்வோம் பயணம்
வித்தை செய்யும் விமானம்
விரும்பி செல்லும் விமானம்

கு.சங்கவி,
தரம் -5C,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள் விசேட விலைக்கழிவில் ஒரு வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளும் அனைத்து வகையான NOKIA போன்களுக்கும் சிம்காட் இலவசம்

சிம்காட் இலவசம்

- 10 வருட விற்பனை அனுபவம் நிறைந்த அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
- சர்வதேச தரம் வாய்ந்த அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகளையும் மொத்தமாகவும் சிலறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Dialog GSM
TheFuture Today
யாழ்.போன்சொப்

தொ.பே: 021 222 7125, 3817. இல.10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

TELESONIC | SUNDA | FIVE STAR | RICH STAR | MID SUMMER

Table Fans	Mixer Grinder	DVD, TV
Stand Fan's	Gas Cookers	Blender's
Ceiling Fan's	Ceramic Ware	LED Torches
Wall Fan's	Enamelware	Iron's,
Exuast Fan's	Rice Cookers	Airports Toasters
Orbit Fan's	Oven's	Pressure Lantern

(And MIMI Brand Vacuum Flasks 8 Models)
.....many more items.....
Reasonable & Affordable Price | For wholesale & Retail
IZZY ENTERPRISE (PVT) LTD
155/7, Prince Street, Colombo-11
Tel : 0777814117
Fax : 2437843
FORESIGHT ADs

டெங்கு நோய் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ.29

மாதகல் நுணசை மகா வித்தியாலயம், மாதகல் சென். ஜோசெப் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பாடசாலை மாணவர்கள் இளவாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுடன் இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மாதகல் பகுதி வீடுகளுக்குச் சென்று டெங்கு நோய் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று காலை 9 மணி தொடக்கம் சுமார் 400 மாணவர்களைக் கொண்ட குழுவினர் இந்த விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்வர். (50-201-115)

Study in UK

WE HELP YOU WITH

- Visa Consulting
- Visa Processing
- Career Advice
- Scholarship
- Accomodation
- Travel Document
- Airport Pick-Up
- Part Time Jobs

Admission From 'A' Grade Colleges & Universities
Minimum Qualification O/L

INTEKES JANUARY FEBRUARY

STUDENT VISA, DEPENDENT VISA, TOURIST VISA, VISIT VISA, SPOUSE VISA, Consulting இற்கு அணுகவும்

New Applications / Administrative Review Appeals போன்றவற்றிற்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

SPONSOR உதவிகள் / ஆலோசனைகள் வழங்கப்படும்

SIEG SRIRAM INTERNATIONAL EDUCATIONAL GROUP
SRIRAM INTERNATIONAL EDUCATION GROUP
169, George R De Silva Mawatha, Colombo 13.
(Near Sampath Bank, Kotahena Roundabout)
Tel: 2434767, 2434989,
AFTER OFFICE HOURS - 078 6246895

இந்திய யாத்திரை

22 நாள்கள்

தென்னிந்திய, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய 5 மாநிலங்களில் உள்ள பிரசித்திபெற்ற 70 இற்கும் மேற்பட்ட 3 விநாயகர், 17 அம்மன், 21 சிவன், 15 முருகன், 5 ஆஞ்ச நேயர், 9 நவக்கிரகங்கள், திருப்பதி உட்பட 8 விஷ்ணு ஆலயங்களைத் தரிசிப்பதுடன் புட்டப்பத்தியில் சாயிபாபா, மைசூர், ஊட்டி, பாண்டிச்சேரி பீச், மெரினா பீச் ஆகியவை யும் காணலாம். ஆரம்பம் 20.01.2010. விமான டிக்கெட், 3 வேளை உணவு, 2 வேளை காப்பி, மினரல் வாட்டர், A/C வாகன வசதி, தரமான தங்குமிடம், ஆலயங்களில் தங்களை எடுக்கும்75 புகைப்படங்கள் (6"x4") இத்துடன் வேளாங்கன்னி, பூண்டி மாதாவையும் தரிசிக்கலாம்.

விவரங்களுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரங்கநாதன்.
T.P: 0777 680102, 0724 222 989
யாழ்ப்பாணத்தில் M.T.வாசகர்
விவரங்களை அறிய T.P: 0772487939

N.B: தென்னிந்திய, வடஇந்திய யாத்திரையில் 10 வருட அனுபவம் உள்ளவரால் நடத்தப்படும் யாத்திரை

(92613)

வீடு விற்பனைக்கு

கொழும்பு, மருதானை, முதலாம் டிவிச னில் அமைதியான சிறந்த சுற்றுச்சூழல் கொண்ட இடத்தில் அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக் குண்டு. கச்சேரி, பிரதேச செயலாளர் அலுவலகம், பிரதான பஸ்தரிப்பு நிலையம், பொலிஸ் நிலையம், இரு புகையிரத நிலையங்கள், திடீர் விபத்துப் பிரிவு மற்றும் தேசிய பெரியாஸ்பத்திரி, தேசிய மற்றும் மாகாண சபையின் கீழ் இயங்கும் கல் லூரிகள் என்பனவற்றுக்கு மிக அண்மையில் நடந்தே செல்லத்தக்க தூரத்தில்!

நிலையான வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்கு வட்டி வீதங்கள் குறைவடைவது குறித்து ஏன் கவலைப்படுகிறீர்கள்?

நாளுக்கு நாள் பெறுமதி கூடிச் செல்லும் வீடொன்றைக் கொழும்பில் சொந்தமாக்கிக் கொள்ளக் கூடாதா?

தொடர்பு கொள்ளவும்:-
0112345689, 0718345689, 0757345689

(சி/562547)

பணிப்பெண் தேவை

சுண்டிக்குழியில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு: 0779487625 (சி/562774)

தவறிவிட்டது

கொழும்பிலிருந்து யாழ். வந்து பருத்தித் துறை சென்ற C.T.B பஸ்ஸில் ஒருதொகைப் பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0770554503, 0776371704 இலக்கங்களுடன் தொடர்பு கொள் ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (92619)

கார் விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள NISSAN கார் Wegan model 15 ஸ்ரீ 4767 விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0212225255, 0718474739 (92614)

PHYSICE

அனுபவம் மிகுந்த ஆசிரியரினால் தனி யாகவோ/குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

(92616) தொடர்புக்கு: 0773405973

தேவை

Computer Type setting தெரிந்த பெண் பிள்ளைகள் உடன் தேவை.
தகைமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
Kugan Copyist
214, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(92623) T.P. 0776262018

கொள்வனவு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

1 Kg 300/=

தொடர்பு: விஜயகுமார், நவாலி வீதி, ஆனைக்கோட்டை, தொ.பே. 0776090926

(92623)

அறை/வீடு வாடகைக்கு

கொழும்பு வெள்ளவத்தையில் AC/NON AC அறைகள், 2 அல்லது 3 அறைகளுடன் கூடிய வீடுகள் நான் அல்லது மாத வாடகைக்குண்டு. தொலைபேசி மூலம் பதிவுகள் மேற்கொள்ளலாம்.

Suriyan Rest,
18/3, Station Road, Wellawatta.
T.P.0112581441,0112556175.

ஈரவிழிகளுடன் ஏழாண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
பலாலி
19 ★ 09 ★ 1930

கந்தன் காலடியில்
அச்சுவேலி
29 ★ 11 ★ 2003

அமரர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு
(பொலிகண்டி கந்தவனக் கோயில் 6 ஆம் திருவிழா உபயகாரர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தி.அன்னமுத்து (மனைவி)
யோகநாதன் (மகன்-கனடா)
தங்கராணி (மருமகள்-கனடா)
பேரப்பிள்ளைகள்-பிரசாந், அனுசாந், அனுசாந்தி (கனடா).

தோப்பு, அச்சுவேலி. (சி/562761)

நினைவலைகள்

30 ஆவது வருடம் 50 ஆவது வருடம்

அமரர் கணபதிப்பிள்ளை அரியரத்தினம்
(இரத்தின நிலவர் P.W.D Overseer)
பிறப்பு: 01.02.1908
இறப்பு: 26.11.1980

திருமதி அரியரத்தினம் இலட்சுமிப்பிள்ளை
(செல்லம்மா)
பிறப்பு: 02.09.1912
இறப்பு: 30.11.1958

அன்புடன் எங்களை வளர்த்து, அறிவினை எங்களுக்கு ஊட்டி
ஆற்றல் ஆயிரம் ஊட்டி காவல் தெய்வமாய் இருந்து
எங்களைக் காத்து வளர்த்து
வலது கண்ணாயும் இடது கண்ணாயும் இருந்த அப்பா அம்மா!
ஆண்டுகள் முப்பது ஆகியும் ஐம்பது ஆண்டுகள் சென்று என்ன?
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் நாங்கள் என்றும்
எங்கள் தெய்வங்களை உயிர் இருக்கும்வரை மறக்க மாட்டோம்.

பிரார்த்திப்போர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
அமரர் ம.மதியாபரணம் (அரசகளஞ்சியப் பொறுப்பாளர்), பாரியார், பிள்ளைகள்
திரு. அ.மயூரநாதன் (ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் MPCS), பாரியார்
திரு. அ.வைகுந்தநாதன் (J.P, ஓய்வு பெற்ற அரசாங்க வருமான உத்தியோகத்தர்)
பாரியார்- வை.சுசீலா, மகன் - வை. நீதிராசா (BBA.கணக்காளர், பிரான்ஸ்)

இன்று (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் அப்பா, அம்மா இருவரினதும் நினைவு நிகழ்வுகள் நடைபெறும்.

கு.அ.வைகுந்தநாதன் J.P
Ret. Tax Officer
வலிகாமம், கோண்டாவில்.

வடமராட்சி, தும்பளை வடக்கு. (92482)

வீடுகளுக்குச் சென்று விபரங்களைத் திரட்டும் பாதுகாப்புப் படையினர்

கிராம உத்தியோகத்தர்கள் மூலம் வீடு களில் வசித்துவரும் குடும்ப விவரங்களைத் திரட்டி வரும் பாதுகாப்புப் படையினர் அதைத் தொடர்ந்து வீடு வீடாகச் சென்று குடும்ப அட்டைகளைப் பார்வையிடுவதுடன் அங்கு வசிப்பவர்களின் விவரங்கள் பற்றி நேரில் அறிந்து வருகிறார்கள்.

அமைதியும் சமா தானமும் நிலவும் இந்த நேரத்தில் பாதுகாப்புப் படையினரின் இச் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

கிராமங்களில் வெறுமையாக இருக்கும் வீடுகள், மக்கள் வசிக்கும் வீடுகள், அவர்க ளின் எண்ணிக்கை, தொழில், மேலதிகமாக வசிப்பவர்கள் உட்பட சகல விவரங்களையும் அறியத்தருமாறு சுதுமலை வடக்கு கிராம உத்தியோகத்தரிடம் பாதுகாப்புப் படையினர் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து அவர் விவரங்களைச் சமர்ப்பித்துள்ளார். (50-115)

செழிப்பான அறுவடைக்கு EDGRO®
WATER PUMPS

GREAVES LIMITED



MK12 SP & NSP
Engine Driven Pumps

கமத்தொழிலுக்கும், கட்டிட நிர்மாணத்திற்கும் ஏற்ற உற்ற நண்பன்!

7 Year WARRANTY

EDNA GROUP
எட்னா என்ஜினியரிங் (பிரை) லிமிட்டட்
257, கிராண்பாஸ் வீதி, கொழும்பு14.
தொலைபேசி: 2472669-78, 2498200 பெக்ஸ்: 2472628
Email: sales@edna.lk Web : www.edna.lk
மேலும் தொடர்புகளுக்கு ஸ்ரீபாலன் 0779 483318

- 7 வருட கால உத்தரவாதம்.
- உயர்சக்தியும், நீண்டகால பாவனைத்தரமும்.
- கூடிய அளவு நீரினைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல்.
- அதிக எரிபொருள் சிக்கனம்.
- தன்னிச்சையான, தன்னிசையற்ற நீர் நிரப்பல்.
- உதிரிப்பாகங்கள் இலகுவாக பெறலாம்.
- நாடு முழுதும் அங்கிகரிக்கப்பட்ட விற்பனைக்கு பிந்திய சேவை.

நாடெங்கும் உள்ள எமது கிளைகளிலும் விற்பனை முகவர்களிடமும் உங்கள் தேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

(2827)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்திரி பப்ளிகேஷனின் பத்தாண்டு நினைவையொட்டி மாபெரும் புத்தகப் பெருவிழா

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வாழ்த்துச் செய்தி

காயத்திரி பிரசுராலய நிறுவனத்தினர் நீண்ட காலமாக மாணவர்களுக்குப் பயன்படும் விதத்தில் பல்வேறு பிரசுரங்களை வெளியிட்டு வருவதுடன், அவற்றினை மாணவர்களுக்கும், சிறுவர் இல்லங்களிலிருந்து கல்வி கற்றுவரும் சிறுவர்களுக்கும் இலவசமாக வழங்கி, கல்விச் செயற்பாடுகளை ஊக்குவித்து வருவது பாராட்டுக்குரியது.

கொழும்பு வத்தளைப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள கோகிலம் சிறுவர் இல்லத்திற்கான பல உதவிகளையும் அங்குள்ள 112 சிறுவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான உதவிகளையும் வழங்கிவருகின்றனர். ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரிக் கேள்வித்தாள்களை அச்சிடுவதுடன், அவற்றினை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி கல்விச் சேவை புரிந்துவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காயத்திரி பிரசுராலய நிறுவனத்தினர் தமது பல்வேறு சமூகப் பணிகளுக்கு மத்தியிலும், யாழ். மத்திய கல்லூரியில் எதிர்வரும் ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய நாள்களில் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு புத்தகக் கண்காட்சியொன்றினை நடத்தவுள்ள செய்தியறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். யாழ். குடாநாட்டு மாணவர்கள் போரினாலும், தொடர்ச்சியான இடப்பெயர்வு களினாலும் கடந்தகாலங்களில் இழந்துபோன கல்வியை மீளப் பெற்றுக்கொள்வதற்காக காயத்திரி பிரசுராலய நிறுவனத்தினர் முன்னெடுத்துவரும் கல்விப்பணிகள் மென்மேலும் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்.

காயத்திரி பப்ளிகேஷன் பாராட்டுக்குரியது

முதற் தசாப்தத்தில் காலடி எடுத்து வைக்கின்றது 'காயத்திரி பப்ளிக்கேஷன்' என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். பலருக்கு அச்சுத்தொழிலென்பது ஜீவனோபாயம். ஆனால் காயத்திரி பப்ளிகேஷனுக்கு ஜீவனோபாயத்துடன் ஒரு குறிக்கோள், ஒரு நோக்கு சமுதாயம் சார்ந்ததாக இருக்கிறது என்பதை அவர்களது கடந்த வரலாறு எடுத்துக்காட்டி நிற்கின்றது. அந்தவகையில்தான் முதற் தசாப்தத்தில் காலடிஎடுத்துவைக்கும் காயத்திரி பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தைப் பாராட்டவேண்டிய, வாழ்த்தவேண்டிய தேவையை உணர்ந்து நிற்கிறேன். இதுவரை தொண்ணூற்றி எட்டு தமிழ், இந்துமத ஆய்வு நூல்களையும் 151 சாத்திரமான நூல்களையும் வெளியிட்டுள்ளனர்.

பல சைவசமய பக்தர்களுக்கு தேவையான பதிகங்களை வெளியிட்டு இலவசமாக வழங்கியுள்ளனர். ஆயிரக்கணக்கில் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினா விடைத் தாள்களை விநியோகித்துள்ளனர். சிறுவர் இல்லங்களுக்கும் உதவி செய்துள்ளனர். அந்தவகையில் காயத்திரி பப்ளிகேஷனை வாழ்த்துவதுடன் வேலாயுதபிள்ளை நவமோகன் அவர்களைப் பாராட்டி அமைகிறேன்.

Dr. N. குமரகுருபரன், MPC.
மேல்மாகாணசபை உறுப்பினர்.

வாழ்த்துச் செய்தி

எழுத்துப்பணி என்பது எவ்வளவு கடினமானதோ அதைவிட பன்மடங்கு கடினமானது வெளியீட்டு நடவடிக்கை என்பதனை நூலுணர்வாளர்கள் நன்கறிவர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் வாசகத்திற்கேற்ப ஆலமரமாய் வளர்ந்து கிளைபரப்பி படர்ந்து நிற்கும் காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனத்தினர் வெளியீட்டுப்பணி மட்டுமன்றி சமூக, சமயப் பணிகளையும் ஆற்றிவரும் ஒரு நிறுவனத்தினர். அந்த வகையில் பொருத்தப்பாடானதும் தேவை ஏற்பட்டபோது இலவசமானதுமான வெளியீடுகளையும் சமூகத்திற்கு அளித்துள்ளனர். வாசிப்புப் பழக்கம் அருகி வரும் இவ்வேளை வெளியீட்டுத் துறையினருக்கும் சவால்கள் மிகுந்த காலமாகும். அவற்றுள்ளும் நின்று நிலைத்துப் பணிபுரிவது என்பது அவர்களது தூய சிந்தனையும் விடா முயற்சியும் என்றால் மிகையாகாது. அந்தவகையில் காயத்திரி பப்ளிகேஷன நிறுவனத்தையும் அதன் பணிப்பாளர் திரு. நவமோகன் அவர்களையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வாழக நும்பணி

எல். ஓங்காரமூர்த்தி,
அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

மாணவர்களுக்கான அறிவுசார் விளையாட்டு பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள் போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

சித்தி விநாயகர் ஸ்ரோசனரிஸ்

இல.16, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே 0718601365

பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள், அப்பியாசக் கொப்பிகள், கதைப் புத்தகங்கள் போன்றவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மொடேன் ஸ்ரோர்ஸ்

பஸ் நிலையம், நெல்லியடி, கரவெட்டி.
தொ.பே 2263778

பத்தாவது ஆண்டில் தடம் பதிக்கும் காயத்திரி பப்ளிகேஷன்

இலங்கை (தமிழ்) நூல்களின் விற்பனைச் சந்தையில் இந்திய நூல்களில் ஆதிக்கம் பெருமளவு இடம்பெற்று வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஆனாலும் இலங்கையில் புத்தக வெளியீட்டு முயற்சியில் கடந்த பத்தாண்டுகளாக காயத்திரி பப்ளிகேஷன் கால்பதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காயத்திரி பப்ளிகேஷனால் வெளியிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்படுகின்ற நவக்கிரக அஷ்டோத்ர சத நாமாவளி என்ற நூலின் முதல் பிரதி விநியோகத்தின்போது.....

காயத்திரி பப்ளிகேசன் நிர்வாக இயக்குநர் வேலாயுத பிள்ளை நவமோகன் அவர்களுக்கு யப்பானிய பல்கலைக் கழக சர்வதேச மார்ஸல் ஆட்ஸ் பல்கலைக்கழகத்தால் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

கணனி நூல்கள் முதல் சிறுவர் நூல்கள் வரை பல்வேறு தலைப்புகளில் நூற்றைம்பது (150)இற்கு மேற்பட்ட நூல்களை குறுகிய காலத்திற்குப் பதிப்பித்துள்ளதுடன் பல புதிய எழுத்தாளர்களை உருவாக்கியும் உள்ளது.

தமிழ்ப் பெயர்களை பிள்ளைகளுக்கு வைப்பதை கௌரவக் குறைவாக நினைக்கின்ற இன்றைய சமுதாயத்தில் தூய தமிழ்ப் பெயர்களை நூல்களுக்கு இட்டு இன்றைய மாணவச் சமுதாயத்தை திசை திருப்பியுள்ளது காயத்திரி பப்ளிகேஷன் 'விடிவெள்ளி'. 'வெற்றிமூரசு', 'வெற்றிக்கனி', 'புதையல்', 'புலமைப்பேளை', 'புலமை ஒளி', 'அமுதசுரபி' போன்ற பல சொற்களுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் யுத்தப் புயல் ஓய்ந்து அமைதிக்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. இந்த அமைதி நிலைக்க இதுவரை இருந்து வந்தது இனப்பிரச்சினை அல்ல; மொழிப்பிரச்சினையே என்பதையும் இலங்கைப் பிரஜைகள் அனைவரும் தாய் மொழியோடு சகோதர மொழியையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

இதன் மூலமே நிலையான அமைதிப் பூங்காவை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்து தமிழ் மக்கள் சிங்கள மொழி கற்றுக்கொள்ளவும், சிங்கள மக்கள் தமிழ்மொழி கற்றுக் கொள்ளவும் என மும்மொழி வழிகாட்டித் தொடரையும் இன்றும் சிங்களம் படிப்போம், தமிழ் மூலம் சிங்களம் போன்ற நூல்களையும் வெளியிட்டு வருகின்றது.

அத்துடன், மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக அமையவேண்டும் என்றால் அவர்களுக்கு அத்திபாரத்தில் இருந்து உரமாக கல்வியை வழங்கவேண்டும் என்ற நோக்கில் பாலர் வழிகாட்டி, உறுப்பெழுத்து வழிகாட்டி 1,2,3,4 போன்ற நூல்களை வெளியிட்டு வருகின்றன.

புலமைப் பரிசில் மாணவர்களை சிறந்த முறையில் வழிநடத்தவும், ஈழத்து நூல்களின் சந்தையை விரிவுபடுத்தவும் கடந்த ஏப்பிரல் மாதம் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் "ஈழத்து" நூல்களின் கண்காட்சியையும், புலமைப்பரிசில் கருத்தரங்கையும் ஒழுங்குபடுத்தி மிகப் பெரிய வெற்றியீட்டியது. முந்நூறுக்கு (300) மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் நவீன புறோஜக்டர்கள் மூலம் கணனித் தொழில்நுட்பத்தின் உதவியுடன் நடைபெற்றது.

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இலவசமாக எதிர்பார்க்கை வினாக்களை வெளியிட்டு, விநியோகித்து வருகின்றது. இம்முயற்சியின் மூலம் பல மாணவர்கள் மாகாண, தேசிய ரீதியில் சித்தியடைந்துள்ளனர்.

காயத்திரி பப்ளிகேஷன் ஆண்டுதோறும் சிறுவர் இல்லங்கள், வறிய மாணவர்கள், பாடசாலைகளுக்கு இலவசமாக நூல்களை வழங்கி வருகின்றது. காயத்திரி பப்ளிகேஷனின் நிறுவுநர் கலாநிதி வே.நவமோகன் 38இற்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். பத்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்ற இந்நிறுவனம் இளம் கவிஞர்களின் கவிதை, சிறுகதை நூல்களை வெளியிட முன்வந்திருக்கின்றது.

இது தொடர்பில்
யாழ். நெல்லியடியில் 22A, ரூபன் பீரிஸ் மாவத்தை, களுபோவில, தெஹிவளை
என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்.

யாழ். மேயரின் வாழ்த்துச் செய்தி

காயத்திரி பப்ளிகேஷன் தனது பத்தாண்டில் தடம் பதிப்பதை முன்னிட்டு நடத்தும் மாபெரும் புத்தக பெருவிழாவிற்கு இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மொழி விருத்திக்கும் தமிழ் மொழி பேசும் மாணவர்களுக்கும் பல்வேறு சர்வதேச தரமான நூல்களை வெளியிட்டு அளப்பரிய சேவையை வழங்கி வரும் காயத்திரி பப்ளிகேஷனுக்கு அதன் அதிபர் கலாநிதி வே.நவமோகனுக்கும் தமிழ்ச் சமுதாயம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. ஒரு பதிப்பகமாக மட்டும் நின்று விடாது இலவச நூல்கள் விநியோகம், இலவச புலமைப் பரிசில் எதிர்பார்க்கை வினாத்தாள்கள் விநியோகம், சிறுவர் இல்லங்களுக்கான உதவிகள், புத்தகக் கண்காட்சிகள், புலமைப்பரிசில் கருத்தரங்குகள், புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய, மாகாண ரீதியில் கௌரவித்தல் போன்ற பல்வேறு மக்கள் சேவைகளை வழங்கி வரும் இந்நிறுவனம் யாழ். மண்ணில் தடம் பதித்து பல்வேறு சேவைகளைச் செய்ய வேண்டும் என விரும்புகின்றேன். இவ்வாறான மாபெரும் புத்தகப் பெருவிழா யாழ். மண்ணில் நடைபெறுவதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. யோ. பற்குணராசா,
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.

தேசிய ரீதியாக விநியோகஸ்தர்களை நியமிக்கவுள்ள காயத்திரி பப்ளிகேஷன்

இலங்கை பூராகவும் தனது வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள காயத்திரி பப்ளிகேஷன் தமது வெளியீடுகளை சந்தைப்படுத்த பிரதேச ரீதியான முகவர்களை தேசிய ரீதியாக நியமிக்கவுள்ளது.

இந் நிறுவனம் இந்திய நூல்களுக்கு நிகரான தரமான வடிவமைப்புடன் அழகான அட்டைப்பட அமைப்புடன் தங்களது படைப்புக்களை குறைந்த விலையில் கடந்த பத்து ஆண்டுகளாக அச்சிட்டு விநியோகித்து வருகின்றது. அத்துடன் இந்திய நூல்களை இலங்கையில் சந்தைப்படுத்தவும், இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை இந்தியாவில் வெளியிட்டு சர்வதேச ரீதியில் சந்தை வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளவும் விரிவாக்கல் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

காயத்திரி பப்ளிகேஷனின் பத்தாவது ஆண்டுத் திட்டம் தொடர்பாக அதன் பணிப்பாளரும் பிரபல எழுத்தாளருமான கலாநிதி வே.நவமோகன் தெரிவிக்கையில்:-

புதிய நடமாடும் புத்தக விற்பனையை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து அதன் மூலம் வாசகர்கள், மாணவர்கள் வீடுகளில் இருந்தவாறு புத்தகங்களைக் கொள்வனவு செய்ய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றார்.

இதன் மூலம் தேசிய ரீதியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் விரிவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத்திட்டமே விநியோகஸ்தர்களை நியமிப்பதன் நோக்கமாகும். விவரங்களுக்கு:

காயத்திரி பப்ளிகேஷன்

22A, ரூபன் பீரிஸ் மாவத்தை, களுபோவில, தெஹிவளை.
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள், புத்தக வகைகள் போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை

நெல்லியடி, கரவெட்டி. தொ.பே. 021

அப்பியாசப் புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள், பாடசாலைகளுக்கான தர உள்ளீட்டுப் பொருள்கள். (Note: PENTIUM சோக், PENTEC பேனை, சரஸ்வதி பப்பிளிகேஷன் ஆகியவற்றின் யாழ். மாவட்ட முகவர்)

ஸ்ரீகரன் புக் சென்ரர்

புதிய கட்சேரியடி கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். — ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.

2010ஆம் ஆண்டு கலண்டர்கள், டயறிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகின்றன. 30 ஆண்டுகாலமாக சுன்னாகத்தில் சிறப்பாக சேவையாற்றுவோர்

துர்க்கா பொத்தகச் சோலை

பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம். தொ.பே. 021 2240267

50 வரு பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
புத்தகங்களுக்கு 10% - 40% வரையான விசேட விலைக் கழிவு.
1959 முதல் கடந்த 50 வருடங்களாக ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை கல்விக்கு வழிகாட்டி கல்வி வித்தகர்களை உருவாக்கிய ஒரே ஸ்தாபனம்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

சிறுவர் நூல்கள், புலமைப் பரிசில் நூல்கள், பொது நூல்கள், பயிற்சி நூல்கள், கணனி நூல்கள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் இலக்கிய நூல்கள் யாவையும் மலிவு விலையில் பெற்றிட

அன்னை புத்தகசாலை

நவீன சந்தைக் கட்டடம் இல[illegible] ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே 021 222 9881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு

Oriendal Aquarium. (Multy farm)

வளர்ப்புக் கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மீன் தொட்டி உபகரணங்கள், வளர்ப்பின் செல்லப் பிராணிகள், பூக்கன்றுகள், பூச்சாடிகள் என்பனவற்றை மிகக்குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

*வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு.

தொடர்புகளுக்கு: **மல்லி பாம்,**
61, இராமநாதன் வீதி (நாச்சிமார் கோயில் முன் வீதி), யாழ்ப்பாணம்.
தொ.பே.எண்:021-7912997, 077-5397035.

(பி/562666)

மானிப்பாய் இந்துக்கல்லூரி
நூற்றாண்டுவிழா 2010 ஆம் ஆண்டு

1. 2010 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் திகதி நடைபெறவுள்ள நூற்றாண்டு விழா தொடர்பான பழைய மாணவர்களிடமிருந்து தகவல்கள் கோரப்படுகின்றன.
2. பழைய மாணவர் பற்றிய விவரம்
   1. பெயர்
   2. விலாசம்
   3. கல்வி கற்ற காலப்பகுதி
   4. தற்போதைய தொழில்
   5. கல்லூரிக் காலத்தில் உங்கள் சாதனைகளுடன் (2.5 cm, 3.5cm புகைப்படம்)
3. நூற்றாண்டு விழா மலருக்கான கல்லூரி தொடர்பாகவுள்ள புகைப்படம் உள்ளிட்ட சான்றுகள் என்பன மற்றும் ஆவணங்கள்.

குறிப்பு: உங்கள் தகவல்களை செயலாளரின் முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

E.mail : mani hindu @ yhoo.com
T.P :021 222 2658

செயலாளர்
எஸ்.விவேகானந்தராஜா
சோதிவேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.
0217912452

தலைவர்
திரு.எஸ்.கே. உதயசூரியர்
0213210232

(பி/562723)

தொழில் பயிற்சிக்கான புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம்,நவ.29

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் உலக வங்கியின் அனுசரணையுடன் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கும், தற்போது ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கும் தொழிற்பயிற்சி தொடர்பான புலமைப் பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பயிற்சிக் கட்டணம், அச்சிடப்பட்ட பாட விதானம், பரீட்சைக் கட்டணங்கள் என்பன உள்ளடக்கியதாக புலமைப் பரிசில் வழங்கப் படும்.

இப்புலமைப் பரிசில் பெறுவதற்காக ஒவ் வொரு வலயத்திலிருந்தும் 50 - 80 பேர் வரை யான் மாணவர்கள் தெரிவு செய்து அனுப்ப வேண்டும் என மாகாணக் கல்வித் திணைக் களத்தால் கோரப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப்படிவமும் மேலதிக விவரங்க ளும் வலயக் கல்விக் காரியாலயங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது. (50-267)

மாலை 6 மணியுடன் மூடப்படும் சித்தன்கேணி எரிபொருள் நிலையம்

யாழ்ப்பாணம்,நவ.29

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சித்தன்கேணியில் அமைந் துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மாலை ஆறு மணியுடன் பூட்டப்படுவதால் பாவ னையாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்ற னர்.

மாலை வேளையில் பல தரப்பட்ட அலு வலர்களும், ஏனைய தொழிலாளர்களும் தத்தமது வேலைகள் முடிவடைந்து வீடு செல்லும் போதே எரிபொருளை நிரப்பிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய எரி பொருள் விற்பனை நிலையங்கள் இரவு எட்டு மணிவரை திறந்திருக்கின்ற போதும் இவ்எரிபொருள் நிரப்பு நிலையம் மட்டும் நேரத்துடனேயே பூட்டப்படுவதால் பாவ னையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கின்றனர்.

வர்த்தக நிலையங்களில் பெற்றோல் விற்பனை தடை செய்யப்பட்டு இருப்ப தால் பாவனையாளர்களின் நன்மை கருதி ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்க ளின் வேலை நேரத் தைப்போல சங் கானை பலநோக் குக் கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையமும் செயற் பட வேண்டும் எனப் பாவனையா ளர்கள் கோருகின் றனர். (50-93)

Study & Work ABROAD

UK, USA, CANADA
AUSTRALIA
NEWZEALAND
MALAYSIA &
SINGAPORE

Jan/Feb 2010 INTAKE

யாருக்கெல்லாம்.....
பாடசாலை மாணவர்கள்
O/L தகமை மாத்திரம் உள்ளவர்கள்
A/L பரீட்சைக்கு தோற்றியவர்கள்
வெளிநாட்டு உயர்கல்வியை எதிர்பார்ப்பவர்கள்

M.B.B.S,MD
குறைந்த செலவில்
Be a Doctor After "O" Levels
In East European Countries

- மாணவர்களுக்கு சரியான பாடநெறி தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்
- Sponsor நிதி உதவி ஆலோசனைகள்
- Airport pick up & Accomondation arrangment

நிராகரிக்கப்பட்ட விசாக்கள் தொடர்பில் Appeal லுக்கான ஆலோசனைகள் புதிதாக விண்ணப்பபடிவங்களை சமர்ப்பித்தல் தொடர்பான முறையில் நிபுணத்துவம் மிக்கவர்களால் ஆலோசனை வழங்கப்படும்
உயர்கல்வியை வெளிநாடுகளில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகளையும் பெற்றுக்கொள்ளலாம்

MMW

SIGMA
International Studies & Consultants

302, Temple Road, Nallur, Jaffna.
Tel-021 7451400, Kannan-0772 449379,E-mail- sigma.isc@gmail.com
Head Office: 401 1/1, 1st Floor, Galle Road, Colombo - 04.Tel - 0114 899833

VCare HAIR LOSS CLINIC

The first and only professional trichology centre in Sri Lanka.

Dr. Hair

இங்கு ஆண், பெண் இருபாலாருக்குமான வழுக்கை, தலைமுடி உதிர்தல், இளநரை, சொரியாஸிஸ் Alopecia, Tenia capitaptas, Ring worm போன்ற பிரச்சினைகளுக்கு Trichologist களின் ஆலோசனைப்படி சிகிச்சையளிக்கப்படுகின்றது.

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை நிபுணரைக் கொண்டு இயங்கும் ஒரே ஒரு சிகிச்சை நிலையம்.

Dr. Slim

இப்பிரிவில் அளவிற்கு அதிகமான உடற் பருமன் (Obesity) குறிப்பிட்ட இடத்தில் மட்டும் காணப் படும் மேலதிக கொழுப்பு, தசைகள் போன்ற பிரச்சினைகளுக்கு உணவுகட்டுப்பாடு மற்றும் போசாக்கு நிபுணர் இணைந்து ஏனைய மருத்துவர்கள் கண்காணிப்பில் மிகச்சிறப்பான சிகிச்சை யளிக்கப்படுகின்றது.

45 நாட்களில் 6-7 Kg வரை குறைக்கமுடியும்.

Dr. Skin

பல காரணங்களால் உருவாகும் முகப்பரு மற்றும் தழும்புகளுக்கும் சருமவியல் நிபுணர்களால் முற்றுமுழுதாக குணமாக்கப் படும்.

யாழ். மக்களுக்காக காலை 9.00 — 6.00 வரை
தமிழ் மொழிமூலம் இலவச ஆலோசனை
பெற்றுக்கொள்ள 011 — 2676676

யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Post Graduate Diploma in Management (Pre.MBA) (MBA final (Topup) in UK / London) காலம் 9 மாதங்கள்
To Whom :பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

Diploma in English 100 % வெற்றி
100 % பயிற்சி **Advanced Diploma in English** காலம் 6 மாதங்கள்
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

அதிக வருவாய் தரும் வேலைவாய்ப்பு **Foundation Diploma In Nursing (Health & Social Care) Topup degree in UK / London** காலம் 6 மாதங்கள்
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

Foundation Diploma In Hospitality Management (Topup degree in UK / London)
காலம் 6 மாதங்கள் Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது. மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

Access Programming (Foundation Degree Programme) காலம் 6 மாதங்கள்
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தவரது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

Foundation Diploma in Management காலம் 6 மாதங்கள்
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் ஆற்றலை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor,
No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(அரியகுலசுச்சந்திக்கு அருகாமையில்)
(கொ/) Hotel மேலே)
Tel :021 2224550 E-mail: info@bchs.lk
HotLines: 0773501499
0777222422/ 0714299935

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org